www.padippakam.com


# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

ஒரு சமூகம் நியாயங்களின் அடித்தளத்தில் தான் சுதந்திரத்தைத் தேடுதல் வேண்டும், அழிவுகள் சிதைவுகளில் இருந்தல்ல!

தனிச்சுற்றுக்கு மட்டும்

வெளியீடு 04 | 01 மே 2000 | அன்பளிப்பு ரூபா 10.00


# ஆனையிறவுக்குப் பின் அரசியல், இராணுவ நெருக்கடி

ஆனையிறவிலிருந்து இலங்கை இராணுவம் பின்வாங்கியதைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல். இராணுவச் சூழ்நிலை பாரிய மாற்றத்தை அடைந்துவிட்டதென்றே கூறவேண்டும்.

யுத்தம், அரசியல் தீர்வு ஆகிய இரு விடயங்களிலும் தீர்க்கமான, நிதானமான முடிவை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.



சில சிங்கள தீவிரவாத அமைப்புக்களும். சில சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளும் சிங்கள இனவாத உணர்ச்சிகளிலிருந்தே



செய்திகளை வெளியிடுகின்றன. புலிகளின் செய்திகளும் தமிழினவாத உணர்ச்சிகளைக் கிளப்பிவிடும் நோக்கம் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

ஆனால் இவையெதுவும் நல்ல முடிவுகளுக்கு நாட்டை இட்டுச் செல்வனவாக அமையமாட்டா. யுத்தகளத்தில் ஏற்படும் தற்காலிக ஏற்ற இறக்கங்களுக்கு நிதானமான அரசியல் உணர்வுகள் பலியாகிவிடக்கூடாது.

தற்போது பூதாகாரம் கொண்டு நிற்கும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதும், தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வினை விரைவாக நடைமுறைப்படுத்துவதுமே இன்றைய அவசிய மற்றும் அவசர தேவைகளாக உள்ளன. இதற்காக சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்ளுவதிலும் அரசு தீவிரம் காட்டுதல் வேண்டும்.

இந்த முயற்சிகள் இப்போதே மேற்கொள்ளப்படாவிட்டால் கண்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## புத்தாயிரமாம் ஆண்டின் முதல் மே தினம்

**தொழிலாளர் இரத்தம் சிந்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத் தினத்தில் தமிழ், முஸ்லீம், மலையக மக்களுக்கு அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதற்காகவும், இனங்களின் சமத்துவமான ஐக்கியத்துடன் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும், யுத்தத்தினால் அழிந்துபோன எமது மக்களின் வாழ்வை நிர்மாணிப்பதற்கும், மக்களின் வாழ்வில் அழிவுக்குப் பதிலாக ஆக்கத்தைப் பிரதியீடு செய்வதற்கும் உறுதி கொள்வோம்.**

## அதிரடிப்படையினர் மக்கள் மீது தாக்குதல்

25.04.2000 இல் மட்டக்களப்பு கிரான்குளம் விஷேட அதிரடிப்படையினர் மக்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்கள் சினத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய மிலேச்சத்தனமான தாக்குதல்களே கடந்த பல ஆண்டுகளில் எமது சமூகத்தில் இருந்து ஆயுதப் போராட்டம் ஏற்பட வழிவகுத்தது.

வன்முறைகள் எப்போதும் தாமாக உருவாகுவதில்லை. இத்தகைய சம்பவங்கள்தான் அதற்குக் காரணமாக அமைகின்றன.

கிரான் தாக்குதல் சம்பவத்தில் 200க்கும் மேற்பட்ட ஆண்களும் 35க்கு மேற்பட்ட பெண்களும் தாக்குதலுக்கு இலக்காகினர். இதில் நோயாளிகள், உத்தி யோகத்தர்கள், சமூகப்பெரியார்கள். மதகுருமார்கள், கர்ப்பிணித் தாய்மார்களும் அடக்கம். இவர்களில் பலர் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் க்கப்பட்டனர்.

இவ்வாறு மோசமான தாக்குதல்களுக்கு உள்ளான பலர் காயங்களுடனும், எலும்பு முறிந்த நிலையிலும் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையிலும், ஆரயம்பதி கிராம வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் ஒரு சிறு உதாரணமே. இது போன்ற சம்பவங்கள் மட்டக்களப்பில் பரவலாக நடைபெற்று வருகின்றன.

இவற்றில் ஈடுபடுவோரை இடமாற்றி விடுவது மாத்திரம் பரிகாரமாகாது. இத்தகையச் செயல்களில் ஈடுபடுவோரும் இதற்குமேல் பெரிதாக ஒன்றும் நடைபெறாது என்ற துணிச்சலிலேயே இவ்வாறு நடந்துக் கொள்கிறார்கள்.

இத்தகையச் செயல்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவதும், சட்டத்தின் முன் நிறுத்தப் படுவதும்

## மர்மக்கொலைகள், ஆட்கடத்தல் சூத்திரதாரி யார்?

மன்னார் தீவுப்பகுதியில் அண்மைக் காலத்தில் நடைபெற்றுவரும் மர்மக் கொலைகள், ஆட்கடத்தல்கள் போன்ற மனித உரிமை மீறல்கள் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது.

மன்னார் தீவுப் பகுதி அரச கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், இங்கே சிவில் நிர்வாகம் நடைபெறுவதாகவும் கூறப்பட்டாலும் இச்சம்பவங்கள் இப் பகுதிகளிலேயே நடைபெறுகின்றன.

இத்தனைக்கும் இராணுவம், பொலிஸ், தமிழ் கட்சிகளின் காரியாலயங்கள் செயற்படும் பகுதிகளிலேயே இத்தகைய மனித உரிமை மீறல்கள் அதிகளவில் இடம் பெறுகின்றன.

மர்மக் கொலைகளுக்கு அனைவருமே மௌனம் சாதிக்கின்றார்கள். யார் யாரைக் கொலை செய்கிறார்கள் என்ற கேள்விக்கே விடைதேட அஞ்சும் மக்கள் தம்

போதும் என்ற உணர்வுடன் இரவானால் வீட்டினுள் முடங்கி விடுகின்றனர்.

யுத்தம் காரணமாக வன்னிப் பகுதியில் இடம்பெயர்ந்து வரும் மக்களின் தொகை அதிகமாக இருந்தாலும் தீவுப் பகுதிக்கு வரும் யாவரும் படையினரின் அனுமதிப் பத்திரம் பெற்றே உள்வாங்கப்படுகிறார்கள். இதற்கு மேலாக மன்னார் நகரப் பகுதி அடிக்கடி படையினரின் சுற்றிவளைப்புக்கு உள்ளாகி சந்தேகத்துக்குரியவர்கள் கைது செய்யப்பட்டும் வருகிறார்கள். நிலைமை இப்படி இருக்கையில் இந்த மர்மக் கொலைகள், மர்மக் கடத்தல்கள் ஏன் நடத்தப்படுகின்றன யாரால் என்ற விடயம் மக்களுக்குப் புரியாத புதிராகவே உள்ளன.

இப்படியான அச்சத்தை ஏற்படுத்தும் செயல்களால் சாதாரண மக்களின் மனங்கள் பீதியில் உறைந்து விடுவதால் மக்களின் அன்றாட செயற்பாடுகள் நடமாட்டங்கள்

தேவாலயங்கள், பள்ளிவாசல்களுக்கு வழிபாடுகளுக்குச் செல்வோர், மாணவர்கள் எந்தவித அச்ச உணர்வும் இன்றி சுதந்திரமாக நடமாடக்கூடிய ஒரு சமூக நிலையை உருவாக்குவதன் மூலம்தான் யுத்தக் கெடுபிடிகளுக்கு மத்தியில் வாழுகின்ற மக்களுக்கு எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையை உருவாக்க முடியும்.

இந்த நிலையை ஏற்படுத்துவதாயின் இருக்கக் கூடிய அரசியல் கட்சிகள், பிரஜைகள் குழுக்கள், மதத் தலைவர்கள், சமூகசேவை அமைப்புக்கள், சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிசார் நடைபெறுகின்ற மர்மக் கொலைகளையும் ஆட்கடத்தல்களையும் எந்தவித தயவு தாட்சண்யமுமின்றி கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலமே கொலைகளையும் ஆட்கடத்தல்களையும் தடுத்து நிறுத்தி மக்களுக்குச் சுமூகமான, அமைதியான வாழ்க்கையை ஏற்படுத்த முடியும் என

படிப்பகம்

www.padippakam.com



# ஆனையிறவுக்கு....

01ம் பக்கம் தொடர்ச்சி

கெட்டபின் சூரிய நமஸ்காரமாகத் தான் முடியும்.

ஆனால் இதே சூழலை இதே இயல்புகளுடன் இப்படியே இழுத்துச் செல்லும் போக்கே புலிகளிடமும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியிலும் மேலோங்கிக் காணப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இலங்கையில் நிலவுகின்ற அரசியல் யுத்த நெருக்கடிகளுக்கு தீர்வு என்ன என்பதை விட தனது அன்றாட அரசியலுக்கு இன்றைய நிலைமைகளை எப்படிப் பாவிப்பது என்பதிலேயே அக்கறைக் காட்டிவருகிறார்.

ஒருபுறம் புலிகளுடன் பேச்சு வார்த்தை என்பார் மறுபுறம் ஆனையிறவு தாக்கப்பட்டதன் மூலம் பேரம் பேசும் அரசின் ஆற்றல் குறைந்து விட்டதென்கிறார்.

தமிழ் மக்களுக்கு தாம் எத்தகைய அதிகாரங்கள் வழங்க இருப்பதாக தமிழக முதல்வர் கருணாநிதிக்கு விளங்கப்படுத்துகிறார் என்று எமக்குப் புரியவில்லை. இங்கு அது பற்றி வாய்திறக்கிறார் இல்லை.

இப்போது ஆனையிறவில் என்ன நடந்ததென்பதை பாராளுமன்றத்தைக் கூட்டி அரசு விளங்க வைக்க வேண்டுமென்கிறார். பத்திரிகையாளர்களை தணிக்கை விதிகளை மீற வேண்டுமென்கிறார்.

எல்லாவற்றிலும் தமக்கு பிரயோசனமாக ஏதாவது இருக்கிறதா என்பதைத் தேடுவதிலேயே அவர் குறியாக இருக்கிறார். ஆனையிறவில் நடந்ததென்ன என்பதையும், அரசின் அரசியல், இராணுவ நிலையின் அடுத்த கட்டம் என்ன எனபதையும் நாட்டு மக்களுக்குச் சொல்வதற்கு உருப்படியான அரசியல் தலைவர்கள் இல்லாமல் போனது மிகவும் துரதிஷ்டமாகும்

அவை இராணுவ முப்படை தளபதிகளால் விளங்கப்படுத்தப்படும் நிலைதான் காணப்பட்டது. மற்றப்படி ஜனாதிபதியோ, பாதுகாப்புப் பிரதியமைச்சரோ அல்லது வேறொரு பிரதானமான அமைச்சர் எவருமே தொலைக்காட்சியிலோ, வானொலியிலோ தோன்றி மக்களுக்கு எதுவும் தெரியப்படுத்தவில்லை. அரசு இருக்கிறதா இல்லையா என்ற நிலை நிலவுகிறது.

அரசு மற்றும் பிரதான எதிர்கட்சிகளின் இத்தகைய போக்குகள் சிங்கள மக்கள் மத்தியில் சற்று விசனத்தை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது ஆனையிறவுப் பின்னடைவு மற்றும் பாதிக்கப்பட்ட இராணுவ வீராகளுக்கான நலன்கள் என்பனவே முதன்மை பெற்ற விடயங்களாக இருக்கின்றன. ஆனால் பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கும் மக்களைப் பற்றி இதற்கான அடிப்படை அரசியற் காரணங்கள் பற்றியோ யாரும் பேசுவதில்லை. மாறாக யுத்தகள் வெற்றி தோல்வி பற்றிய பேச்சுக்களும் தடுமாற்றங்களுமே மேலோங்கி நிற்கின்றன.

பிரச்சினைகளுக்கான வேர்களை விட்டுவிட்டு நுனிப்புல் மேய்வதால்தான் பிரச்சினை பூதாகரமாக உருவம் பெறுகிறது.

அரசியல் தீர்வே ஒரேவழி என இராணுவத் தளபதி தெரிவித் திருப்பதும் ஒரு முக்கியமான விடயமாகும். அதனை காண்பதற்கான வழி வகைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். அல்லாமல் எந்த இனத்தின் தோல்வி வெற்றி என்ற கோளாறுகள் தலைகளுக்குள் இருக்குமானால் பிரச்சினை மேலும் மேலும் சிக்கலாகவே போகும்.

எனவே சமாதானத்திற்கான ஒரு துரும்பளவு வாய்ப்பு இருந்தால் கூட அதனைப் பயன்படுத்த வேண்டும். எந்த சக்தி எதிர்த்தாலும் அதிகாரப் பகிர்வுக்காக இடையறாது முயல வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் விடிவு ஏற்படும்.

# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்

## மேதின வேண்டுகோள்

### துண்டுப்பிரசுரத்தில் இருந்து ஒரு பகுதி

தொழிலாளர்களின் எட்டுமணி நேர வேலை உரிமைக்கான குரலை எழுப்பி இரத்தம் சிந்திய இந்த சர்வதேச தினத்தில் உரிமைகளை மாத்திரமல்ல தமது இருப்புக்கான அத்தனை அம்சங்களையும் இழந்து, பேரவலத்தின் பிடியில் சிக்கியுள்ள தமிழ் மக்கள் உறுதியான எதிர்காலம் குறித்து தீவிரமாக சிந்தித்து முடிவுக்கு வருவதும், திட உறுதியுடன் செயற்படுவதுவும் முக்கியமான தேவைகளாகும்.

☆ வடகிழக்கில் தீவிரமடைந்திருக்கும் யுத்த நிலை எஞ்சியுள்ள முழுத்தமிழ் மக்களையும் அகதிகளாக இடம் பெயர்வதற்கான நிலைமைகளை அதிகரிக்கச் செய்துள்ளன.

☆ தற்போது தீவிரமடைந்திருக்கும் யுத்த நிலைமைகளில் அகதிகளுக்கான உணவு இருப்பிடம் என்பன பற்றி கவனிப்பாரற்றுப்போயுள்ளன.

முழுத் தமிழ்ச் சமூகமும் உணவுக்கும், இருப்பிடத்திற்கும் யாரிலாவது சார்ந்து நிற்றல் என்ற அபாய நிலைக்கான சாத்தியப்பாடுகள் அதிகரித்துள்ளன.

சாதாரண ஒரு மனிதனின் வாழ்க்கைச் செலவை விட இலங்கையில் தமிழனாகப் பிறந்தவனுக்கு மூன்று நான்கு மடங்கு பெரும் செலவு ஏற்படுவதோடு அவமதிப்புக்கள், உடல் ரீதியான தாக்குதல்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதிகாலை எழும்பும் தமிழர்கள் ஆக்கப்பூர்வமான காரியங்களை செய்வ தென்பதைவிட தமது பாதுகாப்பு, போக்குவரத்து, இருப்பிடத்திற்கான வழிவகைகளைத்தேட வேண்டிய நிலையிலேயே உள்ளனர். இந்த நிலை வெவ்வேறு அளவுகளில் மலையக மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் கூட பொருந்துவனவாகவே உள்ளன.

யுத்தமுனையில் அங்கவீனர் ஆனவர்களும், அங்கிருந்து வரும் சவப்பெட்டிகளும் தெற்கின் சிங்கள மக்களுக்கும் பெரும் மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளன. யுத்த சூழ்நிலையிலான விஷம் போன்ற விலைவாசியேற்றம் இலங்கையின் சகல இனங்களையுமே பெரும் சுமையாக அழுத்தியிருக்கின்றன. இந்தப் பொறியிலிருந்து எப்போது விடுபடுவோம் என்ற அங்கலாய்ப்பே சகல மக்களின் மனங்களிலும் பிரவாகித்து நிற்கிறது.

இந்த முறை புது வருடப் பிறப்புக கொண்டாட்டம் கூட சோபிக்கவில்லை. மக்கள் மகிழ்ச்சியாக இருக்கக் கூடாதென்பதே யுத்தப்பிரபுக்களின் தேவையாக உள்ளது.

அரச சேவைத்துறையிலுள்ள மாதச் சம்பளம் பெறுவோரும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களும், சிப்பந்திகளும் வாழ்க்கைச் செலவைத்தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் உள்ளார்கள்.

யுத்தத்தை வைத்து பிழைப்பு நடத்தும் உள்ளூர்தரகர்களும், இதனை ஒரு குதிரைப் பந்தயம் போல் அவதானிக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும், யுத்தத்தின் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தமது சுய வாழ்வை வளமாக்கி சுகபோகமாக வாழும் ஒரு பிரிவினரும் இந்த யுத்தத்தைப் பேணிப்பாதுகாக்கின்றனர். வடகிழக்கின் சாதாரண குடும்பங்களின் இளைஞர், யுவதிகள், சிறுவர், சிறுமியரின் மரணங்களிலும், தெற்கின் ஏழை விவசாயிகளின் பிள்ளைகளின் மரணங்களிலும் இவர்கள் குளிர்காய்கிறார்கள். யுத்தத்தின் கொடூரத்தையும், ரணங்களையும், சிறைகளையும், வறுமையையும் தமது வாழ்க்கையில் கண்டிராத, குளிரூட்டிய அறைகளில் வாழும் நீலம் பாரித்த உடம்புக்காரர்களுக் கெல்லாம் இந்த யுத்தம் சுகங்களையே தருகின்றது.

யுத்தம் உக்கிரமடையும்போது சாதாரண மக்களுக்கு எந்த முக்கியத்துவமும் அற்றுப் போகிறது. யுத்தம் புரிபவர்களே அங்கு போற்றிப் புகழப்படுவார்கள். சாதாரண மக்கள் ஒரு பொருட்டில்லாமல் போய்விடுகிறார்கள்.

எனவே எமது சமூகம் நிலை நிறுத்தப்படுவதும், பேரழிவு தடுத்து நிறுத்தப் படுவதும் நாம் ஒரு சமூகமாக வாழ்வதற்கான நிலமைகள் தோற்றுவிக்கப் படுவதும் இன்று மிக மிக அவசரமாகத் தேவைப்படுவனவாகும்.

அதிகாரப் பகிர்வு, எமது பிரதேசங்களின் பாரிய புனர்நிர்மாணப் பணி, ஜனநாயகம், இனங்களுக்கிடையில் சமாதானசகோதரத்துவ வாழ்வு, ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கான பரந்துபட்ட விரிவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதில் தனிப்பட்ட அரசியல் மற்றும் இராணுவ சக்திகள் மாத்திரம் சம்பந்தப்பட முடியாது. அனைத்து அரசியற் கட்சிகளும் மற்றும் சர்வதேச, உள்ளூர் தொண்டர் ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள், மனித உரிமை அமைப்புக்கள், தன்னார்வக் குழுக்கள், பிரஜைகள் அமைப்புக்கள் என எல்லோருமே இணைந்த ஒரு பணியாகும். இப்பணியை முன்னெடுத்து செல்வதிலேயே எமது சமூகம் தன்னைத் தக்க வைத்துக் கொள்வதும், சுபிட்சப் பாதையில் அடியெடுத்து வைப்பதும் சாத்தியமாகும்.

சிதறுண்டு உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்று வாழும் இந்நாட்டு மக்கள் மீண்டும் தத்தமது பிரதேசங்களில் அச்சமின்றி மகிழ்ச்சியுடன் ஒன்றுகூடி வாழும் காலம் வரவேண்டும்.

☆ எமது பல்கலைகழகங்களும் எமது பாடசாலைகளும் தமது கீர்த்தியை மீண்டும் நிலைநாட்ட வேண்டும்.

☆ எமது மீன்பிடியும் விவசாயமும் பிரகாசிக்க வேண்டும்.


☆ புத்தாயிரமாம் ஆண்டில் உலகம் கண்டுள்ள புதிய தொழில் துறைகள், புதினங்கள் எமது பிரதேசங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

☆ இப்போது உலகெங்கும் வாழும் எம்மவர்களில் ஒரு பகுதியினர் தேடியுள்ள பொருளும், அறிவும் எமது பகுதிகளில் வேலையில்லாதவர்கள் என்றொரு பகுதியினர் இல்லையென்ற நிலையை உருவாக்க வேண்டும்.

☆ உணவு, உடை, இருப்பிடம், கல்வி, சுகாதாரம் என்பவற்றை உயர்தரத்தில் பெற்றுக் கொள்ளும் நிலை உருவாக வேண்டும். அதற்கான வாய்ப்புக்கள் எமது சமூகத்தில் உள்ளார்த்தமாக உள்ளன.

☆ எமது ஆன்மீக வழிபாட்டு இடங்களான கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகளை புதுப்பொழிவுடன் மிளிரச் செய்யும் நிலை வேண்டும்.

**நல்லதோர் எதிர்காலத்தை நோக்கி**
**நம்பிக்கையுடன் நடைபோடுவோம்**



## உரிமை

அரசியல் யாப்பு சீர் திருத்தத்தில் மலையக மக்களுக்கான உரிமைகளும் நிச்சயம் பங்கு கொள்ள வேண்டும். இம்மக்கள் திட்டமிடப்பட்டு நாடு கடத்தப்பட்டு, வாக்குரிமைகள் பறிக்கப்பட்டு, நசுக்கப்பட்டு மிகவும் நொந்து போயுள்ளனர். ஆனால் இவ்வளவு கொடுமைகள் நடந்தும் மலையக மக்கள் குறிப்பிடத்தக்கதொரு தேசிய இனமாகப் பரிணமித்துள்ளார்கள். மலையக மக்களின் நலன்களில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இப் பேச்சுவார்த்தைச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். உண்மையாக அக்கறை உள்ளவர்கள் இதில் விழிப்பாக இருக்க வேண்டும். சோரம் போகாமல் பேரம் பேச வேண்டும். வரலாற்றுத் தவறுகளுக்கும் துரோகங்களுக்கும் யாரும் துணை போகக்கூடாது.

**நாச்சிமுத்து மகேந்திரன்**
**மஸ்கெலியா.**

## நியாயம்

தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானது. பல கஷ்டமான பிரதேசங்களிலும், இக்கட்டான பாதுகாப்பற்ற சூழ்நிலைகளிலும் பல வருடக் கணக்காக எதுவித எதிர்பார்ப்புக்களுமின்றி இவர்கள் சேவை செய்துள்ளார்கள். ஆசிரியர்கள் பாதியளவு பற்றாக்குறையாக இருந்த பாடசாலைகளில்கூட இவர்களைக் கொண்டே அதிபர்கள் பாடங்களை ஓரளவு நடத்தியும் வந்துள்ளனர். மேலதிகாரிகள் சிலர் குறிப்பிடுவது போல் தகுதி இல்லாதவர்களும் உண்டு. இவர்களை நியமிக்கக் கோருவதும் எதிர்காலத்தில் கல்வி வளர்ச்சியையும் பாதிக்கலாம். அப்படி இருந்தாலும் தகுதி அடிப்படையில் இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது அவசியம். இவர்களது உண்ணாவிரதத்தின்போது வாக்குறுதிகளை அளித்த பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் உண்மையாகவே இவர்களுக்குரிய நியமனங்களைப் பெற்றுக் கொடுப்பதில் அக்கறை காட்ட வேண்டும். வடகிழக்கின் ஏனைய பிரதேசங்களில் செய்த நியமன அடிப்படையில் இவர்களுக்கும் வழங்குவதும் நியாயமானது தானே.

**செல்வி.எஸ். கமலவாணி வவுனியா.**

## திரைமறைவில்

கல்முனை தமிழ் பிரிவைத் தரம் உயர்த்தாதது சிறுபான்மை மக்களை அரசாங்கம் பாரபட்சமாக நடத்துகிறதையே காட்டுகிறது. பல வருடங்களுக்கு முன் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் நடைமுறைக்கு வராதது நிச்சயம் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைதான். தமக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலையை வைத்துக்கொண்டு இதைத் தடுக்கும் திரைமறைவுச் சக்திகளை தமிழ் மக்கள் பகிரங்கமாக அம்பலப்படுத்த வேண்டும். ஒன்றுமட்டும் உண்மை அரசியல் என்பது யாருக்கும் நிரந்தரமாகத் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டதொன்றல்ல.

**வே. தயாபரன்**
**நற்பிட்டிமுனை.**

## தீர்வு

யுத்தத்திற்கு முடிவுகட்ட இந்தியப்படையோ, ஐ.நா படையோ இலங்கைக்கு வருவது ஒருபுறமிருக்க முதலில் அரசு தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வைக்க வேண்டும். தீர்வு வைக்கப்பட்டு அது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படா விட்டால் எந்த வகையிலும் சமாதானத்தை முன்னெடுக்க முடியாது. வெறுமனே யுத்த நிறுத்தம் எனக் கூச்சல் போடுவதில் அர்த்தமில்லை. அரசானது சமாதான தீர்வை முன்வைப்பதற்கு சமாதான சக்திகள் அனைத்தும் அக்கறை காட்ட வேண்டும். தீர்வு வைக்கப்படாத யுத்தநிறுத்தமும், பேச்சுவார்த்தைகளும் நிரந்தரமில்லை. அது யுத்தம் புரிவோர் தங்களை சீர்படுத்திக்கொண்டு மீண்டும் ஆக்ரோசமாக யுத்தம் புரிவதற்கே இட்டுச் செல்லும். அரசு நியாயமான தீர்வை முன்வைத்து அதை மக்கள் ஏற்றுக்கொண்டால் யுத்தம் புரிவதன் அவசியத்தை மக்கள் தீர்ப்புக்கே விட இடமுண்டு. தீர்வை ஏற்றுக்கொள்வது திருத்தங்களைக் கொண்டு வருவது இரண்டாவது விடயம். ஆனால், நியாயமான தீர்வை வைக்க வேண்டிய முழுப்பொறுப்பும் அரசுக்கே உண்டு. இதில் அரசு தாமதங்களைச் செய்தாலோ தடுமாறினாலோ எந்தப் படை வந்து எதைச் செய்வது.

**மு. சச்சிதானந்தன்**
**யாழ்ப்பாணம்.**

## அந்நியதேசம்

மட்டக்களப்பு அம்பாறையில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள பாஸ் நடைமுறை பற்றி அரசு இன்னும் தீர்மானமான கருத்து வெளியிடவில்லை. எத்தனையோ பாரிய பாதுகாப்பு விடயங்களில் கோட்டை விடும் அரசு, மிகவும் அற்பத்தனமாக இப் பாஸ் வழக்கத்தை நடைமுறைப்படுத்த எத்தனிக்கிறது. இது அரசின் பாதுகாப்பு சிந்தனை எந்தளவுக்கு உள்ளது என்பதையே காட்டுகிறது. அம்பாறை,மட்டக்களப்பு பாஸ் நடைமுறை அமுலுக்கு வருமானால் வடகிழக்கு என்பது அந்நிய தேசம் என்பதை அரசே ஏற்படுத்திக் கொண்ட மாதிரித்தான் அமையும்.

**இராசநாயகம் ஜோசப்**
**மட்டக்களப்பு.**

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

37/2, 1/1, Wimalasara Road,
Kalubowila, Dehiwala.

E.P.I.C., Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738,
London - Wcix - 3NN,
U.K.

P - Fach No: 506,
Bern - 17,
Switzerland.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022

29A, வாவிக்கரை வீதி-1
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 1/1 நெவில் வீதி
திருகோணமலை.
☎ 026 24221

B30, யூ.சி. குவாட்டஸ்
குருமண் காடு,
வவுனியா.
☎ 024 23102

சென் செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32370

மின் அஞ்சல் முகவரி (E-Mail Addresses)
epiclondon@gn.apc.org - London

படிப்பகம்

www.padippakam.com



# திருமலை இசை நிகழ்ச்சி குண்டு வெடிப்பு

சக்தி தொலைக்காட்சி நிலையத்தினர் திருமலையில் வருடப்பிறப்புக்கு முந்திய தினத்தில் நிகழ்த்திய இசை நிகழ்ச்சியில் குண்டு வெடித்ததில் 7பேர் பலியாகி உள்ளனர். மக்கள் இசை நிகழ்ச்சிகளுக்குப் போகக் கூடாது, மினி சினிமாக்களுக்குப் போகக்கூடாது, கலைஞர்கள் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்தக் கூடாது என்ற ஒரு பாசிசப் போக்கு எமது சமூகத்தில் வேர் விட்டுக் கிளை பரப்பியுள்ளது.

இவை போராட்ட உணர்வை மழுங்கடித்து விடும் என்றும், சமூகத்தின் ஒழுக்கத்தைச் சீரழித்துவிடும் என்றும் சில பத்திரிகைகளும் கூறி வருகின்றன.

மாணவர்கள் இளைஞர்கள் மத்தியில் வன்முறை, குடிப்பழக்கம், பாலியல் சேஷ்டைகள் உருவாகி வருவதற்கும் இவற்றைக் காரணமாகக் கூறப்படுகிறது. உண்மையில் எமது சமூகத்தில் உருவாகிய சகோதரப் படுகொலைகளும், ஆகக் குறைந்த பட்சம் துப்பாக்கிப் பிரயோகம் என்று தமிழர் அரசியல் சமூக அரங்கில் ஆதிக்கம் செலுத்துகையில் வன்முறைகளுக்கு வேறு காரணங்களைத் தேடுவது ஆச்சரியமாக இருக்கிறது.

அன்றாடம் அதிர்ச்சி தரக்கூடிய விதமாக மரணித்துப் போகிறவர்கள் எல்லாம் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டவர்களாகப்போக இவைபற்றி இந்தப் பத்திரிகைகள் மௌனம் காக்கின்றன.

ஆனால் மாணவர்கள் இளைஞர்கள் மத்தியில் உருவாகியிருக்கும் வன்முறை உணர்வுகளுக்கு வேறு காரணங்களைத் தேடுகிறார்கள். இசையை ரசிப்பதும், பாட்டும் கூத்தும் என்பது எமது பாரம்பரிய கலாச்சாரத்தில் இருந்து வருகின்றன.

எல்லாப் பாடல்களும், சினிமாக்களும், இசைகளும் அழிவைப்பற்றியதாகவோ சுயபச்சாதாபம் கொண்டவையாகவோ இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

திருமலைச் சம்பவத்திற்கு சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன் அம்பாறை மாவட்டம் காரைதீவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் கலைஞர்களும் பொதுமக்களும் கொல்லப்பட்டதை யாரும் அறியாதவர் இல்லை.

அச்சம்பவத்தில் பாடல் இசைக்க வந்த பாடசாலை மாணவர் ஒருவர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர். பல கலைஞர்கள் பொதுமக்கள் இன்னும் உடல் நிலை தேறவில்லை.

தென்னிலங்கையில் அனோஜா வீரசிங்க, ருக்கந்த குணதிலக, ஆகிய கலைஞர்கள் தாக்கப்பட்ட போது விடயம் பத்திரிகைகளில் எத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றது.

ஆனால், இத் திருமலைச் சம்பவம் சாதாரண விடயம் போலாகி விட்டது. 1974 ஜனவரி 10தமிழாராய்ச்சி மாநாட்டில் 9 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இன்னும் தமிழர் வரலாற்றில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

ஆனால், இன்று ஒரு இசை நிகழ்ச்சியில் குண்டு வெடித்து 9பேர் மரணித்து, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தது என்பது சாதாரண செய்தி. அந்த அளவுக்கு மனித உயிர்கள் மலினப்படுத்தப்பட்டிருக்கின்றன.

சில சக்திகளால் வடக்கு கிழக்கு பகுதி யுத்தத்திற்கு ஆள் திரட்டும் களமாகவே பார்க்கப்படுகிறது. இங்கு அபிவிருத்திகளோ, வேலைவாய்ப்புக்களோ, பொழுதுபோக்குகளோ இருக்கக்கூடாது என்பதே இச் சக்திகளின் எண்ணப்பாடாகும்.

மக்களின் சிறுசிறு சந்தோசங்கள் கூட இச்சக்திகளைச் சினம் கொள்ள வைக்கிறது. கலையிலக்கியம் சினிமா மற்றும் பொழுதுபோக்குச் சாதனங்கள் தொடர்பாக வெளிப்படையான திறந்த மனத்துடனான ஒரு போக்கு இருப்பதை இச் சக்திகள் விரும்பவில்லை.

சமூகத்தின் சகல துறைகளும் இச்சக்திகளின் கண்காணிப்புக்குள்ளாகி இருக்கிறன. இவற்றிற்கு ஒத்துப்போகாதவை எனக் கருதப்படும் விடயங்கள் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

உள்ளூரில் மாத்திரமல்ல சர்வதேச அளவிலும் இவை நடைபெறுகின்றன. சமூகத்தில் ஆதிக்கம் வகிக்கும் சக்திகளைத் தவிர வேறு எவரும் பொது நிகழ்ச்சிகள் எதையும் நடத்தக் கூடாது என்பதே அது.

உண்மையில் இது எமது சமூகத்தின் மீது கவிந்திருக்கும் பாசிசத்தின் நிழலாகும்.

இதனைப் புரிந்துகொண்டு சமூகத்தின் சகல துறைகளிலும் ஜனநாயகத்திற்கான இயக்கம் முன்னெடுக்கப் படாவிட்டால் அது ஒரு கலாச்சாரப் பாலைவனமாகிவிடும்.

ஏற்கனவே கணிசமான அளவுக்கு அந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மக்களின் விருப்பங்களை ஜனநாயக முறைகளில் எதிர்கொள்ளத் தயார் இல்லாதவர்கள் வன்முறை மூலமாக மக்களின் உணர்வுகளை நசுக்குகிறார்கள். கடந்த 20வருடங்களில் இந்த போக்கு பாரதூரமாக வளர்ச்சியடைந்துள்ளது.

திருமலையில் பலியானவர்கள் மனிதர்களுக்கே உரிய இயல்பான உணர்வுகளைக் கொண்டிருந்ததற்காகப் பலி கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு எமது அஞ்சலிகள்!

—சிவம்—

# மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும்........

“முஸ்லிம் மக்களைப் பெருவாரியாகக் கொண்ட கல்முனைப் பிராந்தியத்தில் முஸ்லீம்களோடு தமிழ் மக்கள் ஒற்றுமையாகவும், புரிந்துணர்வுடனும் வாழ முடியாவிட்டால், பரந்த வடகிழக்கில் தமிழ் மக்களோடு முஸ்லீம் மக்கள் அச்சமின்றி வாழ முடியுமா?” இவ்வாறு கல்முனை முஸ்லிம் மக்கள் மத்தியில் பேசப்படுவதாகக் கூறப்படுகிறது.

இன்னுமொரு பக்கத்தில் “நியாயபூர்வமான எமது உரிமைகளை முஸ்லிம் சகோதரர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அல்லது மறுத்தால் அவர்கள் எதிர்பார்க்கும் தனியலகுக் கோரிக்கையான தென்கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மைத் தமிழர்களாகிய நாம் எப்படி நிம்மதியாக வாழ முடியும்” என்றும் தமிழ் மக்கள் மத்தியிலும் பேசப்படுகிறது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசப் பகுதிகளிலிருந்து முஸ்லிம் மக்களுக்கென ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை மத்தி, போன்ற பிரதேசச் செயலகப் பிரிவுகள் உருவாக்கப்பட்டபோது அங்கு எந்தவொரு சமூகத்திலிருந்தும் ஆட்சேபனைகள் வெளிவரவில்லை. ஆனால், இப்பிரிவுகளை விட அதிகமான சனத்தொகை, நிலப்பரப்பு, கிராமசேவகர்கள் பிரிவுகளைக் கொண்ட கல்முனைத் தமிழ் பகுதியைத் தரமுயர்த்தக் கோரியபோது இவ்விதமான அர்த்தமற்ற சர்ச்சைகள் உருவாகுவது மிகவும் மனவேதனையைத் தருகிறது. என அம்பாறை மாவட்ட தமிழர் மகாசபையும் தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

கடந்த 11வருடங்களுக்கு முன்பே இச்செயலகத்தைத் தரமுயர்த்த அமைச்சரவைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, பல ஆணைக்குழுக்கள் முன் அலசி ஆராயப்பட்ட பின்னரும் இன்னும் இது இழுத்தடிக்கப்படுவதற்கு அப்பட்டமான காரணம் அரசியல் தலையீடுதான் எனவும் தமிழர் மகாசபை மேலும் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளது.

—வயலூரான்—

இச்செயலகத்தைத் தரமுயர்த்தக்கோரி கடந்த 20.03.2000 இல் பொதுமக்கள் பெருமளவில் பங்குகொண்ட உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெற்றிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் கட்சித் தலைவர்களும் வாக்குறுதிகளை வழங்கியதற்கமைய தொடர்ச்சியான போராட்டமும் கைவிடப்பட்டிருந்தது.

குறித்த சனத்தொகை, நிலப்பரப்புகளுக்கு ஈடாக பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தல் என்பது சட்டப்படியான மரபு. எந்த மதம் இனமாக இருந்தாலும் இது அவர்களின் அடிப்படை உரிமை.

ஏனெனில் தமது பிரதேசத்துக்குரிய அரச நிர்வாக கருமங்களையும், அபிவிருத்திகளையும் இலகுவாக மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் ஒரு நிர்வாகப் பகுப்பு முறையே பிரதேச செயலக அமைப்பாகும். இதில் வேறு எவ்வித இனக்குரோதங்களும் காழ்ப்புணர்ச்சிகளும் இருப்பதற்கு நிச்சயம் இடமில்லை.

இதில் உருவாக எத்தனிக்கும் சமூகப்பிரச்சினைகளுக்கும், பிரதேசச் செயலகக் கோரிக்கைக்கும் எது வித சம்பந்தமும் இல்லை. அப்படிக் கூறவிழைவது என்பது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதற்கு ஒப்பாகும். ●

# படித்ததும் ரசித்ததும்

அரசும் ஐ.தே.கவும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முனைப்புக் காட்டுகிறார்கள். அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பது அவர்களுக்கு தெரியும் இவற்றை விட்டுவிட்டு யுத்தத்தின் மூலம் பயங்கரவாதத்தை ஒழித்து கட்டும் வழியைப் பார்க்க வேண்டும்.

ஐலன்ட் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து.

★★★

இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது நாம் சற்று அஞ்சினோம்: பாரதீய ஜனதா தலைமையிலான ஆட்சி இலங்கைக்கு பாதகமாக இருக்குமோ என்று. ஆனால் அவர்கள் இலங்கையுடன் நல்லுறவுகளை பேணுவதிலே கவனம் செலுத்தினார்கள்.

பார் ஈஸ்ட்டேன் எக்னோமிக்ஸ் ரிவியூவில் ஜனாதிபதி சந்திரிகா

★★★

சர்வதேச நாணய நிதியத்தைக் கலைத்துவிட வேண்டும்.

ஜீ.77 மாநாட்டில் பிடல்கஸ்ரோ

★★★

நான் ஊழல் செய்ததாக ஜெயலலிதா கூறுகின்றார். அப்படி நான் செய்திருந்தால் இப்போது வழக்கு நடத்தும் கருணாநிதி அவர்கள் என்னை விட்டு வைத்திருப்பாரா?

தமிழக பத்திரிகை ஒன்றில் சேடப்பட்டி முத்தையா.

★★★

யாழ்ப்பாண மக்களுக்கு புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பற்றாக்குறையுடனான கடந்த காலம் வேண்டுமா? தற்போதைய உள்ளக கட்டமைப்பு வசதிகள் மேம்பாடுகள் வேண்டுமா என்பதை யாழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பத்திரிகையாளர்மாநாட்டில் இராணுவத் தளபதி ஜெனரல் வீரசூரியா.

★★★

உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் நடத்தினால் நான் அதற்குப் பணிய மாட்டேன்.

தொண்டர் ஆசிரியர் போராட்டம் தொடர்பாக கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன.

★★★

நெல் சந்தைப்படுத்தும் சபையை மாற்று ஏற்பாடின்றி கலைப்பதற்கு அனுமதியோம். அது விவசாயிகளைப் பாதிக்கும் நடவடிக்கை.

பாராளுமன்ற மல்பரிக்குழு உறுப்பினர்கள்.

★★★

விபச்சாரக் குற்றத்திற்காக யாராவது கைது செய்யப்பட்டால் என்னிடம் கொண்டு வாருங்கள். நான் வழிகாட்டுகின்றேன்.

களுத்துறைக்கூட்டமொன்றில் -பவித்ரா வன்னியாராச்சி-

★★★

ஜனாதிபதியின் சேர்பொன் பல்கலைக்கழக பட்டங்கள் முறையானவை. தகுதியானவை.

-பிரான்ஸ்சிற்கான இலங்கைத் தூதுவர்-

★★★

ஐ.தே.க செயலாளர் காமினி அத்துக்கோரளை ஜனாதிபதியின் தகுதி பற்றி வினவுகிறார்? அவர் தமது எஸ்.எல்.சி அத்தாட்சிப்பத்திரத்தைக் காட்ட முடியுமா?

டெயிலி நியூஸ் பத்திரிகையிலிருந்து.

★★★

இந்தியாவின் கிரிக்கட் அணிக்குள் பந்தயக்காரர்களிடமிருந்து யாரும் பணம் வாங்கவில்லை என்று யாரும் உறுதியாக கூறிவிட முடியாது.

இந்திய முன்னாள் கிரிக்கட் அணி தலைவர் கவில்தேவ்.

★★★

இந்தியா ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் நியாயமான தீர்வை ஆதரிக்கிறது. நாடு பிரிவினையை இந்தியா ஏற்காது.

-இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்-

★★★

எயிட்ஸ் நோயாளியாக நடிப்பதில் ஆத்ம திருப்தியடைகிறேன். அவர்களும் இயல்பாக மற்ற மனிதர்களுடன் வாழலாம் என்ற உணர்வு ஏற்படுகிறது.

-வாட்டர் படநாயகி நந்திதாஸ்-

★★★

அறிவார்ந்த மையத்திலிருந்துதான் ஒரு சமூகத்தின் சிந்தனைப் போக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. என்ற நம்பிக்கை தகர்க்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

உயிர் நிழலில் -சார் நிவேதிகா-

★★★

இலங்கை தனது நாட்டுக்குள்ளேயே பிரச்சினையை தீர்க்க முயலவேண்டும்.

ரணிலின் கோரிக்கை தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் “ஜஸ்வந்சிங்”

★★★

ஓயாமல் நச்சரிக்கும் வீட்டு வேலைகள் பெண்களின் ஓய்வு நேரங்களை விழுங்கிவிடுகின்றன. ஓய்வு நேரமே ஒரு சமூகத்தின் உண்மையான செல்வமாகும். ஒருவர் தமது ஆளுமையை வளர்க்கவும், ஆக்கத்திறனை விருத்தி செய்யவும், தனிமனித சமூகத் தொடர்புகளைப் பேணவும் ஓய்வு நேரம் பயன்படும். ஆனால் வேலைப்பழுவின் அதிகரிப்பினால் தனது ஓய்வு நேரங்களை இழந்துவிடுகிறாள். இதனால் பெரும்பாலான பெண்கள் தமது திறமைகளை விருத்தி செய்யாமலும், வெளிக்காட்டாமலும் வீட்டோடு அடங்கிவிடுகின்றனர். இந்நிலையில் அவர்களது தனிமனித முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் சாத்தியமாவது எவ்வாறு?

பெண்ணின் குரல்சஞ்சிகையில் -சித்திரலேகா-

படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்க ஹொலிவூட்

மேற்குலக ஆங்கிலத் திரைப்பட அரங்குகளை இப்போது ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் படம் Rules of Engagement. இது இராணுவ ரீதியான திரில்கள் நிறைந்த படம். கடந்த மாதம் முழுவதுவும் அமெரிக்கத் திரைப்பட அரங்குகளை நிறைத்து வெற்றிகரமாக நான்கு வாரங்களில் 90மில்லியன் டாலர்களை சம்பாதித்த Eric Brockovich என்னும் படம் பின்னுக்குத் தள்ளி விடப்பட்டுள்ளது.

முதலாவது வாரத்திலேயே இந்தப்படம் அமெரிக்கத் திரையரங்குகளுக்கு 15.3 மில்லியன் டாலர்களை அதாவது ஒரு திரையரங்குக்கு சராசரியாக ஒரு காட்சிக்கு 4849 அமெரிக்க டாலர்களை சேகரித்துக் கொடுத்துள்ளது. ஐந்து ஒஸ்கார் விருதுகளை வென்றெடுத்த அமெரிக்கன் பியூட்டி(American Beauty) இப்போது அமெரிக்க திரைப்பட ரசிகர்கள் மத்தியில் 10வது இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளது.



Rules of Engagement அமெரிக்கக் கடற்படையில் 30 வருடங்களாகப் பணிபுரிந்த கோ்ணல் றெஜி சைல்டெர்ஸ் (Regie Childers) என்பவரையும் அதே கடற்படை வேலைக் காலத்து நண்பரான கோ்ணல் ஹேய்ஸ் ஹொட்ஜஸ் ஆகிய இரு கதாபாத்திரங்களைப் பிரதானமாகக் கொண்டு பின்னப்பட்ட கதைச் சித்திரமே இப்படமாகும். ரெஜி சைல்டெர்ஸ் பாத்திரத்தை சாமுவேல் எல். ஜக்சனும் (Samuel.L.Jackson), ஹேய்ஸ் ஹொட்ஜெஸின்(Hays Hodges) பாத்திரத்தை ரொம்மி லீ ஜோன்ஸ் (Tommy Lee Jones) உம் நடிக்கின்றனர்.

யேமன் (Yemen) நாட்டில் இருந்த அமெரிக்கத் தூதரகத்தை யேமன் ஆர்ப்பாட்டக்காரர்கள் சூழ்ந்து கொண்ட போது அமெரிக்கத் தூதரையும் அவரது குடும்பத்தினர் மற்றும் தூதரக அதிகாரிகளையும் காப்பாற்றி மீட்பதற்காக கோ்ணல் ரெஜி சைல்டெர்ஸின் தலைமையில் ஒரு அதிரடிப்படையினர் அனுப்பப்படுகின்றனர்.

அந்த மீட்பு பணியின் போது அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த மூன்று பேர் இறக்கின்றனர். அதே வேளை யேமனைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என 80 பேர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இந்த சம்பவத்தின் விளைவாக அமெரிக்க நீதிமன்றத்தில் நிராயுதபாணிகளான மக்களை சைல்டெர்ஸ் கொலை செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் நிறுத்தப்படுகிறார்.

சைல்டெர்ஸ் இற்கு ஆதரவாக முன்னாள் கடற்படை நண்பரும் பின்னர் இராணுவ நீதிமன்ற வழக்கறிஞர் தொழில் பார்ப்பவருமான ஹேய்ஸ் ஹொட்ஜஸ் வாதாடுகிறார். கொடுக்கப்பட்ட வேலையின் போது கடைப்பிடிக்கப்படவேண்டிய நெறிமுறைகளின்படி கோ்ணல் சைல்டர்ஸ் நடந்து கொள்ளவில்லை என்பதே வழக்கு. அந்த முறைகளின்படி நடந்து கொண்டாரா? இல்லையா? என்பதுதான் திரைப்படத்தில் பின்னப்பட்டுள்ள பிரதானமான கதையம்சம்.

இதில் யேமனில் இருந்த அமெரிக்கத் தூதுவராக **"காந்தி"** திரைப்பட புகழ் பென் கிங்ஸ்லியும் அவரது மனைவியாக அனி ஆர்ச்செரும், அவுஸ்திரேலிய நடிகர் கை(G) கய் பியேர்ஸ், வழக்கைத் தொடுத்து வாதாடும் வழக்குரைஞரான மேஜர் மார்க் (B) பிக்ஸ் எனவும் தத்தமது பாத்திரங்களை சிறப்பாக நடித்துள்ளனர்.

அமெரிக்காவின் வியட்நாம் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக ஹொலிவூட் திரைப்படங்கள் பல வெளிவந்துள்ளன. பொதுவாக பெரும்பாலானவை அமெரிக்கா வியட்நாமில் விட்ட தவறுகளுக்குக் காரணம் கற்பிப்பவையாகவும் தோற்றுப் போன அமெரிக்கப் பெருமையை மீளமைக்க முயல்பவையாகவுமே அமைந்துள்ளன.

அதேபோல இந்தப் படமும் அரசியல் உள்நோக்கம் உடையதா?... அமெரிக்கா தனக்குச் சார்பான ஆட்சியாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இராணுவ ஒத்துழைப்புக்களை மேற்கொண்ட ஒவ்வொரு வேளையின் போதும் அந்தந்த நாடுகளின் சாதாரண பிரஜைகள் மீது கண்மூடித்தனமாக இராணுவக் குற்றங்களையும் மேற்கொண்டு வந்திருக்கின்றது.

இங்கும் அதேவாறாக, மேற்கொள்ளப்படுகின்ற கண்மூடித்தனமாக தாக்குதல் குற்றத்தை ஒரு குறிப்பிட்ட கடற்படை அதிகாரி தலையில் மேல் போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்வதற்கும், அமெரிக்கா எப்போதும் மனிதாபிமானத்தின்படியும் சட்டப்படியுமே நடந்து கொள்ளும் எனக் காட்டுவதற்குமான அரசியல் உள்நோக்கப் பின்னணிகளைக் கொண்ட திரைப்படமா என்னும் கேள்வி நியாயமானதே.

எவ்வாறாயினும், இராணுவத் திரில் காட்சிகளை நம்பத்தகாத ரம்போ (Rumbo) வீரப் பிரதாபங்களாக ஆக்கிவிடாமல் மிகச் சிறப்பான முறையில் படமாக்கியிருக்கிறார் என இப்படத்தின் இயக்குனர் வில்லியம் (F) பிரீட்கினை (William Friedkin) அமெரிக்க திரைப்பட விமர்சகர்கள் பாராட்டியுள்ளனர். இப்படத்தின் தயாரிப்பாளர் ரிச்சார்ட் டி சானுக் (Richard de Zanuk) எக்சோசிஸ்ட் (Exorcist), (f)பிரெஞ்ச் கனெக்சன் (French connection) போன்ற புகழ் பெற்ற திரைப்படங்களை இவ் இருவருமே இணைந்து உருவாக்கினர் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இத் திரைப்படம் யேமனில் படம் பிடிக்கப்படவில்லை என்பதுவும் சுவாரஸ்யமான விடயமாகும். மாறாக மொரோக்கோ நாட்டில் உள்ள குவார்ஸாத் என்னும் இடத்திலுள்ள அட்லஸ் (Atlas) மலைப் பகுதியிலேயே படம் பிடிக்கப்பட்டன.

அமெரிக்க தூதரக தாக்குதல் போன்ற பிரதானமான பாகங்கள் எல்லாமே மொரோக்கோ நாட்டிலேதான் படமாக்கப்பட்டன.

மொரோக்கோவில் குவார்ஸ்ஸாத் (Quarzazate) பகுதியில் பிரதான பே(B)பர் (Berber) என்ற இனத்தவர்களே பரந்து வாழ்கின்றனர். யேமன் நாட்டில் இவர்களே பெரும்பான்மையான மக்கள். அவர்களின் கட்டிடக் கலை, உடை, உடலழகு என்பன தனித்துவம் வாய்ந்தன. என்கிறார் வில்லியம் (F)ப்ரீட்கின், யேமன் நாட்டில் படம் எடுப்பதில் இருந்த சிரமத்தை அதே மொழி, கலை, கலாச்சாரம் கொண்ட மக்களையும் அதேவாறான பகுதிகளையும் கொண்ட மொரோக்கோவின் தனித்துவத்தை ஒரு கொடை என்கிறார் இயக்குனர்.



(Rules of Engagement) இற்கு அடுத்ததாக அமெரிக்கத் திரையரங்குகளை ஆக்கிரமித்து நிற்கும் படம் 28 நாட்கள் (28 Days) இருப்பினும் இப்பொழுது ஆங்கிலத் திரையரங்குகளை படிப்படியாக கைப்பற்றி வரும் புதிய திரைப்படம் அமெரிக்கன் சைக்கோ (American Phycho). முடிந்தால் அடுத்த இதழில் இது பற்றி அறிவோம்.

# மும்பாய் ெ(B)பாலிவூட்

ஹொலிவூட்டில் இருந்து சற்று விலகி இந்தியாவில் மும்பாய் சினிமாக்களை நோக்குவோம். தற்போது ஹிந்தி அறிந்த மாநிலங்களில் இளம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு நின்று கலக்கிக்கொண்டிருக்கும் திரைப்படம். **கஹோனா பியார் ஹே** (KAHONA PIYAR HAI)

இதன் அர்த்தம் **"காதல் உண்டென்று சொல்லுங்களேன்"**. இப் படத்தில் கதாநாயகன் கதாநாயகியாக ஹிர்த்திக் ரோஸானும், அமிசா பட்டேலும் புது முகங்களாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளனர். இப் படத்தின் தயாரிப்பாளரும் இயக்குனருமான ராக்கேஸ் ரோஸனின் மகனே ஹிர்த்திக் ரோஸன். ஹிர்த்திக், அமிசா ஆகியோருடன் இப்படத்தின் மற்றொரு பிரதானமான பாத்திரத்தை வகிப்பவர் அனுபவம் மிக்க சிறந்த நடிகரான அனுபம் கேர் (Anupam kher).

கஹோனா பியார் ஹே (Kahona pyar hai) திரைப்படத்தில் காணப்படும் திரைக்கதை அம்சங்களோ அல்லது காட்சிகள் தரும் விடயதானங்களோ இந்தியத் திரைப்படங்களுக்கு புதிது அல்ல. எனினும் கவர்ச்சிகரமான கதாநாயகனும், கதாநாயகியும், அவர்களின் காதல் தொடர்புகள் கொண்டு செல்லப்படும் விதமும், இந்திய இளம் உள்ளங்களின் மெல்லிய காதல் உணர்வுகளை இசைப் படுத்தி நிற்கும் வகையில் ராஜேஸ்



ரோஸான் அமைத்துள்ள இசையும் படத்தின் பாடல்களுமே இப்படத்தின் திரையரங்க வெற்றிகளுக்குக் காரணமாயுள்ளன.

வட இந்திய மாநிலங்களில், காதல் மொட்டின் முதல் இதழின் உணர்வில் நிற்கும் இளம் கன்னியர்களின் கனவுக் கண்ணனாக இப்பொழுது ஹிர்த்திக் உலாவர, அதேவேளை அரும்பு மீசை இளைஞர்களின் கனவுக் கன்னியாக அமிஷா பட்டேல் ஆதிக்கம் செலுத்துகிறார்.

கடந்த பொங்கல் தினத்தன்று இத் திரைப்படம் வெளியிடப்பட்டது. இந்த மூன்று மாத காலத்துக்குள் 50.000 இற்கு மேலான காதல் கடிதங்கள் இளம் இந்தியப் பெண் சிட்டுக்களிடமிருந்து ஹிர்த்திக் ரோஸானைச் சென்றடைந்திருப்பதாக சினிமாத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப் படத்தில் காதல், செயலூக்கமான நடிப்புக்கள் அத்துடன் ஒரு சிறு மர்மமும் இணைந்து நிற்கின்றன. போராடும் பாடகன் ரோஹித் ஆக ஹிர்த்திக் ரோஸானும் பணக்காரப் பிள்ளை சோனியாவாக அமிஷா பட்டேலும் சோனியாவின் தந்தையான சக்சேனாவாக அனுபம் ஹேரும் நடிக்கின்றனர். இப் படத்தின் வில்லன்களாக, பொலிஸ் உத்தியோகத்தர் பாத்திரத்தில் ஆஷிஸ் வித்தியார்த்தியும், மோனிஷ் பேலும் நடிக்கின்றனர். இந்த பொலிஸ். உத்தியோகத்தர்கள் சட்ட விரோத போதை மருந்து வியாபாரத்தில் ஈடுபடுவதையும் பொலிஸ் கமிஷனரை கொலை செய்வதையும் ரோஹித் நேரடியாகக் கண்டு கொள்கிறார். இந்த வில்லன்கள் ரோஹித்தை கொன்று விடுகின்றனர்.



துயரத்தைத் தாங்க முடியாத சோனியா காதலின் கொடூரமான நினைவுகளை மறப்பதற்காக நியூசிலாந்து செல்கிறாள். அங்கு ராஜ் என்னும் இளைஞனைச் சந்திக்கிறாள். ஹிர்த்திக்கே மீண்டும் அந்த ராஜ் ராஜுவும் சோனியாவும் இந்தியா திரும்புகின்றனர். ராஜுவைக் கண்டு கொள்ளும் வில்லன்கள் அவனே தம்மால் கொல்லப்பட்ட ரோஹித் எனக் கருதி துரத்துகின்றனர். ராஜுவும், ரோஹித்தும் ஒன்றா? இல்லையா? என்பதே மிகுதிப் படம்.

இப்படம் திரைப்பட விழாக்களில் பரிசு பெறக்கூடிய ஒன்றல்ல ஆனால் திரையரங்குகளிலும் திரைப்பட ரசிகர்கள் மத்தியிலும் பரிசில்களை அள்ளிக் குவித்துக் கொண்டிருக்கிறது. ஒரு குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து ரசித்துப் பார்க்கக் கூடிய வகையில் மென்மையான இளம் காதல் உணர்வுகளை எந்த வகையிலும் வக்கிரமான உணர்வுகளைத் தூண்டாத வகையில்-அவ்வாறான உணர்வுகளைத் தூண்டுவதாகக் கருதப்படாத வகையில் திரைச் சித்திரமாக்கியிருப்பது இப்படத்தின் வெற்றிக்கு ஓர் பிரதான அடிப்படைக் காரணமாகும். அறிமுகங்களாக இருந்த போதிலும் அழகான நடிகர்கள்... அழகு தவறாமல் திறமையாக நடித்திருக்கின்றார்கள் என்பது மிகவும் பாராட்டுக்குரியது. •

# சென்னை மொலிவூட்

## தமிழ்த் திரைப்படங்கள் பற்றி சு. சமுத்திரம்

## திரைப்பட அபத்தங்களும் ஆபத்துக்களும்

அண்மைக்காலமாக ஒருவகையான நிகழ்ச்சிகளை செய்திப் பத்திரிக்கைகளும் வாரப் பத்திரிக்கைகளும் மேலே பார்த்தால் சோகமாகவும் விலக்கிப் பார்த்தால் சுவையாகவும் சித்தரித்து வருகின்றன. "ஈவ்டீசிங்", என்றும் தலைப்பிடுகின்றன. எந்தக் குற்றமும் செய்யாத மாணவி சரிகாவின் மரணத்தையொட்டி பதினைந்து நாட்கள் காரசாரமாக பேசப்பட்ட விவகாரம் பின்னர் பேப்பர் குப்பைகளில் போடப்பட்டது. இப்போது மீண்டும் அவை பரபரப்பாகப் பேசப்படுகிறது. அடங்கிக் கிடந்த வம்பர்கள் மீண்டும் கை வரிசையையும் வாய் வரிசையையும் காட்டுவதே காரணம்.

### பாதிக்கிணறு தாண்டுதல்

ஒரு அனாதரவான பெண்ணைக் கிண்டலால் கேலியால் அவமானப் படுத்தும் கொடிய குற்றத்தை "ஈவ்டீசிங்" என்று சொல்வது பொழுதுபோக்கு செய்திகளே. முதலில் இந்தக் குற்றத்திற்கு பெண் கொடுமை அல்லது பெண்களை மானபங்கப்படுத்தல் என்று பெயரிட வேண்டும். "ஈவ்டீசிங்" என்ற வார்த்தையைத் தூக்கி தூர எறியவேண்டும். இந்த விவகாரத்தின் கொடுமையை வாசகர்களுக்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு உறைக்கும்படி சொல்லும் வகையாக செய்தித்துறைகளோ காவல்துறையோ செயல்படவில்லை. இந்தக் குற்றத்தில் மாட்டிக் கொள்வதுவும் ஒரு விபத்து போலவே நினைக்கப்படுகிறது.

நேற்றைய ரயிலில் விபத்து ஏற்பட்டால் இன்றைய ரயிலிலும் அது ஏற்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று பயணிகள் நினைப்பது போல நமது இளைஞர்களும் நினைக்கிறார்கள். இது சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிப்பதன் மூலமே இத்தகைய மனப் போக்கை ஒழிக்க முடியும் என்று சிலர் கருதுகிறார்கள். இது உண்மைதான்.

ஆனால் பாதி உண்மையே தவிர முழு உண்மையல்ல. இந்தப் பாதியை மட்டுமே வைத்துக் கொண்டு செயல்படுவது பாதிக்கிணறு தாண்டுவதுபோலதான்.

### நோயின் அறிகுறிகள்

பெண்களைக் கிண்டல் முதல் வம்பு வரை செய்கிறவர்களின் ஒரு வகை நோயின் அறிகுறியே தவிர இது ஒரு நோயல்ல. இவர்கள் ஏவுகணைகள் ஏவும் தளங்களை நம் கண் முன்னாலேயே பார்க்கிறோம். பாதுகாப்புப்படை ரகசியம் போல்

தொடர்ச்சி 5ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# சமாதான சகவாழ்வுக்கு மாநில சுயாட்சியே மருந்து

பிராந்திய அரசுகள் அமையும் போது அவை ஒவ்வொன்றிலும் பிராந்திய சட்டசபை, பிராந்திய ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்திய அரசாங்கம், பிராந்திய அரசின் பொது நிர்வாக அமைப்பு, பிராந்திய அரசுக்கு உட்பட்ட நீதி நிர்வாக அமைப்பு ஆகிய விடயங்கள் உள்ளன. அவை தொடர்பான அபிப்பிராயங்களே இப்பகுதியில் தரப்பட்டுள்ளன.

## பிராந்திய அரசு (Regional State)

பிராந்திய சட்டசபை (பி.ச.ச.- Regional Legislative Council- R.L.C.)

1) பிராந்தியப் பட்டியலில் சொல்லப்பட்ட விடயங்களுக்கு அமைவாக சட்டங்களையும் விதிகளையும் உருவாக்குவதற்கான ஒரு பிராந்திய சட்டசபையை ஒவ்வொரு பிராந்தியமும் கொண்டிருக்கும்.

2) பிராந்திய சட்டசபைகள் எப்பொழுதும் நாட்டின் ஆட்சி அமைப்பின் முக்கிய அம்சங்கள் என்பதோடு அவை நாடாளுமன்றத்துக்கோ, மத்திய அரசாங்கத்துக்கோ கீழ்நிலைப்பட்டு செயல்படும் அமைப்புக்கள் அல்ல.

3) முதலமைச்சரின் எழுத்து மூலமாக கோரிக்கையின் அடிப்படையிலேயே ஆளுநர் பிராந்திய சட்டசபையைக் கூட்டவோ, கலைக்கவோ அல்லது காலவரையின்றி ஒத்திவைக்கவோ முடியும்.

## ஆளுநர் (The Governor)

1) ஆளுநர் என்பவர் அரசியல் யாப்பின் ஓர் தேசியப் பிரதிநிதி ஆவார். ஓர் பிராந்திய முதலமைச்சரினதும், எதிர்க்கட்சி தலைவரினதும் ஒப்புதலோடு ஒரு பிராந்தியத்துக்கு 5 வருட காலத்துக்கு குடியரசுத் தலைவர் அவர்களால் ஆளுநர் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் அந்தப் பிராந்தியத்தின் சட்டசபை, பிராந்திய அரசாங்கம், பொதுநிர்வாகம், காவல்துறை, நீதிநிர்வாகம் ஆகியவற்றினை உள்ளடக்கிய பிராந்திய அரசின் தலைவராக இருப்பார்.

2) பிராந்தியத்தின் நிறைவேற்றுப் பிரிவின் விதந்துரைக்கப்பட்ட (nominal) தலைவராக மட்டுமே ஆளுநர் இருப்பார். அவ்வாறு இருந்து கொண்டு அந்தப் பிராந்தியத்தியத்தின் முதலமைச்சரின் அல்லது அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் மட்டுமே நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகப்படுத்துவார். தேர்வு செய்யப்பட்ட பிராந்திய அரசு ஆட்சியதிகாரத்தில் இருக்கும் வரை இவ்வாறே நடைபெறும்.

3) ஆளுநர் என்பவர் உண்மையில் மத்திய, பிராந்திய அரசாங்கங்களுக்கிடையே செயல்படும் ஒரு தொடர்பாளராகவும், கண்காணிப்பாளராகவும் இருப்பார்.அத்துடன் அவ்வப் போது குடியரசுத் தலைவருக்கு பிராந்திய அரசாங்கம் பற்றி அறிக்கைகள் சமர்ப்பிக்கும் மேற்பார்வையாளராகவும் இருப்பார். மொத்தத்தில் ஆளுநர் என்பவர் நாட்டின் தேசிய நலன்களையும், பிராந்திய மக்களின் சேமநலன்களையும் ஒருங்கிணைக்கின்ற-பாதுகாக்கின்ற ஒரு முன்னணி காவலராகச் செயல்படுவார்.

4) காபந்து அரசாங்கம் (Care taker Govt) அமைத்தல் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஒரு பிராந்திய சட்டசபை ஆளுநரால் கலைக்கப்படும்போது, அந்த கலைக்கப்பட்ட சட்டசபைக்கான புதிய தேர்தல் நடாத்தப்பட்டு அதன் பிரகாரம் புதிய பிராந்திய அரசாங்கம் அமைக்கப்படும் வரை, அரசியல் யாப்பானது வேறுவகையில் ஏற்பாடு செய்தாலன்றி, இருந்துவரும் முதலமைச்சரை தொடர்ந்தும் பதவியில் நீடிக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொள்வார்.

5) ஒரு பிராந்தியத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் போது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஆளுநரையும் தன் விருப்பத்திற்கேற்ப 5 பேர்களுக்கு மேற்படாத ஒரு ஆலோசனைக் குழுவையும் அந்த ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் வெவ்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், அதேவேளை பிராந்திய அரசாங்கத்தின் எந்தப்பகுதியிலும் அந்தக்காலகட்டத்தில் கடமைபுரியாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

6) பிராந்திய அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில், பிராந்திய அட்டவணையில் கூறப்பட்ட விடயங்களில் எவற்றுக்கேனும் எதிராக குற்றம் இழைத்த தண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்கவோ, அவரை விடுதலை செய்யவோ, அவரது தண்டனையைக் குறைக்கவோ, மாற்றவோ, இடைநிறுத்தவோ, மாற்றியமைக்கவோ ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

7) ஒரு ஆளுநர் அவரது பதவிக் காலம் முடித்து மீண்டும் நியமிக்கப்படலாம். ஆனால் எக்காரணம் கொண்டும் ஓர் ஆளுநர் மொத்தத்தில் 10வருடங்களுக்கு மேல் அப்பதவியில் நியமிக்கப்படலாகாது.

## பிராந்திய அரசாங்கம் (பி.அ.- Regional Government.- R.G.)

1) ஒரு பிராந்தியத்தின் முதலமைச்சர் குடியரசுத் தலைவரினால் நியமிக்கப்படுவார். நியமிக்கப்பட்ட முதலமைச்சர் குடியரசுத் தலைவர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்.

2) முதலமைச்சரின் வேண்டுகோளின் பேரில் பிராந்திய அமைச்சரவையை ஆளுநர் நியமிப்பார் அல்லது நீக்குவார்.

3) ஒரு பிராந்தியத்தின் முதலமைச்சரும், அமைச்சரவையும், அந்த பிராந்திய சட்டசபைக்கு கூட்டுப் பொறுப்பு உடையவர்களாகவும், பதில் சொல்பவர்களாகவும், கணக்கு காட்டுபவர்களாகவும் இருப்பார்கள்.

4) பிராந்திய சட்டசபையில் பெரும்பான்மை ஆதரவு இருக்கும் வரை முதலமைச்சர் தனது பதவியில் தொடருவார். பிராந்திய சட்டசபையின் விசேட கூட்டத்தில் மட்டுமே முதலமைச்சர் மீதான நம்பிக்கை பரிசோதிக்கப்படும்.

ஒரு பிராந்தியத்தில் அல்லது பிராந்தியங்களில் குடியரசுத் தலைவர், ஆளுநர் ஆட்சி பிரகடனப்படுத்தலும் அந்த பிராந்திய சபையை இடைநிறுத்தலும், கலைத்தலும், நீக்குதலும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் யாப்பின் 223வது ஷரத்தின் பிரகாரம் அந்தச் சந்தர்ப்பத்தில் குடியரசுத் தலைவர் அந்தந்த பிராந்தியத்தின் ஆளுநரினதும், முதலமைச்சரினதும், அமைச்சரவையினதும். செயற்பாடுகளையும் அதிகாரங்களையும் தானே பொறுப்பேற்றுக் கொள்வார்.

1990ல் முதலாவது வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்ட பின் மாகாணசபையின் அதிகாரங்களும் செயற்பாடுகளும் கொழும்பினால் திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மத்திய அரசின் அமைச்சர் ஒவ்வொருவரும் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளும் அந்த அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் உடனடியாகக் கைப்பற்றிக் கொண்டு அவற்றை நேரடியாகக் கொழும்பிலிருந்து கொண்டே நிறைவேற்றிக் கொண்டு வந்துள்ளனர். இவ்வாறு தான் அரசியல் யாப்பின் ஷரத்துக்கள் நடைமுறையில் அர்த்தபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான நடைமுறைப்படுத்தலினாலும், அர்த்தப்படுத்தப்பட்டதினாலும் ஒரு பிராந்திய அரசாங்கம் கலைக்கப்படும் போது அந்த பிராந்திய அமைப்பு முழுவதும் செயலற்றுப் போகின்றது.

இதனால் எஞ்சுவது ஒரு அதிகாரமற்ற ஆளுநரும், சில வலுவற்ற நிர்வாகிகளும் மாத்திரமே. அது பெயரளவில், இந்த நடைமுறையானது ஒரு பிராந்திய நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றும் அரசு ஊழியர்களை ஒரு பாதுகாப்பற்ற உணர்வுக்கு உள்ளாக்கி விடுகிறது. முதலாவது வடக்கு-கிழக்கு மாகாணசபை அமைக்கப்பட்ட போது திறமை வாய்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்கள் அனைவரிடமும் மாகாணசபையில் இணைந்து பணியாற்றும் துணிச்சலும் ஆர்வமும் இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும்.

முன்பு மாகாணசபை (வடக்கு-கிழக்கு) இருந்த நிலையின் அடிப்படையில் இனிமேல் ஒரு பிராந்திய அரசைக் கட்டியமைக்க முயற்சி மேற்கொள்ளப்படுமானால் புதிதாக அதில் பங்கு கொள்ளக்கூடிய நிர்வாகிகளை அந்த அமைப்பில் நம்பிக்கை கொள்ளச் செய்வது மிகவும் கடினமான ஒன்றாகவே இருக்கும். இதில் மத்திய அரசாங்கம் அதிக அக்கறை எடுத்து பிராந்திய அரசாங்க அமைப்பின் கீழ் சேவை செய்வதில் எந்தவித பயமும் கொள்ளத் தேவையில்லை என்ற தெளிவான, வெளிப்படையான உத்தரவாதத்தை மத்திய அரசாங்கம் மூத்த அரசாங்க அலுவலர்களுக்கு வழங்கினாலொழிய அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது கடினமாகும்.

இந்திய அரசியல் யாப்பின் கீழும் இந்த விடயத்தில் இதேபோல் தான் நடைபெறுகிறது என்று யாராவது வாதிட்டால் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும், இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் ஆட்சி ஒழுங்குமுறைகள் கடந்த 9வருடங்களாக இலங்கை மத்திய அரசினால் வடக்கு கிழக்கில் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் இலங்கை உச்சநீதிமன்றத்தில் வழங்கப்படும் அர்த்தம் இந்தியாவை ஒத்ததாகவே இருக்கும் என்று வரும் எதிர் பார்க்க முடியாது. அத்துடன் பிரேமதாசா அரசினால் உருவாக்கப்பட்டு நிறுவப்பட்ட ஒரு விசித்திர முன்மாதிரியானது தற்போதைய அரசினாலும் பின்பற்றப்படுகிறது.

"வழமை" "மரபு" என்பன ஒரு நிலையான அர்த்தத்தை ஏற்படுத்துவன என்ற அரசியல் நாகரீகம் எப்போதோ காலங்கடந்தனவாக ஆகிவிட்டன. இதனால் ஒரு பிராந்தியத்தின் சுயாட்சியானது இங்கு பலவீனப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. எனவே, அரசியல் யாப்பு ஒழுங்குகள் வேறு விதமாக அர்த்தம் கொள்ளப்படாதவாறு வெளிப்படையான, தெளிவான, நேரடியான, துல்லியமான சட்டவாக்கங்களையும் சொற்பதங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உண்மையில் ஒரு பிராந்திய சட்டசபையோ அல்லது ஒரு பிராந்திய அரசாங்கமோ அரசியல் யாப்பின் விதிகளின்படி இடைநிறுத்தப்படவோ அல்லது நீக்கப்படவோ தேவைப்படலாம். ஆனால் அந்த பிராந்திய அரசின் செயற்பாடுகளை எக்காரணம் கொண்டும் இடைநிறுத்துவதாகவோ, கலைப்பதாகவோ அமையக்கூடாது. அதாவது, அரசியல் யாப்பு திருத்தம் ஒன்றின் மூலம் அந்த முறை முற்றாக ஒழிக்கப்பட்டாலொழிய.

பிராந்திய அரசின் செயற்பாடுகள் வேறு விதமாக கலைக்கப்பட்டால் அது அரசியல் யாப்பின் முதலாவது விதிக்கே முரண்பாடானதாகும்.

**இலங்கை அரசினால் தற்போது பேசப்பட்டு வரும் அரசியல்யாப்புச் சீர்திருத்தப் பிரேரணை தொடர்பாக – குறிப்பாக அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக முன்னாள் வடக்கு–கிழக்கு மாகாண முதல்வர் திரு. வரதராஜப்பெருமாள் அவர்களினால் முன் வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் பிரேரணைகள் கொண்ட வெளியீட்டில் இருந்து மற்றொரு பகுதி இங்கே தரப்பட்டுள்ளது. ஏற்கனவே கண்ணோட்டம் இரண்டு பகுதிகளைத் தாங்கி வந்துள்ளமையை வாசகர்களின் கவனத்திற்கென அறியத் தருகிறோம்.**

"குடியரசுத் தலைவர் அதிகாரங்களையும் கருமங்களையும் தமதாக்கிக் கொள்வார்" என்று புதிய உத்தேச அரசியல் யாப்பு கூறும் போது, இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள மரபே பின்பற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றாகிறது.

பிராந்திய அரசின் இயக்கம் நடைமுறையில் இருக்கும் வரை,

தொடர்ச்சி 11ம் பக்கம்

## சென்னை மொலி....... 04ம் பக்கம் தொடர்ச்சி

### தமிழ்த் திரைப்படங்கள் பற்றி சு. சமுத்திரம்

இந்தத் தளங்கள் ஒளித்து வைக்கப்படாமல் பகிரங்கமாகவே காட்சியளிக்கின்றன. இவற்றுடன் கட்டிப்புரளாமல் இந்த வம்பு தும்பு காரியங்களை தடுக்க முடியாது. இந்த ஏவுதளங்கள் நமது எதிரிநாட்டு படைத்தளங்கள் அல்ல. நமது தொலைக் காட்சிகள் நாடகங்கள் பத்திரிக்கைகள் தான் இந்தத் தளங்கள்.

அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் பெரும்பாலும் கவர்ச்சிக் கண்ணிகளே தொகுப்பாளர்களாகத் தோன்றுகிறார்கள். இவர்கள் நுனிநாக்கில் பேசுவது ஒரு கவர்ச்சியையும் சிணுங்குவதும் படுக்கையறைக் குரல் போல் ஒலிக்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சி என்பது ஒவ்வொரு பார்வையாளரையும் தனித்து வசீகரிப்பது. இதைத் தனித்து பார்க்கும்போது இந்த வசீகரம் வக்கிரமாகிறது.

கவர்ச்சியான ஆடைகளுடன் முத்தம் கொடுப்பதுபோல் முகம் குவித்து ஒரு இளம் பெண் சினிமாக்காதலைப் பற்றி வர்ணிக்கும்போது அதை உற்றுப் பார்க்கும் இளைஞனிடம் ஒரு கிறக்கம் ஏற்படுகிறது. அந்தப்பெண் தன்னிடம் மட்டும் அந்தரங்கமாக பேசுவதுபோல் ஒரு பிரமை ஏற்படுகிறது. இந்தப் பெண்கள் அறிமுகப்படுத்தும் ஒலி ஒளிக் காட்சிகளோ ஆபாசத்தின் உச்சம்.

ஒரு காலத்தில் லாவகமாகவும் நளினமாகவும் இருந்த திரைப்பட நடனங்கள் இப்போது அசிங்கமாகி விட்டன. நடன இயக்குனர்களே ஆட்டநாயகன் நாயகியருக்கும் ஒவ்வொரு உறுப்பையும் எப்படி ஆட்டவேண்டும் என்று ஆட்டுவிக்கிறார்கள்.

திரைப்படங்களிலோ கதாநாயகன் என்பவன் கதாநாயகியை நிச்சயம் இம்சை செய்யவேண்டும். அவள் சடையைப் பிடித்து இழுக்கவேண்டும். ஓடிப்போகிறவளின் முன்னால்போய் நின்று பாட்டுப்பாட வேண்டும். நண்பர்களிடம் பித்துப் பிடித்தது போல் நடந்து கொண்டு தனது காதல் வெளிப்பாடுகளைக் காட்டவேண்டும். உடனே அவர்கள் ராசாத்தி...ராசாத்தி....! என்ன கண்டுபிடி...... ராவோடு ராவாக அள்ளிவர நாங்க ரெடி......... என்று பாட வேண்டும். இல்லையானால் கதாநாயகன் பதுக்கி வைக்கப்பட்ட தனது காதலியைக் காண அவளது வீட்டிற்குப் போவான்.

இதைப்பார்த்த நாயகியின் தந்தை கதாநாயகனின் கையைப்பிடித்துத் தடுப்பார். உடனே அந்த நாயகன் இந்தக் கை இவளை எனக்கு ஒரு காலத்தில் பிடித்துக் கொடுக்க வேண்டிய கை என்பதால் விட்டு வைக்கிறேன். இல்லையானால் வெட்டியிருப்பேன் என்று வீரவசனம் பேசுவான். கதாநாயகியும் அவனை பழகிய புறநானூற்ற வீரன்போல் பார்ப்பாள். (இப்படியொரு திரைப்படத்தை நான் பார்த்தேன்.)

சினிமாக் காதலுக்கு அப்பன்களே வில்லன்களாய் ஆக்கப்படுகிறார்கள். பெத்தவன் தன் கண் முன்னாலேயே தன் வீட்டிலேயே தன்னோட மகளை ஒரு இளைஞன் சல்லாபிக்கும்போது சும்மா இருக்க வேண்டும். இத்தகைய சினிமாத்தனத்தை உள்ளடக்கிய படங்கள்தான் அரச தொலைக் காட்சியிலும் ஒளிபரப்பப்படுகின்றன. இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்த்து விட்டு கண்போனபோக்கில் நடந்து மனம்போனபோக்கில் பெண்களை இம்சிக்கும் இளைஞர்களைக் கைது செய்ய காக்கிச் சட்டை இருக்கிறது.

ஆனால் இந்தத் திரைப்படங்களையும், தயாரிப்பாளர்களையும் தொலைக்காட்சி நிர்வாகிகளையும் கைது செய்ய எந்தச் சட்டம் இருக்கிறது, யார் இருக்கிறார்கள், எங்கிருந்தோ ஏவிவிட்டான் கிளியை அது என்மீது போட்டதடி பழியை என்கிற கதை தான்.

### பெண்ணியப் போராளிகளின் பாராமுகம்

இவைபோதாதென்று நாடகங்களிலும் திரைப்படங்களிலும் இருபொருள் வசனங்கள். அதுவும் கவுண்டமணி-செந்தில் நகைச்சுவை என்பது ஆபாசத்தின் ஊற்றாகிவிட்டது. இந்த ஊடகங்கள் இயற்கை மனிதர்களுக்கு செயற்கை மனிதர்களை காட்டிக் காட்டி இப்பொது இயற்கை மனிதர்களும் செயற்கை ஆகிவிட்டார்கள்.

இந்தத் திரைப்படங்களில் வருகிற ஆபாச வசனங்களை அல்லது பாடல்களை இளைஞர்கள் பாடிக்காட்டும் போது அவர்கள் நிச்சயமாக கைது செய்யப்பட்டு கசையடிக்கும் உள்ளாகவேண்டும். அதே சமயம் இவர்களுக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டால் இவர்களை இப்படித் தூண்டாமல் தூண்டும் பேர்வழிகளுக்கு என்ன தண்டனை இருக்கிறது, தண்டனை இல்லையென்பதோடு இதற்கு எதிர்விகிதத்தில் கார் கிடைக்கிறது பங்களா கிடைக்கிறது. கள்ளப்பணம் மிதமிஞ்சிபோகிறது. வெளிநாட்டு மேடைகளிலும் கைத்தட்டுக்கள் கிடைக்கின்றன.

அடுத்த இதழில் தொடரும்

www.padippakam.com



# நாட்டு நிலவரம் பேரினவாதம்

நாட்டு அரசியல் அரங்கு முன்னெப்போதையும் விட ஈடாட்டம் கண்டதாகவும், பதட்டமானதாகவும் காணப்படுகிறது.

அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிராகவும், புலிகள்-அரசு பேச்சுவார்த்தையில் நோர்வே அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு எதிராகவும் தேசிய சங்க சபை, தேசிய ஒருங்கிணைப்புக்குழு, பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி, சிங்கள வீரவிதான ஆகிய அமைப்புக்கள் இணைந்து இனவாத சுலோகங்களுடன் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. இந்த ஆர்ப்பாட்டம் பற்றிச் செய்தி சேகரிக்கச் சென்ற பி.பி.சி சிங்கள சேவையாளர் "சந்தேசிய" இன் ஆசிரியரான எல்மோ பெர்னாண்டோ அவர்களைத் தாக்கியதோடு நோர்வேயின் தேசியக் கொடியையும் எரித்தார்கள்.

இதில் பிரதான பங்காளர்கள் பௌத்த பிக்குகளாவர். முஷ்டிகளை உயர்த்துவதும், பத்திரிகையாளர்களைத் தாக்குவதும், ஒரு நாட்டின் தேசியக் கொடியை எரிப்பதிலும் பிக்குகள் பங்குபற்றுவது என்பது இலங்கையில் பௌத்தமத நிறுவனங்களில் எவ்வளவு வன்முறையும், இனக்குரோத உணர்வுகளும், சகிப்புத்தன்மையின்மையும் அதிகரித்துள்ளன என்பதையே காட்டுகிறது.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே பௌத்த பிக்குகளுக்கு இலங்கையின் சிங்கள அரசியல் வாதிகள் கொடுத்த முக்கியத்துவமும், பிரதான தேசிய அரசியல் கட்சிகள் தமது போட்டி அரசியலுக்காக மகாசங்கங்களையும் நிக்காயாக்களையும் உசுப்பி விட்டதும் இப்போது இலங்கையின் அரசியலில் .இவர்கள் அடிக்கடி தலையீடு செய்வதற்கும், நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் அளவுக்கும் கொண்டுவந்துள்ளனர்.

இலங்கையின் புதிய அரசுகள் பதவியேற்ற போதெல்லாம் அதன் பிரதமர்களோ, ஜனாதிபதிகளோ தலதாமாளிகையில் எண்கோண மண்டபத்தில் நின்றே நாட்டுக்கொள்கை விளக்கவுரையாற்றுவார்கள்.

1960 களில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட ஊர்வலத்தில் "அப்பிட்ட எப்பா தோச மசால வடே" என்றுதான் கோசங்கள் எழுப்பப்பட்டன. அதில் இரத்தினசார தேரோ என்ற புத்த பிக்கு ஆவேசமாகக் குரலெழுப்பிச் சென்றதும், அந்த பௌத்த பிக்கு பொலிசாரால் சுடப்பட்டதும், அந்த பிக்குவிற்குத் தற்போது கொள்ளுப்பிட்டியில் நினைவுச் சின்னம் இருப்பதும் தெரிந்த விடயம்.

1950 களின் நடுப்பகுதியில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டதிலும், பண்டாசெல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப் பட்டதிலும் பிக்குகள் முன்னணியில் நின்று செயற்பட்டார்கள். பௌத்த சிங்கள தேசியவாதத்தின் பிரதிநிதிகளாகச் செயற்படும் இப் பிக்குகள் சிங்கள சமூகத்தின் வளர்ச்சிக்கும், இன்றைய சமூக பொருளாதார மாற்றங்களுடனும், வளர்ச்சியுடனும், சர்வதேசங்களுடனும் சிங்கள சமூகம் இணைவதை அவ்வளவாக விரும்வில்லை. இவர்கள் சிங்கள மக்களின் மேம்பாட்டிற்கும் இடையூறாகவே நின்றார்கள்.

இன்று இனமத குரோதங்களினுள் சிக்குண்டுள்ள பிக்குகளுக்கும், இந்த வட்டத்தினுள்ளிருந்து வெளியே வர முற்படும் பிக்குகளுக்கிடையேயும் ஒரு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டாவது வகையினர் பரந்த மனோபாவமும் பௌத்த தர்மத்தின் உண்மையான பிரதிநிதிகளாகவும் இருக்க முற்படுகின்றனர்.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பவர்கள், சர்வமத பெரியார்கள், மற்றும் சமாதான விரும்பிகள், மனித உரிமை அமைப்புக்களுடனும் இணைந்து செயற்படுபவர்கள் இவர்கள்.

இலங்கையின் பௌத்தமத பீடங்களை அலங்கரித்திருக்கும் ஆஸ்த்தான சந்நிதானங்களுக்கும் மாறாக மனிதநேயம், சகவாழ்வை அடிப்படையாகக்கொண்ட பௌத்தமதத்தின் கோட்பாடுகள் ஆதிக்க நிலைக்கு வரவேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் இன நல்லிணக்கமும், மத சகிப்புத் தன்மையும் ஏற்படும்.

சிங்கள கமிஷன் அறிக்கையை ஆதரித்து அதனை அமுல்படுத்துமாறு கோரி பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக தொலைத்தொடர்பு தகவல்துறை அமைச்சர் மங்களசமரவீர அவர்கள் சிங்கள கமிஷன் அறிக்கையை குப்பைக் கூடைக்குள் வீச வேண்டும் என்றார். மங்களசமரவீரவுக்கு எதிராகப் பிக்குகள் கிளர்ந்தெழுந்தார்கள்.

கத்தோலிக்க மக்களின் புனித தந்தையான பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தபோது அவருக்கு அரச மரியாதை செலுத்தப்பட்டதாக பிக்குகள் தமது அதிருப்தியை வெளியிட்டார்கள். கத்தோலிக்கர்கள், ஏனைய கிறிஸ்தவ மதப்பிரிவினரைப் புலிகளின் ஆதரவாளர்களாகக் குற்றஞ் சாட்டுகிறார்கள். இந்த சகிப்புத்தன்மையற்ற போக்கு நாட்டின் சமூக பொருளாதார வாழ்வில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

**யுத்த முனை எவ்வாறு இருக்கும் என கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத சக்திகள் ஏழை சிங்கள இளைஞர்களின் மரணங்களில் தமது புயங்களைத் தட்ட முனைகிறார்கள். யுத்தத்தில் ஏற்படும் களைப்பும் சலிப்பும் ஒரு நீண்டகால யுத்தத்தில் இயல்பானதே. ஆனால் இவற்றையெல்லாம் மனிதாபிமானக் கண்கொண்டு அணுக விரும்பாத சொகுசு வாழ்க்கைக் காரர்களாகவும், மக்கள் விரோத சக்திகளாகவும் இவர்கள் செயற்படுகிறார்கள்.**

1990 களின் முற்பகுதியில் பௌத்தத்திற்கு இழைக்கப்பட்ட துரோகம் (Buddism Btrayal) என்ற நூல் அமெரிக்காவிலுள்ள பேராசிரியர் தம்பையாவினால் எழுதப்பட்டது. இந்த நூலிலும் பிக்குகள் மத்தியில் பரவியிருக்கும் வன்முறைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நூலை இலங்கையிலும், உலகிலும் தடைசெய்யுமாறு இனவாத பிக்குகள் கூச்சலிட்டார்கள்.

இப்போது நோர்வேயின் கொடியை எரித்திருக்கின்றார்கள். பத்திரிகையாளர்களைத் தாக்குகிறார்கள்.

சந்தேசிய நிருபர் தாக்கப்பட்ட போது பத்திரிகையாளர்கள் அவருக்கு ஆதரவாக நின்றார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களுடன் தர்க்கம் செய்தார்கள். அந்த நிகழ்ச்சியைப் புறக்கணிக்கக் கூடச் செய்தார்கள்.

ஆனால் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டது "ஜலண்ட்" பத்திரிகையிலோ அல்லது "சண்டேரைம்ஸ்" பத்திரிகையிலோ முக்கிய செய்தியாகப் பிரசுரிக்கப்படவில்லை. மாறாக பிக்குகள் இனவாத அமைப்புக்களின் ஆர்ப்பாட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

சிங்கள முதலாளிகளுக்கு தமிழ், முஸ்லிம் முதலாளிகளுடன் நிலவும் போட்டிகள் இதற்குக் காரணமாய் அமைகிறது. ஐ.தே. கட்சியை தேர்தலில் வெற்றிபெற வைப்பதற்காக எதைவேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இதற்கப்பால் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களும், இன்னுமொரு பகுதி வர்த்தகர்களும் சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இந்த இனவாத சக்திகள் ஐ.தே.க யும், அரசும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக பேசக்கூடாது என்று கோரி வருகிறார்கள்.

தற்போதய அரசு-ஐ.தே.க பேச்சுவார்த்தை நடைபெறாது இருந்திருந்தால் இந்த இனவாத ஆர்ப்பாட்டங்கள் இன்னும் பாரதூரமான வையாக மாறியிருக்கக் கூடும்.

கடந்த காலத்தில் இந்திய- இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தின. இம்முறை பிரதான எதிர்க்கட்சியோ, ஜே.வி.பி யோ இச் சக்திகளுடன் தம்மை அடையாளப்படுத்தவில்லை. இது வரவேற்கப்பட வேண்டிய அம்சமாகும்.

ஜே.வி.பி என்ன நடக்கிறது என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டுமென்று கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. ஒரு அரசியல் கட்சிக்குள்ள தெரிந்து கொள்வதற்கான உரிமை என்ற அடிப்படையில் அதில் நியாயம் இருக்கிறது. ஆனால் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜே.வி.பி இடம் பேரினவாத நிலைப்பாட்டை அண்டிய நிலைப்பாடே உள்ளது என்பது துரதிஷ்டமானதாகும்.

ஆனால் சாதாரண பெரும்பான்மைச் சிங்கள மக்களைப் பொறுத்தவரை இந்த இனவாதக் கூச்சல்களுக்கெல்லாம் எடுபடும் நிலையில் இல்லை. தென்பகுதி சிங்களக் கிராமங்கள் ஒவ்வொன்றும் யுத்தத்தின் கொடுமையையும், சாதாரண ஏழை சிங்கள இளைஞர்கள் பலி கொள்ளப்படுவதையும், ஆட்கள் காணாமல் போவதையும் அனுபவபூர்வமாக அறிந்துள்ளன. இந்த இனவாத சக்திகளின் கருத்துக்கள் கடந்த சகாப்தத்தில் சிங்கள மக்கள் மத்தியில் பெரிதாக எடுபடவில்லை என்றே கூறவேண்டும். தேர்தலில் இத்தகைய சக்திகள் பெற்ற வாக்குகள் மிகக் குறைவாகவே இருந்தன.

1980 பிற்பகுதியில் தென்பகுதிச் சிங்கள மக்கள் மேல் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டபோது, அதே குரூரத்தைச் சிங்கள மக்கள் அனுபவ பூர்வமாக உணர்ந்திருந்தார்கள்.



வடக்கு கிழக்கு எல்லைக் கிராமங்களில் வசிக்கும் சிங்கள மக்கள், தமிழ், முஸ்லிம் மக்களைப் போலவே நாளாந்த யுத்தக் கொடுமைகளை ஆயுதமேந்தியவர்களின் அத்துமீறல்களைச் சந்தித்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

இந்த சூழ்நிலையில் வீரவசனம் பேசும் பிக்குகளின் அமைப்புக்களோ வீரவிதானாக்களோ பெரிதாக எதையும் செய்துவிட முடியாததுதான். உறுதியற்றதாகத் தோன்றும் அரசு, களைப்படைந்திருக்கும் இராணுவம், யுத்தவியாபாரத்தை மேற்கொண்டிருக்கும் பத்திரிகைகள் பாரதூரமான சமூக அமைதியின்மையைத் தோற்றுவிக்கலாம்.

இந்த இனவாத கோஷ்டிகள் எப்படியோ, அந்தளவுக்குப் பாதாள உலக கோஷ்டிகளும் பெருகி உள்ளன. இவை அக்கம் பக்கமாகத்தான் செயற்படுகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

புறக்கோட்டை வர்த்தகர்களை மிரட்டி உருளைக்கிழங்கு வியாபாரத்தில் ஏகபோகத்தை எடுத்துக்கொள்ள விளைபவர்களும், தமிழர்களிடமே கொள்ளையடிப்பதற்கெனத் தம்மை உளவுத்துறையினர் எனச் சொல்லித் திரியும் கோஷ்டியினரும், பஸ்களிலும் ரயில்களிலும் தாக்குதல் நடத்துபவர்களும், தொழில் போட்டிகளுக்கு இனரீதியான அச்சுறுத்தல்கள் விடுப்போரும். உதாரணமாகக் கொட்டாஞ்சேனைப் பகுதியில் வீடு கட்டுவதற்கு அழைக்கப்பட்டிருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்டிட வேலையாட்கள் வேலை சரியில்லாததினால் நீக்கப்பட்டனர்.

பின்னர் சிறுபான்மையின கட்டிட நிர்மாண தொழில் செய்வோரைக் கொண்டு அவ்வேலை செய்யப்பட்டபோது அந்த சிறுபான்மையினக் கட்டிடத் தொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம்.

பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யச் செல்வோர் அனுபவிக்கும் இன்னல்கள், சோதனைச் சாவடிகளில் நடக்கும் இனப்பிரிப்பு நடவடிக்கைகள் கவனத்துக்குரியவை.

பொலிசார் மத்தியில் இனவாதம் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பத்திரிகையாளரைத் தாக்கி, நோர்வேயின் தேசியக் கொடியை எரித்தபோது பொலிசார் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்ற முக்கியமான கேள்வி ஒன்று எழவே செய்கிறது.

சகல செயற்பாடுகளிலும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இனவாத நோக்கில் செயற்பட்டுப் பழகியவர்களுக்கு இந்த நடவடிக்கையின் பாரதூர தன்மை விளங்குவதற்கு சாத்தியப்பாடுகள் குறைவே. ஏதோ நல்ல காரியந்தான் நடைபெறுவதாகக் கருதியிருக்கக்கூடும்.

எதிர்காலத்தில் பாரதூரமாக ஏற்படக்கூடிய வன்முறைச் சூழல்களில் இவர்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதற்கு இது ஒரு முன்னறிவிப்புக்கூட.

யுத்த முனை எவ்வாறு இருக்கும் என கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத சக்திகள் ஏழை சிங்கள இளைஞர்களின் மரணங்களில் தமது புயங்களைத் தட்ட முனைகிறார்கள். யுத்தத்தில் ஏற்படும் களைப்பும், சலிப்பும் ஒரு நீண்டகால யுத்தத்தில் இயல்பானதே. ஆனால் இவற்றையெல்லாம் மனிதாபிமானக் கண்கொண்டு அணுக விரும்பாத சொகுசு வாழ்க்கைக் காரர்களாகவும், மக்கள் விரோத சக்திகளாகவும் இவர்கள் செயற்படுகிறார்கள்.

—எஸ்.தி. சிறி—

இந்த இருபது வருட யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு நேர்ந்த கதிபற்றி, அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி, பேரினவாதத்தின் கொடூரவடுக்களையும் ஆறாத ரணத்தைப் பற்றியும் இவர்களுக்கு எதுவும் புரியாது. புரிந்து கொள்ள விரும்பவும் இல்லை.

இந்த நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய தமிழர்களையும் முஸ்லிம்களையும் மிதித்தழிக்கும் முயற்சிகள் இன்றைய பாரதூரமான நிலைக்குக் காரணம்.

தமிழ்த் தேசியவாதம் ஜனநாயக விரோத பாசிச வடிவத்தை எடுத்துள்ளது. அது கணிசமான அளவுக்கு தமிழ் மக்களுக்கு விரோதமாகவும் செயற்படுகின்றன.

ஆனால் இந்தப் பேரினவாத சக்திகளோ சகல தமிழ் மக்களையுமே இந்த நாட்டின் விரோதிகளாகச் சித்தரிக்க முனைகிறது.

ஒவ்வொரு இன மக்களுடனும் அனுசரித்து பரஸ்பரம் மரியாதை செலுத்தி, ஒவ்வொரு சமூகத்தினதும் சுயமரியாதை கௌரவத்தை உறுதிப்படுத்தி வாழவேண்டும் என்பது இந்த நாட்டில் எதிர்காலத்தில் மனித குலம் வாழ்வதற்கான அடிப்படை நிபந்தனை. இனவாதிகள் இவை எல்லாவற்றையுமே அழித்து விடலாம் என்ற நப்பாசையுடன் ஆபத்தான விளையாட்டொன்றை விளையாட முற்படுகிறார்கள்.

1980 களின் நடுப்பகுதியில் இலங்கையின் அரசியல் அரங்கில் இனவாதத்துக்கு எதிரான தேசிய அரசியல் மிக நீண்டகாலத்தின் பின் தலைகாட்ட ஆரம்பித்தது. விஜயகுமாரணதுங்கவின் தலைமையிலான சிறிலங்கா மக்கள் கட்சியும், இடது

தொடர்ச்சி 08ம் பக்கம்

www.padippakam.com



# மக்கள் விடுதலை முன்னணி ஒரு மீள் பார்வை

-மட்டுநகர் நேசன்-

**ஆரம்பக் காலங்களில் மக்கள் விடுதலை முன்னணி எந்தவித அரசியல் கருத்துக்களையும் தமிழ் மக்களிடம் முன்வைக்கவில்லை என்பது மட்டுமல்ல தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக திட்டவட்டமாக தெளிவாக எதையும் வெளிப்படுத்தவில்லை. இனவாத கண்ணோட்டத்துடன் சிங்கள இளைஞர்களை அணிதிரட்டுவதில் ஆர்வம் காட்டினர்.**

1948 இற்கு பின்னான அரசியல் வரலாற்றில் இடதுசாரி கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமாஜ கட்சியும் முக்கிய பாத்திரமொன்றினை வகித்தன. 1952ல் இவர்கள் நடாத்திய வேலைநிறுத்தப் போராட்டமானது அன்றைய ஆட்சியையே ஸ்தம்பிக்க செய்ததென்பது குறிப்பிடதகுந்ததாகும்.

பாராளுமன்றத்திலும் இவர்களது குரல்கள் பலமாக ஒலித்த காலமது. இவர்கள் தொழிற்சங்க போராட்டங்களுக்கூடாக பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதே இலக்காக இருந்தது. இதனால் 1960களில் பின் இளைஞர்களிடையிலான செல்வாக்கை மெல்ல மெல்ல இழக்கத் தொடங்கினர்.

1960 களில் உலக அரங்கில் சோசலிச முகாம் இரண்டாக பிளவுண்டது. இதனால் சோவியத் யூனியன் ஒரு அணியாகவும், சீனா ஒரு அணியாகவும் செயற்படத் தொடங்கின. இது இடதுசாரி இயக்கங்களுக்குள்ளேயே இரு பிரிவுகள் உருவாக வழிவகுத்தது.

1965ல் சண்முகதாசன் தலைமையிலான சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி சிங்கள மக்கள் மத்தியிலும் வட பகுதி தமிழ் மக்கள் மத்தியிலும், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்று விளங்கின.

மாத்தறை கொட்டகொட என்னும் இடத்தைச் சேர்ந்த கம்யூனிஸ் கட்சி ஆதரவாளரின் மகனான ரோகண விஜேவீர இடதுசாரி சிந்தனையோடு மும்பா பல்கலைகழகத்தில் வைத்தியத்துறை பட்டப் படிப்புக்காகச் சென்றார். அங்கு ஏற்பட்ட கருத்து முரண்பாடால் அங்கிருந்து நாடு திரும்பி சண்முகதாசன் தலைமையிலான சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயற்பட்டார். இவர் அக்கட்சியின் வாலிப முன்னணிக்கு பொறுப்பாக இருந்து தீவிரமாக செயற்பட்டார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ்.டி. பண்டாரநாயக்காவும் இவர்களுடன் இணைந்துச் செயற்பட்டார்.

இவ் இடதுசாரி கட்சிக்குள்ளும் இனவாத சிந்தனைகள் முளைத்துவிடத் தொடங்கின. 1968ல் தமிழரான சண்முகதாசன் தலைமைத் தாங்குவதை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சித் தோழர்கள் விரும்பவில்லை. இம் முரண்பாட்டின் உச்சக் கட்டமாகவே ரோகண விஜேவீராவும் சிலரும் அதிலிருந்து வெளியேறி புதிய கட்சியொன்றை உருவாக்க முயன்றனர்.

1968இல் ரோகண விஜேவீர தலைமையில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) உருவாக்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் இளைஞர்களாக இருந்ததால் மார்க்சிய சித்தாந்தத்தை ஏற்று தீவிரவாத போக்கைக் கொண்டவர்களாக செயற்பட்டனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னான காலக்கட்டத்தில் ஆயுதப் போராட்டத்தை முதன் முதலாக முன்னெடுத்த அமைப்பு மக்கள் விடுதலை முன்னணியே யாகும்.

1970களில் மக்கள் விடுதலை முன்னணி சிங்கள இளைஞர்கள் மத்தியில் அரசியல் வேலைத்திட்டத்தை விரிவுபடுத்தியது. அவ்வேலைத்திட்டத்தில் அரசியல் வகுப்புக்கள் எடுக்கப்பட்டன. ஆனால் குறிப்பாக சிங்கள இளைஞர்கள் மத்தியிலேயே வேலைத் திட்டங்கள் இருந்ததேயொழிய தமிழ் இளைஞர்கள் மத்தியில் எந்தவித செயற்பாடுகளும் இவருக்கு இருக்கவில்லை. மாறாக தமிழரசுக்கட்சியும் சண்முகதாசன் தலைமையிலான சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும் இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கு வகித்தன. மக்கள் விடுதலை முன்னணி பின்வரும் வகுப்புக்களை நடாத்தியது.

1. உலக அரசியல் போக்குகளும், ஆயுதப் போராட்டங்களும்.

2. சோசலிசமுதலாளித்துவ தோற்றம் வளர்ச்சி.

3. இலங்கை இடதுசாரி இயக்கங்களின் வரலாறு.

4. இலங்கையில் முதலாளித்துவ அரசியல் கட்சியின் வளர்ச்சியும் செயற்பாடும்.

5. இந்திய விஸ்தரிப்புவாதம்

இவ் வகுப்புக்களே இளைஞர்கள் மத்தியில் பாசறையில் வைத்து எடுக்கப்பட்டன.

இதில் ஐந்தாவதாகக் குறிப்பிட்ட அரசியல் வகுப்பு முழுக்க முழுக்க இந்தியாவுக்கு எதிரானது என்று சொல்லிக் கொண்டு மலையகத் தமிழருக்கு எதிரான வாதமாகவே அது இருந்தது என்பதே உண்மையானதாகும்.

ஆரம்பக் காலங்களில் மக்கள் விடுதலை முன்னணி எந்தவித அரசியல் கருத்துக்களையும் தமிழ் மக்களிடம் முன் வைக்கவில்லை என்பது மட்டுமல்ல தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக திட்டவட்டமாக தெளிவாக எதையும் வெளிப்படுத்த வில்லை. இனவாத கண்ணோட்டத்துடன் சிங்கள இளைஞர்களை அணி திரட்டுவதில் ஆர்வம் காட்டினர்.

1971 ஏப்பிரல் 5ம் திகதி சிங்களப் பகுதிகளில் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் தொடுத்தனர். வெள்ளவாய, பதவியா, மொனராகல, மாத்தறை, காலி ஆகியன இவர்களின் கட்டுப்பாட்டில் ஐந்து நாட்கள் இருந்தது குறிப்பிடத்தக்கது.

1971 இல் நடைபெற்ற கிளர்ச்சி தோல்வியைத் தழுவ பல காரணங்கள் இருந்தன. கிராமங்களில் தாக்குதல் நடாத்தி நகரங்களைக் கைப்பற்றுதல்

சேகுவரா போராட்டம் எனக் கூறி மக்கள் மத்தியில் அரச செய்தி ஊடகங்கள் பீதியை ஏற்படுத்தியமை. இவர்கள் ஆட்சிக்கு வந்தால் 50 வயதுக்கு மேற்பட்டோரை சுட்டு விடுவார்கள் எனக் கூறி மக்களை அந்நியப் படுத்தியமை முழுக்க முழுக்க போராட்டத்திற்கு இளைஞர்களை அணி திரட்டியமை தமிழ் மக்களை இப் போராட்டத்தில் இணைக்கத் தவறியமை

வரட்டுத்தனமான சிந்தனையுடன் நீண்டகால சிந்தனையின்றி செயல்பட்டமை ஆயுதப் போராட்டத்தை தயாரிப்புகளின்றி திடீரென முன்னெடுத்தமை என்பவற்றைக் கூறலாம்.

1971 இல் அம்பாறைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட ரோகண விஜேவீரா யாழ்ப்பாணம் சிறையிலே விடுதலையாகும் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

1977 இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சியின் அன்றைய பிரதமர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா சிறீலங்கா சுதந்திரக் கட்சியை வீழ்த்தும் தந்திரோபாயத்துடனேயே இவர்களை விடுதலை செய்ய முன் வந்தார் என்பது இங்கு கவனிக்கத்தக்க அம்சமாகும்.

சிறையிலிருந்து விடுதலையான ரோகண விஜேவீரா மீண்டும் தமது சகாக்களான உபதிஸ்ஸ கமநாயக்க, லயனல் போபகே, வாஸ் திலக்கரத்ன மாரசிங்க ஆகியோருடன் இணைந்து மக்கள் விடுதலை முன்னணியை மீண்டும் கட்டியெழுப்பி அரசியல் கட்சியாக பதிவு செய்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கினர்.

ஆயுதப் போராட்டம் மூலமே சமூக மாற்றத்தைக் கொண்டுவர முடியுமென 1971ல் தீவிரமாக செயற்பட்ட இவர்கள் அதற்கு மாறாக மக்களை அணிதிரட்ட ஜனநாயகப் பாதையை தேர்ந்தெடுத்துள்ளதாக அறிவித்து கொள்கைப் பிரகடனமொன்றையும் வெளியிட்டனர்.

இக் கொள்கைப் பிரகடனத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென அவர்கள் குறிப்பிட்டிருந்த போதும் தமிழ் மக்கள் தொடர்பாக அவர்களது நடவடிக்கை அவ்வாறு அமையவில்லை. என்பதுவும் முக்கியமானதாகும்.

தமது கட்சியை வலுப்படுத்த மீண்டும் அரசியல் வகுப்புக்கள் வைத்து அணி திரட்டுவதில் ஈடுபட்டனர்.

தாம் நடைபெறவுள்ள தேர்தல்களில் பங்கு கொள்ளப் போவதாகவும் அறிவித்தனர். இதனை யடுத்து 1981இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்களில் சில மாவட்டங்களில் போட்டியிட்டு ஏழு ஆசனங்களைக் கைப்பற்றிறனர்

இவர்களது பிரச்சார உத்திகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. ஏனைய கட்சிகளைவிட வித்தியாசமாகவும் இருந்தது. ஏப்ரல் கிளர்ச்சியை நினைவுப்படுத்தும் கண்காட்சி, வீடு வீடாக மக்களின் பிரச்சாரம் பிரமாண்டமான சுவரொட்டிகள் வீதியில் நின்று உண்டியல் குலுக்குதல், மக்கள் நெருக்கமாக வாழும் சேரிப்பகுதிகளில் மேடையின்றி கூட்டம் நடத்துதல், தெரு நாடகங்கள் மூலம் மக்களுக்கு கருத்தைப் பரப்ப முயன்றனர்.

இவர்களது அரசியல் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது அது மக்களை தம்மோடு இணைப்பதற்கு மேற்கொண்ட தந்திரோபாயமாகவே பின்னால் செயற்பாடுகள் தமக்கு தெளிவுபடுத்துகிறது.

1982ல் நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி தலைவர் ரோகண விஜேவீரா போட்டியிட்டார். பிரச்சாரக் கூட்டங்களில் சிங்களப் பகுதியில் பேசும் போது 24 மணி நேரத்தில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பேனென்று பேசியது இராணுவத்தீர்வை வலியுறுத்திய இனவாத பேச்சாகவே இருந்தது. இதனால் மக்கள் விடுதலை முன்னணி மீது தமிழ் மக்கள் நம்பிக்கையிழக்கத் தொடங்கியதும் 1983ல் தமிழ் இயக்கங்களின் வளர்ச்சியும் மக்கள் விடுதலை முன்னணி தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்தன.

இத் தேர்தலில் கிட்டத்தட்ட இலட்சம் வாக்குகளையே ரோகண விஜேவீராவால் பெற முடிந்தது.

1983ல் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பிற்கு எதிரான இவர்கள் கூட்டங்களை நடாத்திய போதும் தமது கட்சித் தொண்டர்களை இதற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு குறிப்பிட்டது ஐ.தே.கட்சியுடனான நெருக்கத்தை துல்லியமாக காட்டியது எனலாம்.

1983ற்குப் பின் தமிழ் பகுதிகளில் குறிப்பாக வட-கிழக்கு பகுதிகளில் தமிழ் இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தை தொடர மக்கள் விடுதலை முன்னணியும் அவ்வாறான செயற்பாட்டை தென்னிலங்கையில் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டனர். இத்தகைய போக்கோடு ஒத்துப் போக முடியாத நிலையில் லயனல் போபகே, வாஸ் திலகரத்ன மாரசிங்க ஆகியோர் கட்சியை விட்டு வெளியேறினர்.

இதில் லயனல் போபகே முற்றாக ஒதுங்கிக் கொள்ள வாஸ் திலகரத்ன இவர்களுக்கெதிரான நிலைப்பாட்டை எடுத்ததால் ஜே.வி.பி ஆல் சுட்டுக் கொல்லப்பட்டார். மாரசிங்கவும் இவர்களாலேயே கொல்லப்பட்டார்

1987ல் நடைபெற்ற இலங்கை இந்திய ஒப்பந்தத்தையடுத்து கொழும்பில் இடம்பெற்ற கலவரங்களில் முக்கிய பாத்திரம் வகித்தனர். இவ் ஒப்பந்தத்திற்கு எதிராக தென்னிலங்கையில் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டு இளைஞர்களை வேகமாக அணிதிரட்டினர். இவர்கள் செயற்பாடுகள் மீண்டும் உத்வேகம் பெறத்தொடங்கின. கொடூரம்மிக்க பீதியான நாட்களான அவை இருந்தன.

**தொடரும்**

## யாழ்ப்பாணத்துக்.........

12ம் பக்கம் தொடர்ச்சி

தை வைத்துப் பிழைப்பு நடத்தும் சக்திகளைத் திகிலடையச் செய்துள்ளன.

பெரும்பாலான பல்கலைக் கழக மாணவர்கள் அல்லது பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்களோ இத்தகைய நடவடிக்கைகளில் ஆதரவாக இல்லை என்பதே உண்மையிலும் உண்மை.

ஹர்த்தால் நடத்தக்கோரி வர்த்தகர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் வன்முறைகளைப் பிரயோகிப்பது யாழ் பல்கலைக்கழகத்தின் 25வருட பாரம்பரியத்தில் இல்லை எனலாம்.

தடிகள் பொல்லுகளுடன் சில மாணவர்கள் ஊர்வலம் சென்றதாக அறிய முடிகிறது. வீதியில் கடலை விற்கும் மூதாட்டி ஒருவர் சாவகச்சேரியில் இவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

யாழ் டிப்போவில் போக்குவரத்துச்சபை ஊழியர்கள் அதிகாரிகள் மிரட்டப்பட்டுள்ளனர். இச் சம்பவங்களுக்கும் பல்கலைக்கழகத்துக்கும் சம்பந்தமில்லை. ஆனால் ஒருசிலர் பல்கலைக்கழகத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முனைகின்றனர்.

பச்சிலைப்பள்ளிக்குச்சென்று வந்த யு.என்.எச்.சி.ஆர் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் அதிகாரிகள் தமக்குச் சாதகமாக அறிக்கை விடவில்லை. என்பதற்காக இவர்கள் விசனமடைந்து இருக்கிறார்கள்.

அடுத்த விடயம் மத ஸ்தாபனங்கள் மதசமூக நல்லிணக்கத்துக்கு வழிகாட்ட வேண்டும்,

எவ்வாறு நத்தார் ஆங்கில புதுவருட தினங்களில் சண்டைகள் நடைபெறாமல் இருக்க வேண்டும், அமைதி நிலவ வேண்டும் என்று நல்ல விடயங்களைச் சிந்திக்கின்றார்களோ அதேபோல் தமிழ்-சிங்கள புதுவருடத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் எவ்வாறு பரஸ்பரம் மதசமூக உணர்வுகளை மதித்து நடக்கும் பாரம்பரியம் பன்னெடுங்காலமாகவே நிலவி வருகிறது.

துரதிஸ்டவசமாக 1990 இல் முஸ்லிம் மக்கள் யாழ், குடாநாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டது அபகீர்த்திமிக்க விடயமாகும். அவர்கள் திரும்பவும் யாழ் மண்ணில் குடியேற வேண்டும். அனைத்து மக்களும் மகிழ்ச்சியாக வாழும் காலம் உருவாக வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com






சூதாட்ட விளையாட்டுகள் என சில விளையாட்டுக்கள் இருப்பதையும் அந்த விளையாட்டுக்கள் இடம் பெறும் இடங்களுக்கு நல்லவர்கள் போகக்கூடாது என்று நம்மூர்களில் பெரியவர்கள் சொல்லுவதையும் அனைவரும் அறிவோம். பொதுவாக எமது தேசங்களில் மட்டுமல்ல உலகம் பூராவும் அவ்வாறான அபிப்பிராயமே நிலவுகின்றது.

இன்று சூதாட்டத்துக்கு என்று சில விளையாட்டுக்கள் இருந்தது போய் இப்போது விளையாட்டுக்களிலெல்லாம் சூதாட்டம் புகுந்து கொண்டுள்ளது. பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்பார்களே! அதுதான் திறமையான விளையாட்டு வீரர்களிடையேயும் நடக்கிறதா?

தற்போது விளையாட்டு உலகில் பரப்பரப்பாக பேசப்படும்-எழுதப்படும்-வெளியிடப்படும் விடயம் கடந்த பல ஆண்டுகளாக தென்னாபிரிக்கக் கிரிக்கெட் குழுவுக்குத் தலைமை தாங்கிப் பல சாதனைகளைப் புரிந்து தனது நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த ஹான்சி குரொஞ்ஞே கிரிக்கெட் சூதாட்டக்காரர்களிடம் பணம் பெற்றுக்கொண்டார் என்ற குற்றச்சாட்டே அதுவாகும்.

இந்த விடயம் அண்மைய பல நாட்களாக இந்தியா மற்றும் தென்னாபிரிக்கப் பத்திரிகைகளில் முதன்மையானதொரு விடயமாக இருப்பது மட்டுமல்ல உலகம் பூராவும் விளையாட்டுத்துறை சார்ந்த.விளையாட்டுத்துறையின் மீது ஈடுபாடுகொண்ட அத்தனை பேர் மத்தியிலும் விசனத்தோடும் விமர்சனத்தோடும் பேசப்படும் விடயமாக உள்ளது.

பாகிஸ்தானிய கிரிக்கெட் குழுவினின் திறமையின் மீது எவருக்கும் சந்தேகமில்லை. எனினும் அவர்களின் நேர்மையின் மீது பல சந்தேகங்கள் கடந்த பல ஆண்டுகளாக நிலவி வருகின்றன. பந்தைச் சுரண்டி விளையாட்டு மோசடி செய்வது அவர்களுக்கே உரிய கலை என விமர்சிக்கப்பட்டிருக்கின்றது. அவுஸ்திரேலியாவுடனான கிரிக்கெட் வீரர்களைப் பாகிஸ்தான் கிரிக்கெட்காரர்கள் பணம் கொடுத்து தமக்கு சாதகமாக்கப் பார்த்தார்கள் என்று ஒரு தடவை குற்றச்சாட்டு கிளப்பப்பட்டு அது வாதப்பிரதிவாதங்களுக்கு உள்ளாக்கப்பட்டு பின்னர் அது அடங்கியது.

பாகிஸ்தானில் குதிரைப்பந்தயத்துக்கு பணம் கட்டுவது போல கிரிக்கெட் விளையாட்டின் மீது பந்தயப்பணம் கட்டுவதும் அங்கு பரவலாக நடைபெறுகிறது. இந்தப்பந்தயத்தை நடத்துபவர்களிடமிருந்து பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பணம் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பல தடவைகள் கிளப்பப்பட்டிருக்கின்றது பாகிஸ்தானே கிரிக்கெட் குழுவின் முன்னை நாள் தலைவர் (கப்டன்) ஒருவர் கூட இக்குற்றச்சாட்டைக் கூறி இருக்கிறார் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் அவுஸ்திரேலியர்களிடமிருந்து பணம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டை அடுத்தடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன்கள் மாறி மாறிக் கூறி வருகின்றனர். பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பற்றி இவ்வாறு நிலவும் சந்தேகங்கள் தொடர்பாக-அது வழமையாகிப் போய் விட்டதனால் யாரும் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை.

1996ம் ஆண்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று, அர்ஜுன்சிங் காங்கிரசில் சேர்ந்து அரசியலில் நுழைந்து. அந்த ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலின்போது டெல்லித் தொகுதியில் போட்டியிட்டுத் தோற்று. பின்னர் அரசியலையும் விட்டு ஒதுங்கி இப்போது தான் உண்டு தனது சொந்த வியாபாரங்களுண்டு என இருந்துவரும் மனோஜ் பிரபாகர் முன்னர் ஒரு தடவை இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் சாடைமாடையாக கிரிக்கெட் சூதாட்டக்காரர்களிடமிருந்து பணம் பெறுகிறார்கள் என்ற குற்றச் சாட்டை வீசினார் அது இந்திய அரசாங்க வட்டாரத்திலும் விளையாட்டுத்துறையில் ஈடுபாடு கொண்டோர் மத்தியிலும் பெரும் அதிர்ச்சி அலையைத் தோற்றுவித்தது.

கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் ஒரு மித்த குரலில் அந்தக் குற்றச்சாட்டுக்கு விசாரணை தேவை என்றனர். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுக்குழுவும் ஒரு சுதந்திர விசாரணை அமைப்பை உருவாக்கியது. அவ்விளையாட்டுக்குழு மனோஜ் பிரபாகர் மீது கேள்விகள் மீது கேள்விகளை தொடர்ந்து துளைத்தெடுத்தது. கடைசியாக மனோஜ் பிரபாகர் மிகத்திறமையான பந்துவீச்சாளராக இருந்தார் என்று கூறமுடியாது.

ஆனால் மிகப்பிரபலமான உலக பந்துவீச்சாளர்களில் ஒருவராக அவரிருந்தார். இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் சூதாட்டக்காரர்களிடமிருந்து பணம் பெறுகிறார்கள் என் பொதுவாகவும் எழுந்தமானமாகவும் கூறிய மையானது மனோஜ் பிரபாகர் தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டதாகவே அமைந்தது.

ஆனால் இங்கு இப்போது தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித்தலைவர் ஹான்சி குரொஞ்ஞேயின் நிலை அதுவல்ல. இவர் கிரிக்கெட் அணியிலிருந்து மட்டுமல்ல இனி மேல் கிரிக்கெட் விளையாடுவதிலிருந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கான மாதாந்த சம்பளக் கொடுப்பனவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



இங்கிலாந்து, சிம்பாப்வே மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் தொடராக நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்பயணங்களை முடித்துக் கொண்டு தென்னாபிரிக்கா கிரிக்கெட் வீரர்கள் தமது நாடு திரும்பிய வேளையிலேயே இப்பரபரப்பு ஏற்படுத்தப்பட்டது.

குரொஞ்ஞேயின் நண்பரும் தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவருமான டாக்டர் பச்செர் அவர்களே இந்தியாவைச் சேர்ந்த கிரிக்கெட் சூதாட்டக் காரர்களிடமிருந்து ஹான்சி குரொஞ்ஞே சுமார் 10,000 தொடக்கம் 15,000 டொலர்களுக்கு இடைப்பட்ட ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டார் என்ற செய்தியை வெளியிட்டதன் தொடர்விளைவாகவே இவ் அதிர்ச்சிகரமான பரபரப்புக்கள் உருவாகின.

இந்தச் செய்தி வெளியானதும் ஊழல் மோசடி தொடர்பான விசாரணைகள் செய்யும் டெல்லிப் பொலிஸ் பிரிவு உஷார் படுத்தப்பட்டது. தீவிர விசாரணைகள் தொடங்கின.

டெல்லிப் பொலிசாரின் குற்றப் புலனாய்வுப் பிரிவு இவ்விடயம் தொடர்பாக சஞ்சய் சாவ்லா எனும் வர்த்தகர் ஒருவரையும், ராகேஸ் கால்ரா எனும் தொழிலதிபர் ஒருவரையும் பம்பாய் சினிமாக் களத்தின் நடிகராகவும் சினிமாத் தயாரிப்பாளராகவும் இருக்கும் கிஷென்குமார் என்பவரையும் டெல்லிப் பொலிஸார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

இவர்கள் டெல்லியில் பல முதலாளிகள். வர்த்தகர்கள் மற்றும் வகையான பணக்காரர்களுடன் கிரிக்கெட் பந்தயம் தொடர்பாகப் பேசியுள்ளனர். அதன் விபரங்கள் கிடைத்துள்ளன பொலிசார் கூறுகின்றனர்.

சஞ்சய் சாவ்லா கடந்த டிசம்பரில் குரொஞ்ஞியை தென்னாபிரிக்காவில் சந்தித்தார் என்றும் அதன்பின்னர் தொடர்ந்தும் தொடர்பில் இருந்தார் என்றும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ராகேஸ் கால்ரா பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

சஞ்சய் சாவ்லா தெற்கு டெல்லியில் உள்ள ஜங்புராவில் வசிக்கிறார். டெல்லியின் புறநகர்பகுதியில் அமைந்துள்ள நொய்டா எனப்படும் பாரிய கைத்தொழிற் பேட்டையிலேயே சாவ்லாவின் தொழிற்சாலை அமைந்துள்ளது.

விசாரணை தொடர்பாக பொலிசார் சாவ்லாவின் வீடு, தொழிற்சாலை எங்கும் மிகத் தீவிரமான தேடுதல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

சஞ்சய் சாவ்லா டெல்லியிலும் தென்னாப்பிரிக்காவிலும் பலருடன் பேசிய தொலைபேசி அழைப்புக்கள் பதியப்பட்டுள்ள ஒலி நாடாக்களின் பிரதியொன்று தென்னாபிரிக்க விசாரணை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இது தொடர்பாக தென்னாபிரிக்காவில் தொழிற்பட்ட கிரிக்கெட் சூதாட்ட முகவர்களைத் தேடி தென்னாபிரிக்கப் பொலிசார் வலைவிரித்து வருகின்றனர்.

குரொஞ்ஞி பணம் பெற்றுக்கொண்ட விபரம் வெளி உலகுக்குத் தெரியவந்தபோது அதனை முதலில் முற்றாக மறுத்த குரொஞ்ஞி பின்னர் அதனை ஒப்புக்கொண்டார். ஆனால் அந்தப் பணம் தனது கிரிக்கெட் விளையாட்டுடனோ அல்லது தனது கிரிக்கெட் அணியின் விளையாட்டுடனோ சம்பந்தப்பட்டதல்ல என்றும் பணத்தை அடிப்படையாகக் கொண்டு எந்தக் கட்டத்திலும் தான் விளையாடவில்லை என்றும் தான் எப்போதும் தனது விளையாட்டில் நேர்மையாகவும் உண்மையாகவும் இருந்து வந்துள்ளதாகவும் கூறுகிறார்.

தான் தனிப்பட்டரீதியில் . சில தனிநபர்களிடம் வைத்திருந்த தொடர்பு இப்போது தவறாக வியாக்கியானம் செய்யப்படுகின்றது என்றும். தனிப்பட்ட ரீதியாக ஏற்பட்ட இந்த 'நட்புத்' தொடர்புகள் இவ்வாறு பூதாகாரமான பிரச்சினைக்கு உள்ளாகும் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும், இது தன்னுடைய கணிப்பீட்டு தவறின் விளைவே என்றும் குரொஞ்ஞி கூறுகிறார்.

இந்தத் தனிப்பட்ட நபர்கள் கிரிக்கெட் பந்தயத்தொழில் செய்வோர் என்பதனை ஹான்சி குரொஞ்ஞி நன்கு தெரிந்து வைத்திருந்தார் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவுடன் விளையாடுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் இங்கிலாந்து, சிம்பாப்வே ஆகிய நாடுகளின் கிரிக்கெட் அணிகளுடன் தென்னாபிரிக்க அணி விளையாடிக்கொண்டிருந்த போது கிரிக்கெட் பந்தயத் தொழில் புரியும் தென்னாபிரிக்கர் ஒருவர் தன்னுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் பின்னர் இந்தியாவில் இந்திய கிரிக்கெட் அணியுடன் விளையாடிக்கொண்டிருந்த வேளையிலும் அந்த தென்னாபிரிக்கர் தன்னுடன் தொடர்பு கொண்டார் என்றும் குரொஞ்ஞி தகவல் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு தன்னுடன் தனிப்பட்ட ரீதியில் கைபிடித்தவர்கள் என்ற அடிப்படையில் அடுத்து வரும் விளையாட்டுக்களை தமது அணியில் இடம்பெறுவோரின் பெயர்கள் மற்றும் விபரங்களை முன்கூட்டியே இந்தப்பந்தயக்காரர்களுக்கு தகவல் தெரிவித்திருக்கிறார் என்பதுவும் அது தொடர்பாகவே அப்பந்தயக்காரர்கள் குரொஞ்ஞிக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்றும் அனுமானிக்க முடிகிறது.

ஆனால் பணத்தொகையின் அளவைப் பார்க்கையில் எதையும் நம்ப முடியாதுள்ளது 15,000 டொலர் என்பது குரொஞ்சிக்கு நேர்மையான முறையில் கிடைக்கும் ஒரு மாதத்திற்கான வருமானத்தையும் விடக்குறைவானதே. குரொஞ்ஞி ஒரு சோடை போகும் விளையாட்டுவீரர் அல்ல. மிகச்சிறந்த உலக கிரிக்கெட் வீரர். சிறந்த அணித் தலைவர். அவரின் விளையாட்டுத்திறமையின் மீது யாருக்கும் எந்தச் சந்தேகமும் இன்னமும் இல்லை.

இது பற்றிக்கூறும் குரொஞ்ஞி, எந்தக் கட்டத்திலும் எந்தவொரு கிரிக்கெட் வீரருடனும் விளையாட்டுக்குத் துரோகம் செய்யும்படி பேசியது கிடையாது என்றும் எந்தக் கட்டத்திலும் யாருக்காகவும் கிரிக்கெட் தொடர்பாக பணரீதியான பரிசுத் தொகையை எந்தவொரு தனிநபரிடம் அல்லது எந்தவொரு தனிநிறுவனத்திடமும் பெற்றுக்கொண்டதில்லை என்றும் கூறுகிறார்.

தான் ஒரு உண்மையான 'கிறிஸ்துவன் என்ற அடிப்படையிலேயே, தான் பணம் பெற்றுக்கொண்ட உண்மையை வெளிப்படையாக ஒப்புக் கொண்டதாகக் கூறுகிறார்.

தான் கூறியவாறான தொடர்புகள் வைத்திருந்தமையால் ஏற்பட்ட சிக்கலுக்காக தனது கிரிக்கெட் அணியினர், தென்னாபிரிக்க அரசாங்கம், தனது மனைவி மற்றும் குடும்பத்தினர் மொத்தத்தில் அனைத்து தென்னாபிரிக்கரும் தன்னை மன்னிக்கும் படியும், தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரனாகவும், அணித்தலைவனாகவும் விளையாடிய காலங்களை நினைத்து தான் பெருமைப்படுவதாகவும் கூறுகின்றார் குரொஞ்ஞி.

பணம் பெற்றுக்கொண்ட தகவலை வெளியிட்ட டாக்டர் பச்சர் (Dr. Bachar) குரொஞ்ஞி கொடுத்த தகவல்களுக்காக மட்டும்தான் பணம் பெற்றாரே தவிர கிரிக்கெட் பந்தயம் தொடர்பாக அல்ல என்கிறார். குரொஞ்ஞி பந்தயக்காரர்களினால் தொல்லைப் படுத்தப்பட்டதாகவும் இந்தியாவில் விளையாடிக்கொண்டிருந்த போது அவர் பணம் எதுவும் பெறவில்லை என்றும் கூறுகின்றார்.

எவ்வாறாயினும், உலகின் தலை சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்ட தென்னாபிரிக்காவுக்கு இது ஒரு தலைகுனிவே. தென்னாபிரிக்க வீரர்களையே விட்டு வைக்காத அளவுக்கு இந்தியாவில் கிரிக்கெட் சூதாட்டக்காரர்கள் செயற்படுகிறார்கள் என்றால் இந்திய கிரிக்கெட்காரர்களின் நிலை என்ன என்பதே இப்போது இந்திய விளையாட்டுத்துறையினின் கவலையாக உள்ளது.

பொழுது போக்குக்காகவும் மனச் சந்தோசத்துக்காவும் தொடங்கிய இந்த விளையாட்டுக்கள் பின்னர் பெயருக்கும் புகழுக்கும் என ஆகி அடுத்து நல்ல பணம் வருமானம் தரும் துறை என ஆகியது. அதுவரைக்கும் சரி. ஆனால் அது இன்று சூதாட்டமாகிக்கொண்டிருப்பது தான் கவலைக்குரியது.

குருச்சந்திரா

தொலைக்காட்சி வருவதற்கு முதலில் கிரிக்கெட் என்பது சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட சிறிய வீதத்தினரின் ரசிப்புக்குரிய ஒன்றாகவே இருந்தது. ஆனால் இன்று அதன் ரசிகர் தொகை பல மடங்கு அதிகரித்துள்ளது. திரையில் காட்டப்படும் மற்றொரு சினிமாவாக கிரிக்கெட் என ஆகியுள்ள இக்காலகட்டத்தில் அது சூதாட்டமாகுமாயின் எல்லாவகையிலும் அதன் மதிப்பை இழப்பது தவிர்க்க முடியாததாகும்.

வர்த்தக விளம்பர வாய்ப்புக்கள் கிரிக்கெட் வீரர்களின் மதிப்பை ஏற்கனவே குறைத்துள்ளன. இதில் சூதும் சேர்ந்துக்கொண்டால் இதன் மீது பெரும் ஈடுபாடு கொண்டிருக்கும் இன்றைய தலைமுறைக்கே இழுக்காகிவிடும்.

கிரிக்கெட்டில் இன்று சூதாட்டம் குடியேறத் தொடங்கிவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. கிரிக்கெட்டே சூதாட்டத்துக்கான ஒரு விளையாட்டுத்தான் என அஞ்சும் நிலையைத் தடுப்பது கிரிக்கெட் மீது ஈடுபாடு கொண்ட அனைத்து அரசுகளினதும், அனைத்து விளையாட்டு வீரர்களினதும் கடமையாகும்.

## நாட்டு நிலை........

06ம் பக்கம் தொடர்ச்சி

சாரி அரசியல் கட்சிகளின் கூட்டணியே அதுவாகும்.

நாடுமுழுவதும் அபிமானம் பெற்ற மனிதாபிமானம் மிக்க ஜனநாயகத் தலைமைச் சக்திகள் உருவாகுவதை விரும்பாதவர்கள் விஜயகுமாரணதுங்கவின் உயிருக்கு உலைவைத்தார்கள். அவரின் அடியையொற்றி சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி குறிப்பாகப் பெரும்பான்மையின மக்களின் பெரும் எதிர்பார்ப்புக்களோடு 1994இல் பதவியேற்றது.

மக்களின் எதிர்பார்ப்புடன் பெரும் ஆரவாரத்துடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் புலிகளால் முறியடிக்கப்பட்டது. தொடர்ச்சியான யுத்த சூழ்நிலையில் மக்களும் அரசும் எதிர்நிலையில் வைக்கப்பட்டார்கள். நம்பிக்கைகள் சரியத் தொடங்கின. சந்திரிகா அவர்களின் அரசும் அதிகாரத்தவ அமைப்பின் பல்வேறு சக்திகள் இழுத்த இழுப்புக்கெல்லாம் நெகிழ்ந்தே செயற்பட்டது.

சில சில பாராட்டத்தக்க அம்சங்கள் இருந்தாலும் உதாரணமாக அதிகாரப் பகிர்வு யோசனைகள் தொடர்பான விடாப்பிடியான உறுதி. மனித உரிமை ஆணைக்குழு அமைக்கப்பட்டது, வடகிழக்கின் அரச கட்டுப்பாட்டிலுள்ள சில பகுதிகளில் இயல்பு வாழ்க்கையைக் கொண்டு வருவதற்கான முயற்சி, பாரதூரமான மனித உரிமை மீறல்களைப் புரிந்த படையினருக்கு எதிரான கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டமை என்பன முக்கிய விடயம்.

ஆனால் இவையெல்லாவற்றிற்கும் அப்பால் பேரினவாத சக்திகள் அரசையும், தேசிய அரசியலையும் ஈடாடவைக்க முனைகின்றன. "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்பதுபோல் தேசிய அரசியல் கட்சிகள் என்று சொல்லப்படுகிற சிங்கள அரசியல் கட்சிகளால் விதைக்கப்பட்ட பேரினவாத விஷ வித்துக்கள் இன்று விருட்சமாகி பேயாட்டம் போடுகின்றன.

இச்சக்திகள் தோற்கடிக்கப்பட வேண்டுமானால் தற்போதைய சமாதான முயற்சிகள் எந்தவிதமான பிக்கலில் டுங்கலுமின்றி முன்கொண்டு செல்லப்பட வேண்டும். மேலும் இத்தகைய சக்திகளுக்கெதிரான செயற்பாடுகள் மூலம் சமூக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, சட்டரீதியாகவும் கடுமையாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

www.padippakam.com



# ரஷ்யாவின் புதிய ஜனாதிபதி விளாதிமிர் புட்டின்

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர், எழுபது ஆண்டுகளுக்கு மேல் ஒரே சோவியத் வல்லரசாக உருவாகி இருந்த அமைப்பானது மிக்கையில் கொர்பச்சோவின் 'பெரெஸ்ரோரொய்க்கா' வினால் சிதறிய குடியரசுகள் தனிநாடுகளாயின. இந்தக் குடியரசுகள் சோசலிச உறவு முறை, அரச கட்டுப்பாட்டுப் பொருளாதாரம், மையரீதியில் திட்டமிட்ட பொருளாதாரம், கூட்டுறவு விவசாயம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றெல்லாம் இருந்த சோவியத் குடியரசு உடைந்து பல நாடுகளாகியது மட்டுமல்லாது பொருளாதாரக் கட்டமைப்புக்களும் மாறின. திறந்த பொருளாதாரம், போட்டி உற்பத்தி நடவடிக்கைகள் இறக்குமதியில் தாராளமயமாக்கம், கட்டுப்பாடற்ற வெளிநாட்டு மூலதனம், வரையறையற்ற வெளிநாட்டுக் கடன் என பொருளாதாரச் சிந்தனைகள் மாறின.



சோசலிசப் பொருளாதாரத்தில் கட்டாய உழைப்பும், கட்டுப்பாடான விநியோகமும், திட்டமிட்ட மூலவள மற்றும் மூலதனப் பயன்பாடும் சோவியத்தை இராணுவ வல்லரசாகவும் பொருளாதார வல்லரசாகவும் வைத்திருந்தது.

ஆனால் தேர்தல் ஜனநாயக அரசியல் முறைமைக்கும், போட்டிச் சந்தைப்பொருளாதார முறைமைகளுக்கும் தம்மைத் தீடீர் மாற்றத்துக்கு உள்ளாக்கிக் கொண்ட பழைய சோவியத் குடியரசுகள் வெளிப்படையான பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாயின. பணவீக்கம், வேலையின்மை, பொருட்தட்டுப்பாடு, உணவுப்பற்றாக்குறை, கையிற்பணமின்மை என அந்நாடுகள் அல்லலுக்கு உள்ளாகின. முழுப்பொருளாதாரமுமே குழம்பிநின்றன.

கள்ள நாணயச்சந்தை, சூதாட்ட முதலீட்டு முறைகள், ஊழல், லஞ்சம் என மாபியாப் பொருளாதாரம் தலைதூக்கி ஆடியது. இந்த அல்லலுக்குள் அகப்பட்டுத் தவித்ததில் ரஷ்யா முதலிடம் வகித்தது.

-தேர்தல் ஜனநாயக ரஷ்யாவின் முதலாவது ஜனாதிபதியாக பத்தாண்டுகளுக்கு முன் போறிஸ் யெல்சின் மக்களின் அமோக வாக்குப் பலத்தில் ஜனாதிபதியானார். சோசலிச அமைப்பின் போது திறந்த பொருளாதார உலகின் நன்மை தீமைகளை அனுபவித்தறியாத பெரும்பான்மையான ரஷ்ய மக்கள் திறந்த பொருளாதாரம் தமக்கு எல்லாவற்றின் மீதும் சுதந்திரத்தைத் திறந்துவிடும் என்றே எதிர்பார்த்தார்கள்.

வாக்குறுதிகளை அள்ளி வழங்கி தேர்தலில் வெற்றி பெற்ற போறிஸ் யெல்சின் ரஷ்யப்பொருளாதாரம் எதிர்நோக்கிய நெருக்கடிகளுக்கு சரியான தீர்வு எதனையும் காண முடியாமல் திணறினார். மக்களின் குற்றச்சாட்டுக்களை மற்றவர் மேல் திருப்பிவிடும் வழியாக அடிக்கடி தனது பிரதமர்களை மாற்றி மாற்றி பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாதவர்கள் அப்பிரதமர்களே என்பதாக திசை திருப்பிவந்தவர்.

முதலாளித்துவத்துக்கு மாறினால் மூலதனங்களையும் உதவிகளையும் அள்ளி வழங்கத் தயாராக இருப்பதாக வாக்குறுதிகளை வழங்கிய அமெரிக்காவும் மேற்கு ஐரொப்பிய நாடுகளும் சந்தர்ப்பம் பார்த்து பேரம் பேசினவே தவிர ரஷ்யாவினை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்கவில்லை.


சோவியத் அமைப்பில் 1990களின் ஆரம்பத்தில் நெருக்கடி ஏற்பட்ட போது முதற்கட்டமாகப் பிரிந்து போன லத்வியா, லித்துவேனியா, எஸ்தோனியா ஆகிய நாடுகள் தம்மை மிக விரைவாக மேற்கு ஐரோப்பியப் பொருளாதாரத்தோடு இணைத்துக் கொள்ள முற்பட்டாலும் அவற்றினால் அது சாத்தியமாகாமற் போய்விட்டது.

கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளான ஹங்கேரி, போலந்து, செக் மற்றும் ஸ்லோவாக்கியா ஆகியன ஆரம்பத்தில் கலங்கிப் போயிருந்த போதிலும் ஒருவாறு அவை தம்மைச் சந்தைப் பொருளாதாரத்தோடு சுதாகரித்துக் கொண்டுள்ளன. அதே வகையான நாடுகளாகிய ருமேனியாவும், பல்கேரியாவும் இன்னும் தமது பொருளாதாரத்தை மேல் நோக்கி எடுத்துச் செல்ல முடியாமல் ஒடு தளத்திலேயே ஓடிக்கொண்டிருக்கின்றன.

சோவியத் யூனியனின் பகுதியாக இருந்த உக்ரேயின் நாடானது வளங்கள் வகையாக பலமான நாடு என்பதால் தன்னைத் தானே மீட்டுக் கொள்ளக்கூடிய ஆற்றலுடனேயே உள்ளது. முன்னர் பைலோ ரஷ்யாவாக இருந்து பெலாரஸ் ஆகியன தமது பொருளாதாரத்தை முன்னோக்கி இழுக்கும் முயற்சி நிலையிலேயே இன்னும் உள்ளன.

அதேவேளை சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து குடியரசுகளான ஜோர்ஜியா, கிர்கிஷ் குடியரசு, தஜிகிஸ்தான், துர்க்மேனியா, உஸ்பெஸ்கிஸ்தான், ஆர்மினியா மற்றும் அஜர்பைஜான் ஆகியன குறைந்த வளர்ச்சிகொண்ட விவசாயப் பொருளாதார நாடுகள் என்ற நிலையில் இருந்து மீள முடியா நிலையில் உள்ளன.

சோவியத் யூனியன் பிரிந்ததால் பிரிந்த நாடுகள் மட்டுமல்லாது அதனால் பாதிக்கப்பட்ட பிரதானமான நாடு ரஷ்யாவே. பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலும் போறிஸ் யெல்சின் தொடர்ந்து பத்து ஆண்டுகள் ஜனாதிபதியாக ஆட்சி நடத்தியமை யெல்சினின் அரசியற் திறன் என்றே கூறவேண்டும்.




யெல்சினின் சிறந்த வாரிசே இப்போது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் விளாதிமீர் புட்டீன். இவர் யெல்சினாலேயே அடையாளம் காட்டப்பட்டு முன்னணிக்குக் கொண்டவரப்பட்டவர் ஆவார்.

ரஷ்ய உளவுத்துறை (கே.ஜி.பி) யின் முன்னாள் அனுபவமும் திறமையும் மிக்க உத்தியோகத்தரான புட்டீன் அவர்கள் அனைத்து விடயங்களிலும் மிகவும். கடுமையானவர் எனக் கூறப்படுகின்றது. அரசியல் உலகில் இளமையானவரான இவர் தமது நிலைப்பாட்டில் உறுதியான தொனி உடையவர்.

செச்னியனியர்களுக்கு எதிரான போரில் அவர்களை முற்றாக அழித்துவிடுவதே வழி எனும் ரஷ்யக் கொள்கையில் உறுதியுடையவர் என்றே புட்டீன் தம்மைப் பற்றி அறிவிக்கிறார். அதேவேளை ரஷ்யப் பொருளாதாரத்தை மீள வளர்ச்சிப் பாதையில் கொண்டு வருவதற்கான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகவும் கூறுகிறார்.

உலகத் தலைவர்கள் குறிப்பாக மேலை நாடுகள் புட்டீனை மிகவும் அவதானமாகவே அணுகுகின்றனர், கூர்மையாக அவதானித்து வருகின்றனர்.

நீண்டகாலமாக அரச மான்யமாக இருந்துவரும் மின்சாரம் வழங்கும் சேவையை முடிவுக்குக் கொண்டு வந்து, மின்சாரம் பெறும் ஒவ்வொருவரும் பணம் செலுத்தியே பெறுகின்ற முறையைக் கொண்டுவர உள்ளார்.

இலாபமற்ற ரீதியில் இயங்கிவரும் நூற்றுக்கணக்கான அரசு துறைத் தொழிற்சாலைகளை மூடிவிடப்போவதாக அறிவித்துள்ளார்.

ரஷ்யாவில் குறிப்பிட்ட ஒரு சில பணக்கார முதலாளிகள் பொறிஸ் யெல்சின் ஆட்சி காலத்தில் இருந்து நாட்டில் நிலவி வரும் லஞ்சத்தையும் ஊழலையும் தமது சொந்த கொள்ளை லாபங்களுக்காகப் பயன்படுத்தி வருவதோடு, நாட்டிலிருந்து பெருந்தொகையான மூலதனம் வெளியேற்றிக் கொண்டும் இருக்கின்றனர். அவர்களை எவ்வளவு தூரம் விளதிமீர் புட்டீன் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார் என்பது இன்னமும் கேள்விக் குறியன ஒரு விடயமே. இந்த ஒரு மாபியாப் பொருளாதாரக் கொள்ளைக்காரர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராமல் ரஷ்யப் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியாது என்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்து.

புட்டீன் வெற்றியை வரவேற்று வாழ்த்துத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் செச்சினியாவின் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களையும், நடைபெற்ற யுத்தக் குற்றங்களையும் விசாரணை செய்ய சர்வதேச அமைப்பொன்றினை அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அமெரிக்காவும் மற்றும் மேற்கு ஐரொப்பிய நாடுகளும் ரஷ்யாவின் அரசியல் மீதும் அதன் பொருளாதாரத்தின் மீதும் தமது செல்வாக்கைப்பதித்துக்கொள்ள செச்னியாவைப்பகடைக் காயாகப் பயன்படுத்தவே முனைத்து கொண்டிருக்கின்றார்கள் என்பதே தெளிவு.

இதேவேளை ரஷ்யாவின் அரசியல் அரங்கில் கம்யூனிஸ்டுகளும் வலுவான நிலையிலேயே உள்ளனர். ரஷ்யப் பாராளுமன்றத்தில் அவர்கள் கொண்டுள்ள செல்வாக்கோடு ஒத்துச்செல்ல வேண்டிய கட்டாயமும் புட்டீனுக்கு உண்டு.

புதிய ரஷ்யாவின் இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி விளதிமீர் புட்டீன் வரலாற்றுக் சாதனையாளர் ஆவாரா? அல்லது பத்தோடு பதினொன்றா? என்பது இன்னும் சிலமாதங்களில் தெரியும். •

# நவாஸ்ஷெரிபுக்கு வழங்கப்பட்ட ஆயுள் சிறை

பாகிஸ்தானின் பிரதம மந்திரி நவாஸ்ஷெரிபுக்கு வழங்கப்பட்ட ஆயுள் சிறை ஜனநாயகத்தை நேசிக்கும் உலக சமுதாயத்துக்குப் பேரதிர்ச்சி ஏற்படுத்தும் விடயமாகும்.

தென்னாசியாவில் பாகிஸ்தான் ஒரு அபாயகரமான நாடாக உருவெடுத்துள்ளது. இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுவது மாமூலான விடயமாக இருந்தாலும் கூட, அணுவாயுதம் வைத்திருக்கும் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்பட்டிருப்பதுதான் இன்று மேலதிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியபோது அதனைச் சில பாகிஸ்தானியர்கள் இனிப்புக்கொடுத்து கொண்டாடியதையும், தேர்தல் மூலம் பதவிக்கு வந்த முன்னாள் பிரதமர் பெனாசிர்பூட்டோ அதனை வரவேற்றதும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தும் செய்திகளாகும்.

இத்தனைக்கும் இவரது தந்தையார் சுல்பிகார்அலி பூட்டோ இராணுவ சதிப்புரட்சி மூலம் பதவிக்கு வந்த சர்வாதிகாரி ஷியாவுல்ஹக்கினால் தான் தூக்கிலிடப்பட்டார். இவருடைய தந்தையாருக்கு நேர்ந்த துயரமான முடிவுதான் பாகிஸ்தானின் அரசியலில் பெனாஸிரின் தாயார் நுஷ்ரத் பூட்டோவிற்கும், இவருக்கும் அரசியலில் முக்கியத்துவம் பெறுவதில் அனுதாப அலையை ஏற்படுத்தியது எனலாம்.

ஆனால் பாகிஸ்தான் அரசியலில் தமது அன்றாட அரசியல் நலன்களுக்காகவும், ஊழல் குற்றம் சுமத்தப்பட்டுச் சிறையில் இருக்கும் தமது கணவரின் விடுதலையைக் கருதியும், இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதை இவர் வரவேற்றிருக்கக்கூடும்.

இலங்கையில் எவ்வாறு பேரினவாத அரசியல் மாறி மாறி பதவிக்கு வரும் அரசியல் கட்சிகளுக்கு உதவியதோ அதேபோல்தான் இந்திய விரோத போக்கையும், காஷ்மீர் விவகாரத்தையும் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், பாகிஸ்தான் முஸ்லீம் லீக்கும், இராணுவத்தினரும் தமது நலன்களுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். அதற்காக அடிப்படைவாதக் கூலிக்குழுக்களைப் பாகிஸ்தானிலும், ஆப்கானிஸ்தானிலும், காஷ்மீரின் உள்ளும் உருவாக்கி வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர்.



பாகிஸ்தானின் உளவு ஸ்தாபனம் ஐ.எஸ்.ஐ க்கும் இது விடயத்தில் கணிசமான பங்கு உண்டு. மும்பாயிலும், கோயம்புத்தூரிலும் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களிலும், இந்தியாவின் பல பாகங்களிலும் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களிலும் இந்த ஐ.எஸ்.ஐ இன் மறை கரங்கள் இருந்தன.



இந்தியாவைச் சீர்குலைக்க முயலும் சுக்குநூறாக உடைக்க விழையும் சர்வதேச சக்திகளின் முகவராகவே பாகிஸ்தான் தென்னாசியாவில் செயற்படுகிறது. சோவியத்யூனியனைத் துண்டுதுண்டாக உடைத்தவர்கள், யூகோஸ்லாவியாவைத் துண்டாடியவர்கள் தென்னாசியாவில் இந்தியாவை உடைப்பது அவர்களின் நீண்டகால கனவு. இந்தியாவின் சுதந்திரத்துக்காக மாபெரும் பங்களிப்பைச் செய்த பஞ்சாப்பில் காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கை இவர்களால்தான் தூண்டிவிடப்பட்டது. பெரும்பாலான பஞ்சாப் மக்கள் இதனை ஏற்றுக் கொள்ளாததால் அது வந்த வேகத்திலேயே அடிபட்டுப் போனது.

1947இல் நவ இந்தியா உருவாகுவது காலனி ஆதிக்கக்காரர்களால் விரும்பப்படாததால் பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது. நிலத்தொடர்பற்ற கிழக்குப் பாகிஸ்தான் மக்களை மேற்குப் பாகிஸ்தானின் சுரண்டலுக்கு உள்ளாக்கி அடிமைப் பிராந்தியமாக நடத்த முற்பட்டதன் விளைவு கிழக்குப் பாக்கிஸ்தான் இந்தியாவின் உதவியுடன் வங்கதேசமாகியது.

வங்கத்தின் விடுதலைக்காகப் போராடியவரும் வங்கச் சிங்கம் என அழைக்கப்பட்டவருமான முஜிபுரகுமான் வங்கத்தின் சுதந்திரத்தின் பின் முதலாவது பிரதம மந்திரி ஆனார். இந்த வங்கதேச விடுதலை பாகிஸ்தானிய இராணுவ வட்டாரங்களில் காழ்ப்புணர்வை ஏற்படுத்தி இருந்தது. பாகிஸ்தானின் இராணுவ ஜெனரல்கள் பலர் சரணாகதி அடைந்தது அவர்களுக்கு ஆயுட்கால அவமானமுமாகி இருந்தது.

சி. திருநாவுக்கரசு

வங்கதேசம் உருவாகிய பின்பும் பழைய பாகிஸ்தானில் இருந்த இராணுவ சதிப் புரட்சிப் பாரம்பரியம் அங்கும் உருவாகத் தவறவில்லை. சதிப்புரட்சியாளர்களினால் முஜிபுரகுமான் அவர்களும் அவரின் அரசியல் சகாக்களும் படுகொலை செய்யப்பட்டனர். முஸ்தாக் அகமது, சியாவுர்ரகுமான், எர்ஷாத் என அடுத்தடுத்து இராணுவ அதிகாரிகள் ஆட்சி பீடம் ஏறினர்.

ஆனால் மீண்டும் ஒன்றரைத் தசாப்தங்களுக்குப் பின் ஜனநாயக வழிக்கு வங்கதேசம் திரும்பியது. வங்க தேசத்தில் ஜனநாயக ஆட்சி உருவாகுவதில் இந்தியாவின் பங்களிப்பை யாரும் மறந்துவிட முடியாது.

சரித்திரம் திரும்பியது. இராணுவ சதிகாரர்களால் கொல்லப்பட்ட முஜிபுரகுமானின் மகள் ஷேக்ஹசீனா பிரதம மந்திரியாகத் தெரிவுசெய்யப்பட்டது வங்கதேசத்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களில் ஒரு முக்கிய நிகழ்ச்சி ஆகும்.

பாகிஸ்தானில்கூட இராணுவ சதிப்புரட்சிக்கு மத்தியில் இடைக்கிடை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுகள் உருவாகுவதுகூட பக்கத்தில் பலம் பொருந்திய ஜனநாயக நாடாக இந்தியா இருந்ததினாலேயே.

தென்னாசியாவில் 70 கோடி மக்களையும், பல நூற்றுக்கணக்கான மொழிகளையும், பல்வேறு கலாச்சாரங்களையும் பின்பற்றும் மக்கள் ஒரே தேசமாக வாழ்வது எல்லோரும் நாம் இந்தியர்கள் என்ற பெருமிதத்துடன் வாழ்வது உலகெங்கும் இல்லாத முன்னுதாரணமாகும்.

அங்கு நிலவும் இனமத முரண்பாடுகளும் பிரச்சினைகளும் நாம் இந்தியர்கள் என்ற உணர்வுகளுக்கு முன்னால் புறக்கணிக்கத் தக்கதே.

தொடர்ச்சி 10ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# சோக்கிரட்டீஸ்

**பிக்குகள் நோர்வேயின் தேசியக் கொடியை எரித்திருக்கிறார்களே?**

கே. இராஜேஸ்வரன்
ஹற்றன்.

இவர்களின் வேலையைப் பார்த்திருந்தால் அந்தப் போதிமாதவன் தனக்குத்தானே தூக்குக் கயிற்றை மாட்டியிருப்பான்.

இந்த நாடு குட்டிச் சுவரானது இந்தப் பிரகிருதிகளால்தான். இவர்களுக்குச் சரியானதைப் போதிக்க இங்குள்ள அரசியல்வாதிகளுக்குத்தான் திராணியில்லை. இது இந்த நாட்டுக்கு ஒரு தேசிய அவமானம். இத்தகைய அவமானத்தையிட்டுத் தங்களைப் பெருமைமிகு சிங்கள வீரர்களாக எண்ணும் தலைவர்கள் எவரும் அலட்டிக் கொள்வது கிடையாது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இலங்கைக்கு விஜயம் செய்த ராஜீவ் காந்தி அவர்கள் அணிவகுப்பில் வைத்துக் கடற்படை ஆள் ஒருவரால் தாக்கப்பட்ட போதும் அப்போதைய ஜே.ஆர். அரசு அதையிட்டு மனவருத்தப்படவில்லை.

இப்போது நோர்வேயின் தேசியக் கொடியை பிக்குகள் எரிக்கிறார்கள். அப்போதும் அதைப்பற்றி யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. இதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவும் இல்லை. இலங்கையில் ஜனநாயகம் என்பது பௌத்த சிங்கள ஜனநாயகமா? என எண்ணத் தோன்றுகிறது.

**கொழும்பில் நடைபெற்ற கம்பன் விழாவைப் பற்றி?**

இரா. கருணா
கொட்டாஞ்சேனை.

ஆனையிறவுத் தாக்குதல்களுக்கு மத்தியில் கம்பன் விழா கொழும்பு தமிழ் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. யுத்த போர் சூழலிருந்து சற்று விடுபட்டு வாழ்வோம் என்ற அங்கலாய்ப்பும் அதில் பிரதிபலித்தது. கொழும்பு தமிழர்களுக்கு ஆலயங்களை விட்டால் வேறு எந்தப் பொழுது போக்கும் கிடையாது.

**சிம்பாவேயில் உள்ள வெள்ளையர்களின் பண்ணையில் தாக்குதல் நடாத்தப்படுவது நியாயம்தானா?**

எஸ். நடராஜன்
திருகோணமலை.

நான்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேல் வெள்ளையர்களால் மதிக்கப்படாதவர்கள் தான் சிம்பாபேயின் கறுப்பின மக்கள். நியாயமான நிலப்பகிர்வு நடைபெற வேண்டும். சிம்பாபேயின் மக்களுக்கு வளமான நிலங்கள் பகிரப்பட வேண்டும். ஆனால் அதற்காகப் பல நூற்றாண்டுகளாக வெள்ளையர்கள் கறுப்பின மக்கள் மீது மேற்கொன்டது போன்ற அதே பாணியைப் பின்பற்றுவது சரியல்ல. அது கறுப்பின மக்களின் சகல நியாயங்களையும் தகர்த்துவிடும்.

சிம்பாபேயின் விடுதலைப் போராளியும் ஜனாதிபதியும் அனுபவமிக்க தலைவருமான றொபர்ட் முகாபே அடுத்த தேர்தலில் ஏற்படப்போகும் நெருக்கடிகளுக்காக மக்களின் உணர்ச்சிகளைக் கிளறுவது அவ்வளவு சரியல்ல.

**கியூபாவைச்சேர்ந்த சிறுவன் எலியனைக் கைப்பற்றி அவனது தந்தையிடம் ஒப்படைத்தது பற்றி?**

அ. சிவகுமாரன்
வவுனியா.

எலியனின் பிரச்சினை (ஒரேயொரு சிறுவன்) உலகின் பல்லாயிரக் கணக்கான மக்கள் மடிந்து கொண்டிருக்கும் போர்களைவிட. இயற்கை அனர்த்தங்களை விட முக்கியத்துவம் பெற்றது மேற்கிந்திய தொடர்புச் சாதனங்களின் தகவல் அளிப்பில் உள்ள போலித்தனத்தை வெளிப்படுத்தியது.

பேனைப் பெருமாளாக்கி விட்டார்கள். சிறுவன் கியூபாவைச் சேர்ந்தவன் கியூபாவிலிருந்து படகில் வந்து கொண்டிருக்கையில் படகு கவிழ்ந்து மரணத்தின் பிடியில் இருந்த சிறுவனை அமெரிக்கக் கடற்படையினர் காப்பாற்றினர். அன்றிலிருந்து அச்சிறுவனை வைத்து அமெரிக்கா கியூபாவுக்கு எதிரான அவதூறைப் பரப்பி வந்தது.

சிறுவனை தன்னிடம் ஒப்படைக்குமாறு சிறுவனின் தந்தை ஒரே பிடியாக நின்றதால் பிரச்சாரத்தை எடுப்பாக முன் கொண்டு செல்ல முடியவில்லை.

மியாமியில் உள்ள கியூபா எதிர்ப்பாளர்களான கியூபாக்காரர்களும் எலியனின் பிரச்சினையில் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது அவன் தந்தையிடம் சேர்ப்பிக்கப்பட்டு விட்டான். தந்தையிடமிருந்து பிள்ளையைப் பிரித்ததென்று புதிதாகப் பிரச்சினை எழும்பிவிடக்கூடாதே.

**பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் திரைப்படங்கள் இயக்கும் தீபாமேத்தா அவர்களின் நீர், நெருப்பு எல்லாமே வன்முறைகளை எதிர் நோக்கின. தற்போது நீர் நாயகி நந்திதாதாஸ் தீபாமேத்தாவின் ஒரு திரைப்படத்தில் எயிட்ஸ் நோயாளியாக நடிக்க உள்ளாராமே?**

எம். பாலா
மஸ்கெலியா.

மனித குலத்தின் அவலமான நோய் நிறைந்த பகுதிகளைப் பார்க்க விரும்பாதவர்கள், குப்பை மேட்டின்மேல் கம்பளம் விரித்து வாசனைத் திரவியங்களைப் பூசி வாழ்பவர்களுக்கு இத் திரைப்படம் ஜீரணிக்க முடியாததே.

**திலக் கருணாரட்ன, எஸ்.எல். குணசேகர அடங்கலாகப் புதிதாக முளைத்திருக்கும் பௌத்த சிங்களக்கட்சியினால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய சிக்கல் என்ன?**

ச. யோகராஜா
யாழ்ப்பாணம்.

நாடு பிரிவதாக இருந்தால் அதற்கு இவர்களும் கணிசமாகப் பங்களிப்பார்கள். சிங்கள இனமும், பௌத்த மதமும் என்ற கருத்து மாத்திரம் இங்கு முதன்மை பெற வேண்டும் என்று கருதினால் இந்த நாட்டில் வாழும் ஏனைய இன மக்கள் தமக்கென அரசுகள் பற்றிச் சிந்திப்பதும் நியாயமானதே. தடை செய்யப்பட வேண்டிய கட்சி. ஆனால் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே.

**பாதுக்கையில் ஒரு இந்து பூசகர் ஒருவர் ஓடிச் சென்று பஸ்ஸில் ஏறினார் எனக் கைது செய்து பூணுலையும் அறுத்தார்களே?**

செல்வி. ந. தமிழினி
யாழ்ப்பாணம்.

இனிமேல் சிரிப்பது, வாயை அஸ்டகோணலாக்குவது, மறைவிடத்தில் சிறுநீர் கழிக்கச் செல்வது, வியர்வை தாங்காமல் சொறிவது எல்லாமே பிரச்சினையாக வரும்.

பஸ் நிலையத்தில் நின்ற சில அதி புத்திசாலிகளின் தகவலையடுத்தே பொலிசார் இவரைக் கைது செய்தார்கள். போதாக் குறைக்குப் பூணூலையும் அறுத்தார்கள்.

இத்தனைக்கும் மலையக அம்மன் கோவில் ஒன்றின் பூசகர் இவர். வருடப்பிறப்பன்று அந்தக் கோவிலில் பூசை நடைபெற வில்லை. ஏனெனில் பூசகர் அன்று பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இலங்கையின் சட்டம் ஒழுங்கு எவ்வளவு முட்டாள்தனமும், குரோதமும் கொண்டதாக இருக்கிறது. என்பதற்கு இச் சம்பவமும் ஒரு எடுத்துக்காட்டு.

**மட்டக்களப்பில் பத்திரிகையாளர் வீட்டுக்கு கைக்குண்டு வீசப்பட்டதே?**

டேவிட் இமானுவேல்
மட்டக்களப்பு.

மாற்றுக் கருத்துக்களை அழிக்கும் கலாச்சாரத்தின் ஒரு பிரதிபலிப்பு. இந்தக் கலாச்சாரத்துக்கு வித்திட்டவர்கள் யார் என்பதை ஒரு கணம் சிந்திப்பது நல்லது. நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்.

**திருமலை மக்சேசர் விளையாட்டு அரங்கில் இடம் பெற்ற குண்டு வெடிப்பை யார் செய்திருப்பர்?**

செல்வி.த. சுசிலாதேவி
திருகோணமலை.

மக்களின் மனங்களில் மகிழ்ச்சி ஒரு கணமேனும் குடி கொண்டுவிடக்கூடாது என நினைக்கும் யுத்த வாதிகள் எமது நாட்டில் நிறையப்பேர் இருக்கிறார்களே.

**கடந்த கால் நுற்றாண்டுகளில் பாகிஸ்தானின் அரசியலில் ஜனநாயகம் எப்படி இருக்கிறது?**

வி. தட்சணாமூர்த்தி
அகதி முகாம். தமிழ்நாடு.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதமர் தூக்கில் இடப்பட்டார். இன்னொருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. எல்லாமே இராணுவம்.

**படையினரின் மனநிலை தற்போது எப்படி இருக்கிறது?**

வேணுகோபால்
இலண்டன்

குடா நாட்டில் ஆனையிறவில் என்ன நடந்ததென்பது இன்னும் முழுமையாகத் தெரியவில்லை. மட்டக்களப்பில் விடுமுறையில் செல்லும் பொலிசாரும் படையினரும். நித்திய கண்டம் என்ற நிலையில் இருக்கிறார்கள். இந் நிலையில் மனோநிலையைப் பற்றிச் சொல்லத்தான் வேண்டுமா? ●

# நவாஸ்ஷெரிபுக்கு.......

09ம் பக்கம் தொடர்ச்சி

அது மதச்சார்பற்ற நாடாக இருப்பதும் தென்னாசியாவில் ஒரு முக்கியமான அம்சமாகும். தென்னாசியாவில் நடைமுறையில் மதரீதியான இனரீதியான நாடுகளாகவே பெரும்பாலான நாடுகள் இருக்கின்றன. அரசியல் அமைப்பில்கூட அந்த நாடுகளில் இருக்கும் பல்வேறு இன மக்களையும் கருத்திற்கெடுக்காத போக்கு இருக்கிறது.

உண்மையில் இந்தியாவுக்கு நல்லதொரு அடித்தளம் அதன் சுதந்திரப் போராட்டத்துக்கூடாகவே இடப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்டம் இந்தியாவின் பல்வேறு இன மத கலாச்சாரத்தைப் பின்பற்றும் மக்களையும் இந்தியர்களாகவே சிந்திக்க வைக்கிறது.

பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்கள் பாகிஸ்தானை ஒரு இஸ்லாமியக் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தினார்கள். இது காஷ்மிர் பிரிவினைவாத சக்திகளுக்கும் உற்சாகத்தைக் கொடுத்தது. பாகிஸ்தான் மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும் இது தடையாக அமைந்தது. பெண் அடக்குமுறை தீவிரமடைந்தது.

இந்தியாவினுள் மத அடிப்படைவாதம் தலைதூக்கினாலும் அதனை இந்தியா சகித்துக்கொள்ளாது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதை இந்தியா தேசிய அவமானமாகவே இன்றும் கருதுகிறது. அது போன்ற இந்துத்துவ அடிப்படை வாதத்திற்கு எதிராக இந்தியாவின் உள்ளேயே மக்களின் விழிப்புணர்ச்சி இருக்கிறது.

ஆனால் பாகிஸ்தானில் இந்திய விரோத, இந்து விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கோ செயற்படுவதற்கோ எந்த பொறிமுறைகளும் இல்லை.

பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டதன் பின் அது அரசியலற்ற கொள்கையற்ற நாடாக மாற்றப்பட்டது. சில ஆக்கபூர்வமான சக்திகள் இருந்தாலும் அது பலவீனமாகவே இருந்தன.

ஆபிரிக்க கண்டத்தில் நிற வெறிக்கு எதிராக தென்னாபிரிக்கா, தென் மேற்கு ஆபிரிக்கா, சிம்பாபேயின் போராட்டங்களுக்கு ஆதரவளித்த நாடு இந்தியா.

மத்திய கிழக்கில் பாலஸ்தீனத்தின் விடுதலை, ஈராக் மீதான அமெரிக்க அழுத்தங்கள் தொடர்பாக தீவிர கரிசனை காட்டி வரும் நாடு இந்தியா.

சுதந்திரத்தின் பின்னான உலகில் பல்வேறு நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களுக்கு ஆதரவளித்த நாடு இந்தியா!

உலகின் சோஷலிச நாடுகளுடன் உறவு வைத்திருந்ததிலும், அணி சேரா அமைப்பை உருவாக்குவதிலும் கணிசமான பங்களிப்பை வழங்கிய நாடு இந்தியா.

மாறிவரும் உலகப்போக்கிற்கு ஏற்ப இந்தியா தன்னைத் தகவமைத்துள்ளது. சார்க் அமைப்பைப் பலப்படுத்துவதில் தீவிர அக்கறை செலுத்துகிறது.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், தென்னாசியாவிலும் இந்திய அளவிலும், சர்வதேச ரீதியாகவும் மனித குலத்தின் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை வகுத்துச் செயற்படுகிறது.

இன்று பாகிஸ்தானில் நிகழ்ந்துள்ள சமூக அரசியல் மாற்றங்களும், பாகிஸ்தானின் கையில் அணுகுண்டு இருக்கிறது என்ற யதார்த்தமும், குரங்கின் கைப்பூமாலை என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது.

பாகிஸ்தானின் கையிலிருக்கும் அணுசக்தி பாகிஸ்தானின் சமூக பொருளாதார மறுமலர்ச்சிக்குப் பயன்படுமாக இருந்தால் அது பற்றி யாரும் கேள்வி எழுப்பப் போவதில்லை. ஆனால் அது தென்னாசியாவின் மானிட வாழ்விற்கும், கலாச்சாரக் கருவூலங்களின் அழிவுக்கும் வழி கோலி விடக்கூடும்.

பாகிஸ்தானின் பிரதம மந்திரி முசாரப் ஆட்சியைக் கைப்பற்றிய விதம் சகல தார்மீக நெறிமுறைகளுக்கும் முரணானதாகும். இலங்கையின் சுதந்திரதின நிகழ்ச்சிகளில் பங்குபற்றிவிட்டு நாடு திரும்பிய தான் பயணம் செய்த விமானத்தைத் தரையிறங்க விடாது தடுத்தது, தன்னைக் கொலை செய்யச் சதி செய்தது என்று கூறியே ஆட்சியைக் கைப்பற்றினார். பாகிஸ்தானின் அரசியலில் இது ஒன்றும் புதிதில்லை என்றாலும் காரணங்கள் மிக மிக பலவீனமானவையே.

இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் முதலில் அதிர்ச்சி தெரிவித்த அமெரிக்கா பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது.

இந்தியாவுடனான தகராறுகள் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்க்கப் படுமென்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்ததும் அமெரிக்கா முசாரப்க்கு எதிரான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதற்கான காரணத்தைப் பெற்றுக்கொண்டது.

நவாஸ்ஷெரிப்பின் வழக்கறிஞர் சுட்டுக்கொல்லப்பட்டபோது கடும் ஆட்சேபனை தெரிவித்தது.

இறுதியாக நவாஸ்ஷெரிபுக்கு மரணதண்டனை விதிக்காது ஆயுள் தண்டனை விதித்ததற்கு மகிழ்ச்சியும் தெரிவித்தது. இதில் மகிழ்ச்சியடைய அமெரிக்க ஜனநாயகவாதிகள் எதைக் கண்டார்கள் என்றுதான் விளங்கவில்லை.

ஆனால் நவாஸ்ஷெரிபுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை இந்தியப் பத்திரிகைகளும் ஏனைய மீடியாக்களும் கடுமையாக விமர்சித்திருந்தன.

பாகிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் இராணுவ நெருக்கடி அமெரிக்காவைப் பகிரங்கமாக பாக்கிஸ்தானுக்கு ஆதரவாகச் செயற்பட முடியாத நிலையைத் தோற்றுவித்தது.

அதேவேளை பாகிஸ்தானில் இந்த நெருக்கடி ஏற்படுவதற்கு இந்தியாவில் காஷ்மிர் பகுதியான கார்ஹிலில் ஊடுருவல் நடத்தப்படுவதற்காக இராணுவத்தினருடன் தமது தனிப்பட்ட அரசியல் இலாபம் கருதிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதும், செயற்பட்டதும் கார்ஹிலில் ஊடுருவல் செய்ய ஆசிர்வாதம் வழங்கி தாங்களே வாபஸ்பெற வேண்டிய நிலை ஏற்பட்டதும் அடிப்படைவாதிகளுக்கு ஏமாற்றத்தையும் ஏற்கனவே பலவீனமாகி இருந்த பாகிஸ்தான் ஜனநாயகத்தில் இராணுவத்துக்குச் சாதகமான சூழ்நிலையையும் தோற்றுவித்திருக்கலாம்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நல்லுறவுச் சமிக்ஞையாக டில்லியிலிருந்து லாகூருக்கு இந்தியப் பிரதமர் வாஜ்பேயி அவர்கள் மேற்கொண்ட பஸ் பயணம் இந்திய - பாகிஸ்தான் உறவில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. பாகிஸ்தானிய இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. இதனை விரும்பாத சக்திகளின் அழுத்தத்திலிருந்தே கார்ஹில் ஊடுருவல், அடுத்து நடைபெற்ற நவாஸ்ஷெரிப் பதவி கவிழ்ப்பு. இப்போது நவாஸ்ஷெரிப் ஆயுள் தண்டனை அனுதாப அலையை திசைதிருப்ப குஜராத்தின் எல்லையில் பாகிஸ்தானின் படை குவிப்பு.

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்பட்டபின் பாகிஸ்தான் பகிரங்கமாக இனங்காட்ட முடியாத நிலையை அமெரிக்காவுக்கு உருவாக்கி விட்டிருந்தது.

இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி ஐந்து நாட்களை இந்தியாவில் செலவிட்டு, ஐந்து மணித்தியாலங்களையே பாகிஸ்தானில் செலவிட்டிருந்தார். இந்திய பாராளுமன்றத்தில் உரையாற்றிய பில்கிளிண்டன் காஷ்மிர் பிரச்சினை தொடர்பாகவும், அணுவாயுத தடை ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவது தொடர்பாகவும் இந்தியாவக்கு ஆலோசனை என்ற ரீதியிலேயே கூற முடிந்தது.

இவையெல்லாம் பாகிஸ்தானுக்குப் பலத்த ஏமாற்றத்தையே கொடுத்திருந்தது. பாகிஸ்தானில் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லை. ஆனால் உள்ளூராட்சித் தேர்தல்களை வெகு விரைவில் நடாத்த உள்ளதாக முசாரப் அறிவித்துள்ளார். தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடியும் எனவும், பாகிஸ்தானில் ஜனநாயகத் தேர்தல் நடைபெற்றது என உலகின் கண்ணில் மண்ணைத் தூவமுடியும் எனவும் இராணுவ ஆட்சியாளர் கருதியிருக்கக் கூடும்.

இந்தியா,பாகிஸ்தான் விவகாரத்தில் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வதாகவே உணர முடிகிறது. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான ரயில் சேவையை புதிய ரயில் பெட்டிகள் வழங்கப்படவில்லை, எஞ்சின்கள் மாற்றப்படவில்லை என்ற அற்ப காரணங்களைக் கூறி பாகிஸ்தான் ஒருதலைப்பட்சமாக நிறுத்திவிட முனைகிறது.

ஆனால் இந்தியா அந்த ரயில் சேவையை நடத்துவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. உறவுப் பாலத்தை ஏற்படுத்துவதில் இந்தியாவின் பக்கத்தில் நல்ல சமிக்ஞைகள் இருக்கின்றன. பாகிஸ்தான் அதனைப் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டுமே. ●

படிப்பகம்

www.padippakam.com



# சமாதான சகவாழ்வுக்கு..............

05ம் பக்கம் தொடர்ச்சி

பிராந்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள எந்தவொரு நிறைவேற்று அதிகாரத்தையும் கடமைகளையும் முழுமையாகவோ பகுதியாகவோ கைப்பற்றுவதற்கு எந்தவொரு மத்திய அமைச்சருக்கும் அல்லது மத்திய அரசின் நிர்வாகிக்கும் அதிகாரம் கிடையாது.

ஒவ்வொரு பிராந்திய அரசையும் அந்த பிராந்தியத்துக்கு வெளியே இருந்து வரக்கூடிய ஆக்கிரமிப்புக்கு எதிராகவோ அல்லது அந்தப் பிராந்தியத்தின் உள்ளே ஏற்படக்கூடிய குழப்பங்களுக்கு எதிராகவோ பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், ஒவ்வொரு பிராந்திய அரசும் அரசியல் யாப்பின் விதிகளுக்கு அமைவாக செயற்படுதலை உறுதிப்படுத்தலும் மத்திய அரசின் கடமை ஆகும்.

உண்மையில், மத்திய அரசு தான் எதிர்நோக்கும் பிரச்சனைகளை சமாளித்து அரசியல் யாப்பில் சொல்லப்பட்ட அதன் பொறுப்புக்களையும், கடப்பாடுகளையும் நிறைவேற்றும் பொருட்டு பிராந்திய அமைப்பை அது பலப்படுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் பிராந்திய அரசு பலவீனப்படுமேயானால், அதனால் அந்தப் பிராந்திய மக்கள் பிராந்திய அரசிலிருந்து மட்டுமல்லாமல் முழுத் தேசிய அரச அமைப்புக்களிலிருந்தும் அந்நியப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு விடுவார்கள்.

ஒரு பிராந்தியத்தின் முதலமைச்சரோ, அமைச்சரவை முழுமையாகவோ அல்லது பிராந்திய சட்டசபையோ, குடியரசின் இறையாண்மைக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய விதத்தில் தங்கள் பதவிகளைத் துஷ்பிரயோகம் செய்து செயல்படுகின்றனர் என்று குடியரசுத் தலைவர் அபிப்பிராயப்படும் பட்சத்தில் குடியரசுத் தலைவர் அவரது அமைச்சரவையின் ஒப்புதலோடு அரசியல் யாப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து குறிப்பிட்ட பிராந்திய அரசாங்கத்தையோ அல்லது பிராந்திய சட்டசபையையோ அல்லது இரண்டையுமோ இடைநிறுத்தலாம்.

இதற்கான பிரகடனத்தைச் செய்த பின், குறிப்பிட்ட பிராந்திய அரசாங்கம் நீக்கப்பட வேண்டுமா அல்லது பிராந்திய சட்டசபை கலைக்கப்பட வேண்டுமா? அல்லது இரண்டும் செய்யப்பட வேண்டுமா? என்பதைத் தீமானிப்பதற்காக அந்த பிரகடனம் செய்யப்பட்டு 14நாட்களுக்குள் குடியரசுத் தலைவரினால், விசேடமாக அமைக்கப்படும் ஓர் உயர்மட்ட நீதிக்குழுவின் முடிவுக்கு விடப்படுதல் வேண்டும். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் ஒரு விசேட தீர்மானத்தின் மூலம் குறிப்பிட்ட பிராந்திய அரசாங்கம் நீக்கப்படுவது பற்றியும், பிராந்திய சட்டசபை கலைக்கப்படுவது பற்றியும் விவாதித்து முடிவு செய்தல் வேண்டும்.

குடியரசுத் தலைவரினாலோ அல்லது, விஷேட நீதிக்குழுவினாலோ அல்லது நாடாளுமன்றத்தினாலோ இடைநிறுத்த அறிவித்தலானது மீளப்பெறப்பட்டால், தெரிவு செய்யப்பட்ட பிராந்திய சட்டசபையும், பிராந்திய அரசாங்கமும் அவற்றிற்கு உரிய பதவிக்கால அளவு முடியும் வரை தொடர அனுமதிக்கப்படுதல் வேண்டும், இவ்வாறு செய்யும் போது அவை இடைநிறுத்தப்பட்ட காலம் கணக்கில் உள்ளடக்கப்படக் கூடாது.

ஆளுநர் ஆட்சி ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு மேல் நீடிக்கப்படுவதற்கும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும்.

### பிராந்திய அரசின் பொதுநிர்வாகம்

அ) ஒரு பிராந்தியத்தின் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஆளுநர் அந்தப் பிரதேசத்தில் உள்ள தேசிய நிர்வாக சேவை (National Administrative Service) உத்தியோகத்தர் மத்தியில் இருந்து பிரதம செயலர், அமைச்சகங்களுக்கான செயலர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், சபைகளின் தலைவர்கள், மாவட்டங்களின் நிர்வாகத் தலைவர்கள் ஆகியோர்களை நியமிப்பார்.

ஆ) தொழில் சார்ந்த அல்லது தொழில் நுட்பரீதியான திணைக்களங்களுக்கான நிறைவேற்றுத் தலைவர்கள், பிராந்திய சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களுக்கு அமைவாக எடுக்கப்படும் அமைச்சரவையின் முடிவுகளுக்கிணங்க அந்த பிராந்தியத்தில் அதற்கான துறைகளில் உள்ள ஆளணியிலிருந்து நியமிக்கப்படுவர்.

இ) பிராந்திய பொது நிர்வாக்கத்துக்கான ஏனைய நியமனங்கள் யாவும் பிராந்திய சட்ட சபையின் சட்டத்துக்கு அமைவாக பிராந்திய அமைச்சரவையின் முடிவின் பிரகாரம் தேசிய சேவைகளில் இருந்தோ அல்லது பிராந்திய சேவைகளில் இருந்தோ மேற்கொள்ளப்படும்.

### பிராந்திய நீதி நிர்வாகம்:

1) பிராந்திய அரசாங்கம் மாவட்டங்கள் மற்றும் அதற்கும் கீழானவையும், உத்தேச அரசியல் யாப்பில் கூறப்படாதவையுமான நீதி மன்றங்களை உருவாக்கி நிர்வகித்தல் வேண்டும்.

2) மாவட்ட நீதிமன்றங்களுக்கும் மற்றும் அவற்றிற்கும் கீழான நீதிமன்றங்களுக்குமான நீதிபதிகள் பிராந்திய நீதிச்சேவை ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் ஆளுனரால் நியமிக்கப்படுதவ் வேண்டும்.

3) ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒரு பிராந்திய நீதிச் சேவை ஆணையம் நிறுவப்படும், ஒரு பிராந்தியத்தில் நீதியை நிர்வகிக்கும் விடயங்களில் பிராந்திய அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்கும் அமைப்பாகவும் பிராந்திய அரசாங்கம் கலந்தாலோசிக்கும் அமைப்பாகவும் இவ்வாணைக்குழு செயல்படும். இந்த ஆணையம் பிராந்திய அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் ஆளுநரால் நியமிக்கப்படும்.

4) ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் உள்ளூர் மட்டத்தில் எழக்கூடிய தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்காக, பிராந்திய சட்ட ஆணையத்தினால் ஆக்கப்பட்டு நெறிப்படுத்தப்படும் சட்டவாக்கங்களின் கீழ் ஒவ்வொரு "கிராமிய நீதிநடுவர்கள் (ஜூனியர்) சபை" நிறுவப்படும்.

5) பிராந்திய நீதிச் சேவைகள் ஆணையத்தின் ஒப்புதலுடன் அந்தப் பிராந்தியத்தில் சமாதான நீதிவான்கள் நியமிக்கபடுவர் அல்லது நீக்கப்படுவர்.

### பிராந்தியத்தின் சட்ட மாஅதிபர்:
(Regional Attorney General / Advocate General)

அ) மத்திய அரசு மட்டத்தில் ஒரு சட்டமா அதிபர் (அற்றோர்னி ஜெனரல்) இருப்பது போல் பிராந்தியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சட்ட மா அதிபர் இருப்பார்.

ஆ) ஒரு பிராந்திய சட்ட மா அதிபரின் கடமைகளும் பொறுப்புக்களும் மத்திய சட்ட மா அதிபரினுடையவற்றையே ஒத்ததாகவே இருக்கும்.

இ) முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஒரு பிராந்தியத்துக்கான சட்ட மா அதிபரை ஆளுநர் நியமிப்பார்.

ஈ) ஒரு பிராந்தியத்தின் சட்ட மா அதிபர் அந்த பிராந்திய அரசாங்கத்தின் பிரதம வழக்குரைஞராக இருப்பார்.

உ) சட்ட மா அதிபர் தொடர்பான விடயங்கள் யாவும் பிராந்திய சட்ட சபையினாலேயே வரையறுக்கப்படுதல் வேண்டும். ●

# குறுக்கெழுத்துப் போட்டி - 03

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | ★ | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | ★ | 22 | 23 | 24 |
| ★ | 26 | 27 | 28 | 29 | 30 | ★ | ★ |
| 33 | 34 | 35 | ★ | 37 | 38 | 39 | 40 |
| 41 | ★ | ★ | 44 | 45 | ★ | 47 | 48 |
| 49 | 50 | 51 | 52 | ★ | 54 | 55 | 56 |
| 57 | 58 | 59 | ★ | ★ | 62 | 63 | 64 |

கீழுள்ள முகவரிக்கூப்பனை வெட்டி ஒட்டி தபாலட்டையில் மாத்திரமே எழுதி எதிர்வரும் 30ம் திகதிக்குள் அனுப்பிவையுங்கள்.

சரியான விடைகளை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்டசாலிக்கு ரூபா 200 அனுப்பி வைக்கப்படும். ஐந்து பேர் பாராட்டுப்பெற தேர்ந்தெடுக்கப்படுவர்.

CROSS WORD NO:03
KANNOTTAM
37/2, 1/1 Wimalasara Rd,
Kalubowila, Dehiwala.

### இடமிருந்து வலம்

1. தூரத்தே வெண்புறா சிறகொடிந்து போயிருந்தாலும், நல்லதொரு சகுனமாய் இதுகூட ஏற்படாதா என்ற ஏக்கம் இல்லாத இலங்கை சமூக மக்கள் யாரும் இல்லை எனலாம்.

9. பள்ளி வாழ்வில் விடுமுறை நாளென்றால் சொல்லவா வேண்டும். "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" அதனால், இதுவென்று பாடிக் குதூகலித்தார்கள். குழம்பியுள்ளது.

15. ஒருவரது தாய்மொழியில் எத்தனையோ அன்பான பண்பான வார்த்தைகள் இருக்க வன்மையாகக் கூறுதலை வள்ளுவர், இது இருக்க காய்களைப் பறிப்பது போலென்றார். இடம்மாறி வருகிறது.

22. சகல இன சமூக மக்களினதும் சுயகௌரவமும், உரிமைகளும் அரசியல் ரீதியாக மதிக்கப்பட்டால்தான், உண்மையான சமாதானம் உருவாகும். அப்போதுதான் இதுவும் நிலவும். இடம்மாறிள்ளது.

26. மக்களெல்லாம் மாண்டுபோனபின் வரும் தீர்வு, கண்களை விற்று இது வாங்குவது போல்தான். இடம்மாறியுள்ளது.

33. மோகத்தால் இது முற்றும் குலைந்து போன முனிவர்களும் உண்டு.

37. மறக்க முடியாதது முதல் "காதல்" மட்டுமல்ல, இதையும் தான்.

44. இந்த சம்பிரதாயச் சடங்குகூட எத்தனையோ மானிடர்க்கு கிட்டாமல் போனது. காணாமல் போனதால்.

49. கடவுளின் பெயரால் அர்ப்பணிக்கப்படுவது. குழம்பியுள்ளது.

54. ஒரே பொழுதில் நூற்றுக்கணக்கான பெண்களை இந்தக் கோலத்தில் ஆக்கிய வரலாறு இலங்கைச் சரித்திரத்துக்கு உண்டு. குழம்பியுள்ளது.

57. படிப்புக்கு அப்பால், அனுபவ அறிவால் சில வைத்தியர்களை இந்த "ராசி" க்காரர்கள் எனச் சொல்வதுண்டு.

62. தாரம் என்பதும் இன்னொரு தாய்தானே. அதனால்தான் இவருக்கப் பின் தாரம் என்றாரோ.

### மேலிருந்து கீழ்

1. எதிலும் செயற்கை. மரணத்திலும்! அதனால், இது பூரணமானது. ஆனால், நித்திய கண்டம். குழம்பியுள்ளது.

2. அறிவு, சிந்தனை, அனுபவம் இவற்றின் சாரமிது. இதைச் சொன்னதால் முன்னோரில் பல தத்துவஞானிகள் மரணதண்டனைக்கும் உள்ளானார்கள். குழம்பியுள்ளது.

3. அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, குள்ளநரிக்கும் உள்ளது.

4. இது, தவமிருந்தாலும் கிடைக்காததாம்!

7. இதனால், இளமையில் இனிமை இல்லை என்பர்!

8. "இதன் அழகு முகத்தில் தெரியும்" என்பது கலியுகத்துக்குப் பொருந்துமோ? தலைகீழாக வருகின்றது.

22. எதிலும் "உத்தி" களைக் கையாள இது கிட்டும். குழம்பியுள்ளது.

29. இறுதிப் பேறு. குழம்பியுள்ளது.

33. நம் ஜனநாயக சோஷலிச குடியரசு நாடு, பத்திரிகைச் சுதந்திரத்தின் முதுகில் அடிக்கடி வைக்கும் கை.

39. இதன் அனுஷ்டிப்பு ஆரோக்கியமானது. குழம்பியுள்ளது.

40. முதல் தமிழ் மாதம். குழம்பியுள்ளது.

44. இலங்கையில் இது ஆக்கப்படுவதற்கு தமிழராய்ப் பிறந்த குற்றம் ஒன்றே போதும். தலைகீழாக உள்ளது.

50. காவல் இராச்சியத்தில், காதல் இராச்சியத்துக்கு இவர். தலைகீழாக வருகிறது.

51. பாவத்தைத் தொலைக்க இங்கு யாத்திரை செல்வர்.

54. சங்கமிக்கும் இடம். தலைகீழாக

போட்டி இல:02 இல் சரியான விடை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்ட சாலி:-

**ந. கவிதா**
**இல: 143A, மன்னார் வீதி,**
**குருமண்காடு, வவுனியா.**

*(இவருக்கான பரிசுத் தொகை அனுப்பிவைக்கப்படும்)*

*பாராட்டு பெறுவோர்:*

*1. ச. ரஜீவ்*
*இல: 170 ஸ்ரேசன் வீதி, வவுனியா.*

*2. அ. சுதர்சன்*
*7ம் ஒழுங்கை, கல்லடி, மட்டக்களப்பு.*

*3. மா. செல்லத்துரை*
*இல: 90 வித்தியாலயம் வீதி, திருமலை.*

*4. எஸ். முப்லிஹா ஸறாஸ்*
*இல: 301, எம்.வி றோட், அக்கரைப்பற்று.*

*5. எஸ்.எம். துரைராஜ்*
*சின்னக்கடை, மன்னார்.*

### குறுக்கெழுத்துப்போட்டி 02க்கான சரியான விடைகள்

#### இடமிருந்து வலம்

| | |
|---|---|
| 1. நோர்வே | 38. அமுது |
| 5. அமெரிக்கா | 42. மகுடம் |
| 10. சக்களத்தி | 46. வாக்கு |
| 17. தறி | 50. கோபம் |
| 19. கமம் | 55. தும்மல் |
| 23. கதை | 60. விம்பம் |
| 26. கோல் | 73. கிண்டல் |
| 31. ஓம் | 78. ஆம்பல் |
| 34. தோள் | |

#### மேலிருந்து கீழ்

| | |
|---|---|
| 1. நோக்கம் | 34. தோடம்பழம் |
| 2. அமர்க்களம் | 39. முதுகு |
| 3. வேசம் | 42. ஆரம்பம் |
| 5. அதிகம் | 45. மனைவி |
| 6. மெத்தை | 46. வால்மீகி |
| 8. குறிக்கோள் | 58. மணல் |
| 9. காதல் | 62. பணம் |
| 31. ஓது | |

# இந்த நூற்றாண்...........

12ம் பக்கம் தொடர்ச்சி

பணம் கிடைத்து விடுகிறது. சிலர் இதையே தொழிலாக ருசி கண்டு விட்டனர்.

சில புரோக்கர்கள் தங்கள் தோட்ட அதிகாரிகளின் மூலமாக அல்லது தோட்ட உத்தியோகத்தர்கள் மூலமாகவோ வீடுகள், உறவினர்கள் நண்பர்கள் தெரிந்தவர்கள் வீடுகளுக்குத் தேவைப்படும் வேலைக்காரர்களின் வெற்றிடங்களைத் தெரிந்தும் நகரங்களில் வேலை செய்பவர்களிடமும் வீடுகளுக்கு ஆட்கள் தேவை என்பதையும் தெரிந்து கொண்டு ஆள் பிடிக்கும் தங்களின் கைங்கரியங்களைத் தொடர்கின்றனர்.

தோட்ட நிர்வாகத்திடம் இதன் மூலம் அற்ப சலுகைகளையும் கொடுக்கல் வாங்கல்களையும், நகரங்களில் சென்றால் தங்களுக்குத் தேவையான சலுகைகளையம் பெற்றுக் கொள்கின்றனர்.

சில பெற்றோர்கள் தாங்களே வேலைக்குச் செல்லாமல் தங்கள் பிள்ளைகள் எங்கு வேலை செய்கின்றார்களோ அங்கு சென்று மாதா மாதம் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை பணம் பெற்றுக் கொள்கின்றனர். பெரும்பாலான சிறுவர், சிறுமியர் நன்கு படித்துக்கொண்டிருந்த போதும் பெற்றோர்களின் விருப்பத்திற்கு இணங்கவே அனுப்பி வைக்கப்படுகின்றனர். இந்தச் சிறுவர் சிறுமியர்களோ அந்த வீடுகளில் வீட்டையும் முற்றத்தையும் பெருக்குதல், பாத்திரங்கள், உடைகள் கழுவுதல், முதியோர்களை பராமரித்தல், கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குதல் மற்றும் பல எடுபிடி வேலைகளை செய்யும் இவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது என்பதைப் பற்றி உணர வேண்டியவர்கள் உணர்வார்களா?

தீபாவளி, பொங்கல்,வருடப்பிறப்பு போன்ற விடுமுறை காலங்களில் இந்த இளம் வயது சிறுவர் சிறுமியர்கள் வீடுகளுக்கு பெற்றோர்களுடனோ, அல்லது புரோக்கர்களுடனோ திரும்பும் போது சிறுதொகை பணத்துடன் வேலை செய்யும் வீடுகளில் அவர்கள் கொடுக்கும் பாவித்த பழைய உடுதுணி வகைகளை பெருமையோடு நோனா, மாத்தியா கொடுத்தவைகள் என்று கூறும் போதும், சோதனைச் சாவடிகளில் தங்கள் பைகளில் உள்ள பழையவைகளை வெளியிலெடுத்துக் காட்டும் போது இந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் எந்தளவுக்குப் பழையனவாகிக் கொண்டிருக்கின்றன என்பதை தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

தற்போதெல்லாம் புரோக்கர்களைத் தேடி நகரத்தில் உள்ளவர்கள் நேரடியாக தோட்டங்களுக்குச் சென்றுதங்கள் வீடுகளில் உள்ள எடுபிடி வேலை வெற்றிடங்களுக்கு ஆள் பிடிக்கின்றார்கள். சிலர் தங்கள் வாகனங்களில் பிள்ளைகளை கூட்டிவந்து பெற்றோரிடம் காட்டிவிட்டு சில மணித்தியாலங்களில் கூட்டிச் சென்று விடுகின்றனர்.

கல்வியில் முன்னர் போல் இல்லாமல் மலையகம் முன்னேறிக் கொண்டுவரும் இந்த வேளையில் நவீன அடிமைகளாக தொடர்ந்தும் வாழவிரும்பும் குடும்பங்களும் புதிய வாழ்க்கையில் காலடியெடுத்து வைக்க வேண்டாமா. இந்தப் பிள்ளைகளினதும், சமூகத்தினதும் எதிர்கால நல்வாழ்வுக்கு பாதகமாயிருக்கும் பெற்றோர்களும், புரோக்கர்களும் இது பற்றி ஒரு கணம் சிந்திப்பார்களா

படிப்பகம்

www.padippakam.com



கண்ணோட்டம்

"நாம் மக்களுக்காகப் போராடுவதென்பது எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"

No 37/2 - 1/1, Wimalasara Road, Kalubowila, Dehiwala

## புதிய பேரினவாதக் கட்சி

சிங்களவரின் நலன்களுக்காக யாரும் தனிக்கட்சி தொடங்கினால் அது பிரச்சினைக்குரிய விடயமல்ல. ஆனால் தமிழ்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படக்கூடாது என்பதற்காகவும், இராணுவத்தீர்வே ஒரே மார்க்கம் என்றும் கட்சி கட்டுவோர்களைக் கண்டும் காணாமல் இருப்பது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

நாகரீகமான சமூகப் பிரிவினர் எவரும் இவர்களுக்குப் பின்னால் அணிதிரள மாட்டார்கள். மாறாக சமூக விரோதச் சக்திகளே இவர்களுக்குப் பின்னால் அணிதிரள்வார்கள். நாட்டில் போக்கிரிகளின் தொகை அதிகரித்து விட்டதால் இத்தகைய கட்சிகள் உருவாக உரமாகிவிட்டது.

ஐ.தே.க. இன் உள்ளும், சிறிலங்கா சு.க. உள்ளும் உள்ள சில சக்திகள் இந்த தீய சக்திகளை ஆதரிப்பதும், போஷிப்பதும் என்ற போக்கும் நிலவுகிறது.

சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் யுத்த மனோ நிலையோ, இனப் பெருமித உணர்வுகளோ பெரிதாக இல்லை என்றே கூற வேண்டும். யுத்தத்தின் சுமைகள் நேரடியாகவே அவர்கள் மீது ஏற்றப்பட்டதும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டதும், அதிகாரப் பரவலாக்கலுக்கான பிரச்சாரம் முன்னெடுத்துச் செல்லப்பட்டதும் பாரிய மன மாற்றத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருப்பதும் உண்மையே.

ஆனால், இந்தப் புதிய கட்சியினர் பௌத்த சிங்கள இனவாதத்தை வைத்து அடுத்த தேர்தல் களத்தில் இறங்கலாமென எண்ணுகிறார்கள் போலும். இருக்கும் இரண்டு கட்சிகளும் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்குத் திராணியற்றவை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று இல்லையென்ற அடிப்படையிலேயே களம் இறங்கியுள்ளன. இக் கட்சிக்குப் போர் வெறியர்களான ஒரு பகுதி பிக்குமாரின் ஆசீர்வாதமும் உண்டு. இப் பிக்குமாரின் தலையீடும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அரசியலில் அதிகரித்துள்ளது.

எஸ்.எல்.குணசேகர, மாதுளுவேவ சோபித தேரோ, திலக் கருணாரத்ன போன்றவர்களின் கருத்துக்களுக்கு இலங்கையின் பிரபல நாளிதழ்கள் அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுப்பதென்ற போக்கும் மேலோங்கிக் காணப்படுகின்றது.

இவர்களது பேச்சுக்களும், செயற்பாடுகளும் ஜனநாயகத்தினுள் அடக்கம் என்பது போல் அரசும் பிரதான எதிர்கட்சியும் நடந்து கொள்வதுதான் ஆச்சரியம் தருவதாக உள்ளது.

இந்த இனவாதிகளின் செயற்பாடுகளுக்கு இடமளிப்பதால், பிரிவினைக்கான அடிப்படைகள் உருவாக்கப்படுகின்றன. ஏனெனில் இவர்கள் பல இனங்களின் நாடு என்பதை நிராகரிக்கிறார்கள்.

நோர்வேயின் கொடியை எரித்து, தமிழ் முஸ்லீம் மக்களுக்கு விரோதமான கருத்துக்களை இவர்கள் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்ததும் இவர்களுக்கெதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டமோ அல்லது வேறு நடை முறைகளோ பின்பற்றப்படவில்லை. 1983 இன் வன்முறைகளைப் போன்ற குரூரங்களுக்கான திரை மறைவுச் சதி நோக்கங்களும் இவர்களுக்கு உண்டு.

தற்போது பஸ்களிலும், ரயில்களிலும் சாடை மாடையாகத் தமிழர்கள் தாக்கப்படும் நிலைமைகளும் அதற்கான துர்ச்சகுனமே.

சாதாரண மக்களிடம் அடங்கிக் கிடக்கும் இன வெறி உணர்வுகளை உசுப்பிவிடும் நப்பாசையே புதிய கட்சி.

ஏற்கனவே இருக்கும் கட்சிகளுடன் புதிதாகப் புற்றீசல்கள் போல் கிளம்பியிருக்கும் சங்கங்களையும், முன்னணிகளையும், பௌத்த அமைப்புக்களையும் உள்ளடக்கியே புதிய கட்சியை உருவாக்க எத்தனிக்கப்படுகிறது. யாருக்கும் கட்சி தொடங்க இருக்கும் உரிமையை நாம் கேள்விக்குள்ளாக்கவில்லை.

ஆனால், சமூகத்தின் ஒரு பகுதியினரான தமிழ் முஸ்லீம் மலையக மக்களுக்கு எதிராக கட்சி உருவாக்குவதே இங்கு பிரச்சினை.

இவர்கள் நோர்வேயின் தேசியக் கொடியை எரித்த போதும், பி.பி.சி. சிங்களச் சேவை நிருபரைத் தாக்கிய போதும், தமிழ் முஸ்லீம் மக்களுக்கு எதிராகத் தாறுமாறாகப் பேசிய போதும் அவர்கள் தடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இச் சக்திகள் இனங்களின் ஐக்கியத்தை வலியுறுத்துபவர்களையும், அதிகாரப் பரவலாக்கலை ஆதரிப்போரையும் விரோதிகளாகவே கருதுகின்றனர். ஜனநாயக வழியில் செயற்படும் தமிழ், மலையக, முஸ்லீம் கட்சிகளை, ஸ்தாபனங்களை இவை குரோதத்துடன்தான் பார்க்கின்றன. சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் இச்சக்திகளுக்கு ஆதரவு இல்லையென்பது சற்று ஆறுதலான விடயம்.

ஆனால் பௌத்த சிங்கள சமூகத்தில் உயர் மட்டத்தில் இருப்போரும் பிக்குகளின் ஒரு பகுதியினருமே ஆதரவளிக்கிறார்கள். மற்றப்படி சமூக விரோத சக்திகள், அதிகாரப் பரவலாக்கல் எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு இந்தச் சக்திகள் முறியடிக்கப்படுவதும் முக்கியம்.

# இந்த நூற்றாண்டிலும் வீட்டு அடிமைகளா.....

இன்றைய சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சனத்தொகையும், பொருளாதார தேவைகளும் அதிகரிப்பதானது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் இவர்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனையை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

நீண்டகால குத்தகைக்கு தனியார் கம்பனிகளிடம் பெருந்தோட்டங்கள் கைமாறிய தையடுத்து வேலையில்லாப் பிரச்சினையும் வறுமையும் இந்த பிள்ளைகளின் எதிர்காலத்தையே கேள்வி குறியாக்கியுள்ளது.

பெரும்பாலான குடும்பங்களில் பெற்றோர்கள் வறுமையின் நிமித்தமும்பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமையினாலும் தாழ்வுமனப்பான்மையும் இவர்கள் தங்கள் பிள்ளைகளை நகர்ப் புறங்களில் உள்ள பணக்கார குடும்பங்களின் வீடுகளில் வீட்டு வேலைக்காரர்களாகவும், வேலைக்காரியாகவும் அனுப்பிவைத்து விடுகின்றனர். இந்த பாதகமான செயல் இந்த சிறுவர், சிறுமியரின் எதிர்கால வாழ்க்கையை முடமாக்கி விட்டுள்ளது.

குறிப்பிட்ட பத்து வயது முதல் அதற்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமியர்கள் தங்களின் ஆரம்ப கல்வியைக் கூட முடிக்



காமல் பிறருக்கு சேவகம் செய்யும் அடிமைகளாக ஆக்கிவிடப்பட்டுள்ளனர். வறுமை நிலையில் வாழ்ந்த குடும்பங்கள் இவர்களின் ஊதியத்தினால் ஓரளவு கஸ்டத்

**குறிஞ்சி மைந்தன்**

தைப் போக்கிக் கொண்டாலும் இந்தச் சிறுவர், சிறுமியர்கள் நகர வாழ்க்கையில் உணவு உடை இருப்பிடம் வாகனங்களில் செல்லுதல் போன்ற மாயையினால் தங்களின் எதிர்காலம் பற்றிய சிந்தனையை தூண்டுவதற்கான சந்தர்ப்பத்தைக் கூட இழந்து விடுகின்றனர்.

இவர்களை நகர்புறங்களுக்கு கூட்டிச் செல்வதற்கென்றே தோட்டங்களில் புரோக்கர்கள் இருக்கின்றனர். பெற்றோர்களிடம் பண ஆசையைக் காட்டி ஏமாற்றி இந்த சிறுவர் சிறுமியர்களை பங்களாக்களில் வேலைக்கு அமர்த்திவிடுகின்றனர். கூட்டிச் செல்லும் போது அந்த பெற்றோர்களிடமே பணத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

பிள்ளைகளைக் கூட்டிச் சென்று உரிய இடத்தில் விட்டதும் அந்த வீட்டுக் காரரிடம் குறைந்தது ரூபா 500 வைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு ஒரே தடவையில் நான்கு ஐந்து சிறுவர் சிறுமியர்களைக் கூட்டிச் சென்றால் புரொக்கர்களுக்கு ஒரே நாளில் பெரும்

தொடர்ச்சி 11ம் பக்கம்

# யாழ்ப்பாணத்துக் ஹர்த்தால்

பச்சிலைப்பள்ளியில் நடைபெறும் சண்டைகளுக்குள் சிக்குண்ட மக்களை வெளியேற்றுவதற்கு அனுமதி கோரியும், மக்களைப் பணயம் வைத்து சண்டை நடப்பதாகக் குற்றஞ் சாட்டியும் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் பெயராலும் யாழ்ப்பாணத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பெயராலும் 13.04.2000 இல் யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் நடத்தப்பட்டது.



அகதிகளுக்கான ஐ.நா அதிகாரிகளும், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும், மருதங்கேணி சாவகச்சேரி பிரதேச செயலக அதிகாரிகளும் பச்சிலைப்பள்ளிக்குச் சென்று மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அத்தோடு மக்கள் வெளியேறுவதற்கு எங்காவது தடைகள் விதிக்கப்பட்டிருக்கிறதா? பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கான அவர்களது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கிறதா? என்றும் அவதானித்தனர்.

மக்கள் சோதனையிடப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். கணிசமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குத் தாமாக இடம்பெயர்ந்து விட்டனர். அல்லது அழைத்துச் செல்லப்பட்டு விட்டனர்.

ஆனால், யாழ்ப்பாணத்து ஹர்த்தால் இந்த அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்துமாறு கோராமல் பச்சிலைப்பள்ளி மக்களின் அவலத்தை தனது நலன்களுக்கோ அல்லது யாரோ திரைமறைவுச் சக்தியின் நலன்களுக்கோ பலியாக்க முற்படுவதாக வெளிப்படையாகத் தெரிகிறது.

1995 வரலாறு காணாத கட்டாய இடம்பெயர்வின் பின் சில சக்திகளின் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் மக்கள் பணியவேண்டிய நிலை காணப்படுகிறது. இங்கு மக்களுக்காகக் கண்ணீர் வடிப்பவர்களாக, உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு உள்ளானவர்களாகக் காட்டிக்கொள்பவர்கள் இங்கு யுத்த வெறிக்கு உடந்தையாகவே செயற்பட்டார்கள்.

பல்வேறு சோதனைச் சாவடிகள், போக்குவரத்துக் கஷ்டங்கள், தொழிலின்மை உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாமை, ஆகிய சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கும் மக்கள் தமிழ்-சிங்கள புதுவருடத்தை அமைதியாகக் கொண்டாடுவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கையில் வருடப்பிறப்பின் முதல் நாளன்று ஹர்த்தால் நடத்தியதன் மூலம் மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கக் கூடாது, மக்களின் மனதில் அமைதி நிலவக் கூடாது, சமாதான நம்பிக்கைகள் உருவாகக் கூடாது என்று சில சக்திகளின் நிலைப்பாடே இங்கு மேலோங்கியிருந்தது.

சிறிது சிறிதாக ஏற்பட்டுவரும் அபிவிருத்திகள், உட்கட்டமைப்பு வசதிகள் சீர்குலைக்கப்பட வேண்டும் என்பதும் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் விஜயம் செய்வதையும் இச்சக்திகள் அவ்வளவாக விரும்பவில்லை.

**மருணீக்கியன்**

யுத்தத்தின் கொடூரத்தினால் நன்கு களைத்துப்போயுள்ள மக்கள் அழிவு யுத்தத்தை அடியோடு வெறுக்கிறார்கள். செலுத்திய விலைக்கான பெறுபேறு கிடைக்கவில்லை. என்ற விரக்தியின் விழிம்பில் நின்றுகொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளான இன சமத்துவத்தை உறுதிப்படுத்தும் தீர்வு, சமாதானம், ஜனநாயகம் என்பனவே இன்று மக்களின் தணியாத தாகமாக இருக்கின்றன.

மக்களின் இந்த மனோநிலை மக்களைச் சொல்லி நடத்தும் தங்களின் வியாபாரத்துக்கு பாதகமாக அமையும் என்பது யுத்தத்

தொடர்ச்சி 07ம் பக்கம்

C.R.C PRESS அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்